342

...ட்டம்- 2016

# தமிழ்மொழியும் இலக்கியமும்

## தரம் - 7



பரீட்சை முன்னோடி
செயல்நூல்

தொகுப்பு
இ. க. சிவஞானசுந்தரம்,
M.A(cey), B.A(cey), P.G. Dip.in. Edu.,
ஆசிரியர் கல்வியல் ஆலோசகர்,(ஓய்வு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No: 894.811
Acc No 342

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

LENDING

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழியும் இலக்கியமும்

## புதிய பாடத்திட்டம்

# தரம் - 7

- பாடங்கள் விளக்கங்களுடன் தரப்பட்டுள்ளன.
- மேலதிகப் பாடல்கள், கதைகள், சிந்திக்கும் செய்திகள், வினாக்கள், விடைகள் கொண்டது.
- மொழித்திறன், பாடசாலை மதிப்பீட்டுப் பரீட்சை, மூன்று தவணைப் பரீட்சைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தொகுப்பு

**இ. க. சிவஞானசுந்தரம் M.A**

M.A (cey), P.G. Dip in Ed., B.A (cey)

ஆசிரியர் கல்விவள ஆலோசகர் (ஓய்வு)

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

வெளியீடு

**இனிய தென்றல் பப்ளிக்கேஷன்**

இல. 135, கனல் பாங் வீதி, கொழும்பு - 06

T.P No : 011-2360239, 072 - 2875625

Class No: 894.811
Acc No: 342

Digitlzed by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரப் பட்டியல்

நூல் : தமிழ்மொழியும் இலக்கியமும்
தரம் - 07

வகை : தமிழ்மொழி - செயல்நூல்

ஆசிரியர் : இ. க. சிவஞானசுந்தரம்,M.A
ஆசிரியர் கல்விவள ஆலோசகர் (ஓய்வு)

பதிப்புரிமை : ஆசிரியருக்கே
(இந்நூல் பதிவு செய்யப்பட்டது)

முதற் பதிப்பு : 01 தை 2016

வெளியீடு : இனிய தென்றல் பப்ளிக்கேஷன்,
இல. 135, கனல் பாங் வீதி,
கொழும்பு - 06.
தொலைபேசி :- 011-2360239, 072-2875625

கணனிப் பதிவு : திருமதி. எஸ்.தில்ருக் பிரசாந்த.
வெள்ளவத்தை, கொழும்பு - 06

நூல் அச்சமைப்பு : தேவி பிறின்ரஸ்
கொழும்பு - 13

ISBN 978 - 955 - 0254 - 47 - 7

Acc No

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

**"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"** என்று கூறினார் ஔவைப் பிராட்டியார். கல்வி என்பது உயர்பேறாகும். இலங்கை, கல்வி அமைச்சினால் கொண்டு வரப்பட்ட புதிய கல்வி மறுசீர் அமைப்புக்கு ஏற்ப **தமிழ்மொழியும் இலக்கியமும், தரம்** - 07. பாடநூல் 2016 ல் வெளியிடப்பட்டுள்ளது. அரச நூலில் காணப்படும் ஒவ்வொரு பாடங்களையும் எமது அன்புச் செல்வங்கள் இலகுவில் விளங்கிக் கொள்வதற்கு ஏற்றதாக இச் செயல்நூல் வெளியிடப்படுகின்றது. மாணவர்கள் தாமாகவே இயங்க வேண்டும். ஆசிரியர்கள் அவர்களுக்கு வழிகாட்டுபவர்களாகச் செயற்பட வேண்டும் என்ற புதிய கல்விச் சித்தாந்தங்களுக்கு அமைய மாணவர் விருப்புடன் ஈடுபடக் கூடிய கல்விச் செயற்பாடுகள் இந்நூலில் புகுத்தப் பட்டுள்ளன.

கல்வி என்பது அர்த்தமுள்ளதாகவும், வாழ்க்கையோடு இணைந்த தாகவும், மாணவர் உளங்கொளத் தக்கதாகவும் அமையவேண்டும். அவ் வகையில் பல்வேறு செயற்பாடுகள் மூலம் மாணவரை உற்சாகத்துடன் இயங்க வைக்க, வகுப்பறை, வீட்டுச் செயற்பாடுகளுக்கு உதவுமுகமாக இச் செயல்நூல் வெளிக் கொணரப்படுகிறது. புதிய மறுசீரமைப்புச் சித்தாந் தங்களைக் கற்ற, கற்பித்த, மதிப்பிட்ட அறிவுடன்; பாட ரீதியான அறிவும் இந்நூலை இயன்றளவு மாணவரிடம் இருந்து உச்சப் பயன்பாட்டைப் பெறும் வகையில் தயாரிக்க எனக்கு உதவிற்று எனக் கூறலாம்.

இதுவரை காலமும் வெளியிடப்பட்ட தமிழ்மொழி சார்ந்த செயல் நூல்கள், வினாவிடைகள், ஆய்வுநூல்கள் என்பவற்றை உளமார விரும்பி ஏற்ற அன்பின் மாணவர் சமூகம், ஆசிரியப் பெருந்தகைகள் இந்நூலையும் வரவேற்று மகிழ்ந்து பெருமதிப்புத் தருவார்கள் என நிச்சயம் நம்புகிறேன்.

இந்நூலை விரும்பி ஏற்று வெளியீடு செய்த **"இனிய தென்றல் பப்ளிகேஷன்" கொழும்பு - 06.** நிறுவனத்தார், அச்சுப் பொறியில் அச்சேற்றி அழகுற நூல் வடிவாக்கிய **தேவி பிறின்ரஸ், கொட்டாஞ் சேனை.** உரிமையாளர், உறுப்பினர்கள், கணனியில் பொறித்து உதவிய **திருமதி. தில்ருக் பிரசாந்த கொழும்பு - 06.** அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்நூலை உருவாக்கம் செய்வதில் முக்கிய பங்கு வகித்த உசாத்துணை நூல் ஆசிரியர்களுக்கும், அந்நூல்கள் வெளியிட்ட நிறுவனத்தாருக்கும், இணையத்திற்கும் எனது சிரம் தாழ்ந்த நன்றிகள் உரித்தாகுக.

**மாணவர்கள் கலையாத கல்வியும், குலையாத வாழ்வும் பெற்று வியத்தகு முன்னேற்றம் அடைய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.**

ஆசிரியர்,

**இ.க. சிவஞானசுந்தரம், எம்.ஏ**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


மொழிவளம்......01 - 11

01. அந்தரே கதைகள்...... 12 - 19

02. ஆறு......20 - 28

03. கடமை......29 - 43

04. காட்டு விலங்குகளைக் காப்போம்......44 - 53

05. யாம் ஐவேம்...... 54 - 60

06. காந்தியடிகள் கடிதம்......61 - 67

07. தமிழ் தட்டச்சின் தந்தை......67 - 74

08. செந்தமிழ் போற்றிய சேரன்...... 75 - 81

09. சிலேடை......82 - 88

10. பென்சிலின் கதை......89 - 98

11. உயிர் காக்கப் பயிர் காப்போம்......99 - 107

12. ஈசன் உவக்கும் இன்மலர்......108 - 115

13. கடலும் கிணறும்......116 - 127

14. கருங்காற் குறிஞ்சி...... 128 - 141

15. படைப்பின் இரகசியம்...... 142 - 151

16. பொய் சொல்லாதே......152 - 160

17. வீழ்ந்த ஆலமரம்...... 161 - 171

18. பிள்ளை அழுத கண்ணீர்...... 172 - 180

19. வெண்ணிலாவே......181 - 192

20. ஒழுக்கம் உடைமை...... 193 - 204

21. பாரதியார் பாடிய புதிய ஆத்திசூடி...... 205 - 212

வகுப்பறை வீட்டுவேலை, தவணை மாதிரிப் பரீட்சை.. 213 - 258

பயிற்சிகளுக்குரிய, பரீட்சைக்குரிய விடைகள்...... 259 - 273



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிவளம்

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே" (வெற்றிவேற்கை)

## எழுத்தியல்

தமிழ் மொழியில் உள்ள எழுத்துக்கள் இருவகைப்படும்.

அ. முதலெழுத்துக்கள்
ஆ. சார்பெழுத்துக்கள்

### I. முதலெழுத்துக்கள்

அ. உயிரெழுத்துக்கள் - 12

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ - 12 எழுத்துக்கள்.

ஆ. மெய்யெழுத்துக்கள் - 18

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்

ஆகவே முதலெழுத்துக்கள் (12 + 18) - 30 எழுத்துக்கள்.

### II. சார்பெழுத்துக்கள்

அ. உயிர்மெய் எழுத்துக்கள் - 216

பன்னிரண்டு உயிரெழுத்துக்களுடனும், 18 மெய் எழுத்துக்களுடனும் தனித் தனி கூடிப் பிறக்கும் எழுத்துக்கள் உயிர்மெய் எழுத்துக்களாகும்.

| | | |
|---|---|---|
| க் + அ = க | ப் + உ = பு | ன் + ஆ = னா |
| ச் + அ = ச | வ் + இ = வி | ள் + எ = ளெ |
| ம் + இ = மி | வ் + அ = வ | ன் + உ = னு |

216 எழுத்துக்கள் உயிர்மெய் எழுத்துக்கள் ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. ஆய்த எழுத்து - 01

இவை இரண்டு எழுத்துக்களுக்கு இடையில் வரும் - ∴

உ-ம்: அ∴து, இ∴து எ∴கு


தமிழ் நெடுங்கணக்கிலுள்ள எழுத்துக்களின் தொகை

| | |
|---|---|
| உயிர் எழுத்துக்கள் | 12 |
| மெய் எழுத்துக்கள் | 18 |
| உயிர்மெய் எழுத்துக்கள் | 216 |
| ஆய்த எழுத்து | 01 |
| | 247 எழுத்துக்கள் |

## மூவிடப் பெயர்கள்

- இடம் என்பது பொருள்கள் வழங்கப்படும் தானமாகும்.
- அது தன்மை, முன்னிலை, படர்க்கை என மூவகைப்படும்.


அ. தன்மை : பேசுவோனின் இடம் தன்மை எனப்படும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. முன்னிலை : பேசுவோனுக்கு முன்நின்று கேட்போனுக்குரிய இடம் முன்னிலை எனப்படும்.




இ. படர்க்கை : பேசப்படும் இடம் படர்க்கை எனப்படும்.




## ஒத்த பொருட் சொற்கள்

தரப்பட்ட சொல்லின் பல்வேறுபட்ட பொருளை அல்லது ஒரே பொருளைத் தருகின்ற வேறு சொற்கள் ஒத்த சொற்களாகும்.

அகிலம் - ஞாலம், பூமி, பார்

அம்பு - வாளி, சரம், கணை

அடவி - காடு, வனம், கானகம்



"ஆனந்தம் அமைதியில்தான் பிறக்கின்றது"
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரமியம் - நிலாமுற்றம், உப்பரிகை

ஆகாயம் - வானம், விசும்பு, அண்டம்

ஆழி - கடல், சாகரம்

ஆதரவு - அன்பு, அரவணைப்பு

இன்பம் - மகிழ்ச்சி, உவகை, களிப்பு

இலக்கு - குறி, குறிக்கோள்

இறும்பூது - பெருமிதம்

ஈகை - தருமம், கொடை

ஈரம் - இரக்கம், ஈரமாதல்

உரத்து - சத்தமாக, பலமாக

உத்தரவு - அனுமதி

ஊறு - இடையூறு, கெடுதல், துன்பம்

எழில் - வனப்பு, அழகு

ஏமம் - இன்பம், மயக்கம்

ஐயம் - பிச்சை, சந்தேகம்

ஒலி - சத்தம், அரவம்

ஒக்கல் - உறவினர், சுற்றம்

ஒப்படைத்தல் - கையளித்தல், கொடுத்தல்

ஔடதம் - மருந்து

ஔதாரியம் - பெருங்கொடை

கடினம் - வன்மை

சத்தியம் - உண்மை, வாய்மை

சக்கரம் - ஆழி, சில்லு

சால்பு - நற்குணம், மேன்மை

ஞானம் - அறிவு, தெளிவு

வளை - புற்று, பொந்து

பொறை - பொறுமை, அடக்கம்



“புகழ்ந்தாரைப் போற்றி வாழ்”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்ப் பொருட் சொற்கள்

கொடுக்கப்பட்ட சொல்லின் எதிர்ப்பொருளைக் காட்டிவரும் சொற்கள் எதிர்ப்பொருட் சொற்கள் என அழைக்கின்றோம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அறம் | - | மறம் | உபகாரம் | - | அபகாரம் |
| அண்மை | - | சேய்மை | உருவம் | - | அருவம் |
| அன்பு | - | வன்பு | உயர்வு | - | தாழ்வு |
| அகங்கை | - | புறங்கை | உறவு | - | பகை |
| அழுகை | - | சிரிப்பு | உலோபி | - | வள்ளல் |
| அமுதம் | - | ஆலம் | ஊடல் | - | கூடல் |
| ஆக்குதல் | - | அழிக்குதல் | எளிது | - | அரிது |
| ஆதி | - | அந்தம் | எழுச்சி | - | வீழ்ச்சி |
| ஆக்கம் | - | கேடு | ஏழை | - | செல்வன் |
| ஆத்திகன் | - | நாத்திகன் | ஏற்றம் | - | இறக்கம் |
| ஆக்கல் | - | அழித்தல் | ஏகம் | - | அநேகம் |
| ஆதரவு | - | அநாதரவு | ஐது | - | செறிவு |
| இகம் | - | பரம் | ஐயம் | - | தெளிவு |
| இம்மை | - | மறுமை | ஒழுக்கம் | - | இழுக்கம் |
| இகழ் | - | புகழ் | ஒற்றுமை | - | வேற்றுமை |
| இழிவு | - | உயர்வு | ஒறுப்பு | - | மலிவு |
| இசை | - | வசை | ஒளி | - | இருள் |
| இல்லறம் | - | துறவறம் | கலக்கம் | - | தெளிவு |
| இளமை | - | முதுமை | கனவு | - | நனவு |
| ஈதல் | - | ஏற்றல் | காடு | - | நாடு |
| உறக்கம் | - | விழிப்பு | காய் | - | கனி |
| உற்றார் | - | அற்றார் | குணம் | - | குற்றம் |
| உதயம் | - | மறைவு | குரு | - | சீடன் |
| உத்தமம் | - | அதமம் | கூடுதல் | - | பிரிதல் |



"உத்தமனாய் இரு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்ப்பாற் சொற்கள்

மக்கள் ஆண், பெண் என இருபாலாராக வகுக்கப்படுவர். அவர்களுள் ஆண்கள் விசேட சிறப்பு நோக்கி வெவ்வேறு ஆண்பாற் பெயர்களால் அழைக்கப்படுவர்.

இதேபோன்று பெண்களும் அவ்வவற்றிற்கு ஒத்த பெண்பாற் பெயர்களால் அழைக்கப்படுவர். இவை **எதிர்ப்பாற் சொற்கள்** எனப்படும்.

அரசன் - அரசி
அடியான் - அடியாள்
அழகன் - அழகி
அப்பன் - அம்மை
ஆயன் - ஆய்ச்சி
ஆடவன் - பெண்டு
ஆடூஉ - மகடூஉ
ஆடவர் - பெண்டிர்
ஆண்டவன் - ஆண்டவள்
இடையன் - இடைச்சி
இந்திரன் - இந்திராணி
இரவலன் - இரவலள்
ஈசன் - ஈசுவரி
உத்தமன் - உத்தமி
உழவன் - உழத்தி
ஊரான் - ஊராள்
எசமான் - எசமாட்டி
ஐயன் - ஐயை
கனவான் - கனவதி
காமுகன் - காமுகி

காவற்காரன் - காவற்காரி
கிழவன் - கிழவி
குறவன் - குறத்தி
குமரன் - குமரி
குரு - குருத்தினி
கூனன் - கூனி
கோமான் - கோமாட்டி
கொல்லன் - கொல்லிச்சி
கோபாலன் - கோபிகை
சகோதரன் - சகோதரி
சிறுவன் - சிறுமி
சீமான் - சீமாட்டி
செட்டி - செட்டிச்சி
சேவகன் - சேவகி
தட்டான் - தட்டாத்தி
தச்சன் - தச்சிச்சி
தமிழன் - தமிழிச்சி
தனவான் - தனவதி
தாசன் - தாசி
திருவாளன் - திருவாட்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திருடன் | - | திருடி | பாக்கியவான் | - | பாக்கியவதி |
| தேவன் | - | தேவி | பிரியன் | - | பிரியை |
| தோழன் | - | தோழி | பெருமான் | - | பெருமாட்டி |
| நம்பி | - | நங்கை | மாமன் | - | மாமி |
| நிபுணன் | - | நிபுணை | பொன்னன் | - | பொன்னி |
| பகவான் | - | பகவதி | பூரணன் | - | பூரணி |
| பண்டிதன் | - | பண்டிதை | புனிதன் | - | புனிதை |
| பத்தா | - | பத்தினி, பதிவிரதை | மித்திரன் | - | மித்திரை |
| பரிசோதகன் | - | பரிசோதகி | மறவன் | - | மறத்தி |
| பாங்கன் | - | பாங்கி | விருத்தன் | - | விருத்தள் |
| பின்னவன் | - | பின்னவள் | வலைஞன் | - | வலைச்சி, வலைஞி |
| நாயகன் | - | நாயகி | வணிகன் | - | வணிகச்சி |

## ஒரு பொருள் பன்மொழி

ஒரு பொருளைக் குறிக்கின்ற பல சொற்கள் **ஒரு பொருள் பன்மொழி** எனப்படும்.

அழகு - வடிவு, வனப்பு, சுந்தரம், அணி, கவின், எழில், முருகு

அந்தணர் - பிராமணர், வேதியர், குரு, மறையவர்

அரசன் - அண்ணல், காவலன், கொற்றவன், கோ,பதி, வேந்தன், மன்னன், இறை

ஆசிரியன் - ஆசான், குரவன், குரு, தேசிகன், உபாத்தியாயன்

ஆபரணம் - அணி, ஆரம், நகை, மணி, இழை, பூண்

ஆற்றல் - வலிமை, வல்லமை, உரம், சக்தி

இன்பம் - உவகை, உவப்பு, களிப்பு, மகிழ்ச்சி, சந்தோஷம்

இரத்தம் - கறை, குருதி, உதிரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு - அல், இராத்திரி, கங்குல், நிசி

உடம்பு - உடல், சரீரம், மெய், மேனி, யாக்கை

உதயம் - புலரி, வைகறை, விடியல்

உண்மை - சத்தியம், மெய், ஆணை, வாய்மை

ஒளி - பிரகாசம், சோதி, கதிர், சுடர், காந்தி

கடவுள் - தெய்வம், ஆண்டவன், ஆதி, இறைவன், ஈசன், ஏகன், முதல்வன்

களிப்பு - ஆனந்தம், உவகை, உவப்பு, மகிழ்ச்சி

காற்று - பவனம், மாருதம், ஊதை, வாளி

குற்றம் - குறை, கேடு, ஏதம், மாசு, ஆசு, களங்கம், தவறு, பிழை, புரை, வசை, வடு, இழுக்கு

குழந்தை - குழவி, பிள்ளை, சிசு, மகவு, சேய்

சந்திரன் - உடுபதி, அம்புலி, நிலவு, பிறை, மதி, சோமன், திங்கள்

சிங்கம் - அரி, கேசரி, சீயம், அளி

சூரியன் - பரிதி, இரவி, பகலவன், தினகரன், வெய்யோன், அருக்கன்

பாம்பு - அரவம், சர்ப்பம், கட்செவி, பணி, மாசுணம்

பூமி - அகிலம், காசினி, குவலயம், ஞாலம், தரணி, பார், புவனம், புவி, பூமண்டலம், வையம்

பெண் - அணங்கு, அரிவை, காரிகை, கோதை, தையல், நாரி, மாது, பாவை, பூவை, மங்கை, மடந்தை, வனிதை, மகடூஉ

பொய் - இழுக்கு, தப்பு, தவறு, படிறு, கிருத்திரமம்

மகன் - குமாரன், சுதன், தனயன், புத்திரன், புதல்வன், மைந்தன், மதலை

குதிரை - பரி, அசுவம், மா, புரவி, கந்துகம்

மேகம் - முகில், கார், கொண்டல்

வீறு - பெருமை, வேகம், உயர்ச்சி, வெற்றி

வீடு - அகம், இல்லம், மனை, உறையுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொகைப் பெயர்கள்

பல சொற்களை ஒரு சொல்லால் கூறுதல் **தொகைப் பெயர்கள்** எனப்படும்.

| | | |
|---|---|---|
| இருதிணை | - | உயர்திணை, அ∴றிணை |
| இருமுதுகுரவர் | - | தாய், தந்தை |
| இருமை | - | இம்மை, மறுமை |
| இருசுடர் | - | சூரியன், சந்திரன் |
| இருநிதி | - | சங்கநிதி, பதுமநிதி |
| இருவினை | - | நல்வினை, தீவினை |
| முப்பொறி | - | மனம், வாக்கு, காயம் |
| முத்தமிழ் | - | இயல், இசை, நாடகம் |
| முத்தொழில் | - | படைத்தல், காத்தல், அழித்தல் |
| முச்சுடர் | - | சூரியன், சந்திரன், அக்கினி |
| மூவேந்தர் | - | சேரர், சோழர், பாண்டியர் |
| நாற்படை | - | தேர், யானை, குதிரை, காலாள் |
| நாற்பயன் | - | அறம், பொருள், இன்பம், வீடு |
| ஐந்திணை | - | குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை |
| ஐம்பூதம் | - | நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் |
| ஐம்புலன் | - | சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் |
| ஐம்பொறி | - | மெய், வாய், கண், மூக்கு, செவி |
| ஐம்பெரும் காப்பியம் | - | சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி |
| பஞ்சமாபாதகம் | - | கொலை, களவு, பொய், கள்ளுண்டல், விபச்சாரம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல சொற்களுக்கு ஒரு சொல் பிரயோகம்

பல சொற்களால் விளக்கிக் கூறுவதை ஒரு சொல்லால் கூறுதல் **பல சொற்களுக்கு ஒரு சொல் பிரயோகம்** எனப்படும்.

| | | |
|---|---|---|
| அறுபதாவது ஆண்டில் செய்யும் விழா | - | வைரவிழா (மணிவிழா) |
| அரங்கேற்ற முன் சரி பிழை பார்த்தல் | - | ஒத்திகை |
| ஆதரிப்பவர் எவருமற்றவன் | - | அனாதை |
| இறைவன் இல்லை என்று வாதிடுபவன் | - | நாத்திகன் |
| இறந்த வீரனின் பெயரையும் புகழையும் பொறித்து நடும் கல் | - | நடுகல் |
| இளம் பயிருக்கு நீர்பாய்ச்சுதல் | - | கண் கழுவுதல் |
| இல்லையென்று கூறாது வாரி வழங்குபவன் | - | வள்ளல் |
| இருபத்தைந்தாவது ஆண்டில் செய்யும் விழா | - | வெள்ளிவிழா |
| உப்பின்றிச் சமைத்த பச்சையரிசிச் சோறு | - | அவிசு |
| உலகின் முடிவு காலம் | - | ஊழி |
| ஐம்பதாவது ஆண்டில் செய்யும் விழா | - | வெள்ளி விழா |
| ஒரே நேரத்தில் எட்டு விடயங்களை அவதானிப்பவன் | - | அட்டாவதானி |
| தனக்கே சொந்தமாக முழுப்பொருளையும் அனுபவித்தல் | - | ஏகபோகம் |
| தானே தன்னைப் பற்றி எழுதுவது | - | சுயசரிதை |
| குளக்கரையில் பசு, எருது போன்றவற்றிற்கு உதவியாக நடப்பட்டிருக்கும் குற்றி | - | ஆதீண்டு குற்றி |
| முனிவர்கள் தங்குவதற்காக இலை தளைகளால் வேய்ந்த குடிசை | - | பன்னசாலை |
| நம்பமுடியாத புனைந்த கதை | - | கட்டுக்கதை |



“துன்பங்கள் மனதை வலிமையாக்கும்”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சிற்றரசர் பேரரசர்களுக்குக் கொடுக்கும் காணிக்கை | - | திறை |
| பொருளைத் தேடி ஈயாது வைத்திருப்பவன் | - | உலோபி |
| முனிவர்கள் வசிக்கும் இடம் | - | ஆச்சிரமம், தபோவனம் |
| நடனம் போன்றவற்றை முதன்முதலில் சபையில் நடித்துக்காட்டுதல் | - | அரங்கேற்றுதல் |
| வைத்தியனின்றித் தானே நோய்க்குச் செய்யும் மருந்து | - | கைம்மருந்து |

## பெயர், வினை சொற்கள்

தமிழ்மொழிச் சொற்கள் பல பெயராகவும், வினையாகவும் நின்று பொருள் உணர்த்துகின்றன.

| சொல் | பெயர் | வினை |
|---|---|---|
| அணி | ஆபரணம் | அலங்கரி |
| அரை | பாதி | அரைத்தல் |
| அலை | கடல்அலை | அலைக்கழிதல் |
| ஆறு | வழி | இளைப்பாறு |
| உடு | நட்சத்திரம் | தரித்தல் |
| ஓடு | கூரை ஓடு | ஓடுதல் |
| குடி | குடும்பம் | பருகுதல் |
| திரி | விளக்குத்திரி | சுற்றித்திரிதல் |
| வை | வைக்கோல் | வைத்துவிடு |
| செல் | கறையான் | போ |
| தை | மாதம் | தைத்தல் |




"நல்ல நூல் போலச் சிறந்த நண்பன் வேறில்லை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. அந்தரே கதைகள்



நாடோடிக் கதை மன்னன் அந்தரே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலகுப் பரீட்சை - 1

# அந்தரே கதைகள்



01. கீழே தரப்பட்டுள்ள பொருத்தமற்ற சொல்லின் கீழ்க் கீறிடுங்கள்.

அ. ஒளி, சோதி, வெளிச்சம், பரிதி, பிரகாசம்

ஆ. உடல், சரீரம், மெய், இழை, யாக்கை

இ. அகிலம், காசினி, குவலயம், ஞாலம், கோதை

ஈ. புத்திரன், புதல்வன், அசுவம், தனயன், மைந்தன்

உ. ஆனந்தம், ஞாலம், உவகை, களிப்பு, மகிழ்ச்சி

ஊ. தினகரன், அரவம், பரிதி, வெய்யோன், ஆதவன்



“நற்சிந்தனை படைத்த உள்ளத்தில் ஆசைநுழைவதில்லை”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுங்கள்.

அ. அடக்கி + ஆளும் = ..........................................

ஆ. சிவந்து + விட்டது = ..........................................

இ. மா + காய் = ..........................................

ஈ. வழிந்து + ஓடியது = ..........................................

உ. கடல் + அலை = ..........................................

03. கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்கு ஒத்த கருத்துச் சொற்களை எழுதுங்கள்.

அ. வையகம் ...........................  ஈ. ஞானம் ...........................

ஆ. கடினம் ...........................  உ. இன்பம் ...........................

இ. ஏளனம் ...........................  ஊ. இறும்பூது ...........................

04. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் உள்ள தடித்த எழுத்துச் சொற்களுக்கு எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுங்கள்.

அ. சிபிச் சக்கரவர்த்தி அறம் பொருந்த ஆட்சி செய்தான். ...........................

ஆ. பாரதியாரின் புகழ் உலகெங்கணும் பரவியது. ...........................

இ. ஒழுக்கம் உயிரினும் ஓம்பத்தக்கது. (பாதுகாக்கத் தக்கது). ...........................

ஈ. இராவணனின் வீழ்ச்சி கண்ட அசுரர்கள் வேதனை அடைந்தனர். ...........................

உ. குழந்தையின் அழுகை கேட்ட தாய் இரங்கினாள். ...........................



"உண்மையை நேசி பிழையை மன்னித்துவிடு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

05. கீழே கட்டத்துள் தரப்பட்டுள்ள பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பலா | பழி | காளை | காலை | மலை | துலா | மாலை |

அ. ................ மாட்டில் கட்டியிருந்த சதங்கை ஒலி கேட்டது.

ஆ. .......................... எழுந்தவுடன் படித்தல் நல்ல பழக்கமாகும்.

இ. மா, ...................., வாழை முக்கனிகளாகும்.

ஈ. தேயிலை ...................... நாட்டில் செழித்து வளரும் பயிராகும்.

உ. கிணற்று நீரைத் ........................ கொண்டு இறைத்தேன்.

ஊ. பிறர்மீது வீண் ................ சுமத்துதல் எமக்குப் பொல்லாங்கையே ஏற்படுத்தும்.

எ. காலையும் ....................யும் கடவுளைத் தொழுவோம்.

06. கீழே தரப்பட்ட ஓரெழுத்துச் சொற்களுக்கான ஒத்தகருத்துச் சொற்கள் எழுதுங்கள்.

அ. பூ ........................ ........................

ஆ. பா ........................ ........................

இ. தீ ........................ ........................

ஈ. மா ........................ ........................

உ. கோ ........................ ........................

07. பின்வரும் சொற்களை திருத்தமாகப் பிழையின்றி எழுதுங்கள்.

அ. கவிஞ்ஞன்........................ ஈ. வென்னீர் ........................

ஆ. வெய்யில் ........................ உ. ஈக்கு ........................

இ. முயற்ச்சி ........................ ஊ. தவக்கை ........................



"செயல், சொல்லைவிட உரத்துப் பேசும்"

Class No:
Acc No

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

08. சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாள மிடுங்கள்.

அ. சிங்கள மக்களுக்கு உவப்பானவன் நாடோடிக் கதை மன்னன் அந்தரே ஆவான். (.........)

ஆ. இலங்கைத் தேசாபிமானி ஆசிரியர்களில் எச்.எம்.பி.மொஹிதீன் அவர்களும் ஒருவராவர். (.........)

இ. அந்தரே சிறு வயதிலேயே சாமர்த்தியம் காட்டத் தொடங்காதவன். (.........)

ஈ. அந்தரே ஒரு நாள் தன் தந்தையை ஏமாற்ற முடிவு செய்தான். (.........)

உ. அந்தரேயின் தகப்பனார் மகனின் கேலியை உடனே புரிந்து கொள்ளவில்லை. (.........)

09. கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்கு எதிர்ப்பாற் சொற்களை எழுதுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| அ. அடியான் | ........................ | ஈ. திருடி | ........................ |
| ஆ. ஒருவன் | ........................ | உ. அழகன் | ........................ |
| இ. திருவாட்டி | ........................ | ஊ. ஆடூஉ | ........................ |

10. கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பாடப் புத்தகத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதுங்கள்.

அ. அந்தரே தன்னிடம் உள்ளவை மூன்று பணியாரங்கள் என்பதை எவ்வாறு நிரூபித்தான்?

..............................................................................................

..............................................................................................

ஆ. அந்தரேயின் தந்தையார் தனது திறமை மூலம் எவ்விதம் அந்தரே யைத் தலை குனிய வைத்தார்?

..............................................................................................

..............................................................................................

Class No: 894.811
Acc No 342



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. திருமண வீட்டில் எவ்வாறு இருக்க வேண்டும் என அந்தரேயின் தாயார் அவனிடம் கூறினார்?

....................................................................................................

....................................................................................................

ஈ. தாயின் வேண்டுகோளை மீறாது அந்தரே உத்தியைக் கையாண்டு எவ்விதம் திருமண வீட்டில் குறும்புத்தனம் செய்தான்?

....................................................................................................

....................................................................................................

உ. சீனி ரொட்டியை யாருக்குக் கொடுத்ததாக அந்தரே தாய்க்குப் பதிலளித்தான்?

....................................................................................................

....................................................................................................

ஊ. யார் அந்தப் பிள்ளை எனத் தாயார் கேட்டதற்கு அந்தரே எவ்விதம் பதிலளித்தான்?

....................................................................................................

....................................................................................................

11. பின்வரும் சொற்களுக்குரிய எதிர்க் கருத்துகளைத் தொடர்பு படுத்துங்கள்.

| | | |
|---|---|---|
| அ. | நியாயம் | குறைவான |
| ஆ. | மெச்சுதல் | பாவம் |
| இ. | பேதை | அநியாயம் |
| ஈ. | புண்ணியம் | இகழ்தல் |
| உ. | மிகுதியான | விவேகி |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களை முற்றுப்பெற்ற வாக்கிய மாக அமையுங்கள்.

(உ-ம்) மாடு பாய்ந்தது - மாடு வேலியால் பாய்ந்தது.

அ. மாடுகள் உழுதன.

..........................................................................................

ஆ. தம்பியோடு விளையாடினாள்.

..........................................................................................

இ. நான் சென்றேன்.

..........................................................................................

ஈ. காலையும் மாலையும் வணங்கு.

..........................................................................................

உ. பூனை வேகமாகத் துரத்தியது.

..........................................................................................

ஊ. கண்ணன் வெட்டினான்.

..........................................................................................

13. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் தடித்த எழுத்தில் தரப் பட்டுள்ள சொற்களுக்கு ஒத்த கருத்துள்ள சொல்லை அடைப்புக் குள் எழுதுங்கள்.

அ. இராமன் காடு ஏக வேண்டும் எனச் சிற்றன்னை கைகேயி கூறிய போது இராமன் மனமுவந்து அதனை ஏற்றான். (...............)

ஆ. ஆழி சூழ் உலகமெலாம் பரதனே ஆளவேண்டுமெனக் கைகேயி கூறிய போது அதனை இராமபிரான் ஏற்றான். (...............)

இ. தாரகை நடுவே தண்மதியென அதிபர் விளங்கினார்.(...............)

ஈ. 'ஐயம் இட்டு உண்' என்றார் ஔவைப்பாட்டி. (...............)



"புகழுக்காக நேர்மையை மறக்காதே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. இலங்கை எழில் மிக்க நாடாகும். (..............)

ஊ. ஏர் கொண்டு வயலை உழுது நெல் விதைத்தான். (..............)

எ. பழம் நழுவிப் பாலில் விழுந்தது. (..............)

14. வாக்கியங்களில் தரப்பட்டுள்ள தடித்த எழுத்துச் சொற்களுக்கான எதிர்க்கருத்துச் சொற்களை அடைப்புக்குள் எழுதுங்கள்.

அ. சூரிய **ஒளியின்** உதவியுடன் தாவரங்கள் உணவு தயாரிக்கின்றன. (..............)

ஆ. **முதுமை** அடைந்தோருக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும். (..............)

இ. **ஒழுக்கம்** உயிரைவிட ஓம்பப்படும். (..............)

ஈ. பாரி மன்னன் கொடை **வள்ளல்** ஆவான். (..............)

உ. உள்ளத்தின் **தெளிவு** உயர்வுக்கு வழிகாட்டும். (..............)

ஊ. எவ்விடயத்தையும் **தக்க** காலம் அறிந்து செயற்பட வேண்டும். (..............)

15. கீழே கட்டத்துள் தரப்பட்டுள்ள பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| தலைகுனிந்து | இன்பமாக | சாமர்த்தியம் | நழுவினான் | அபிப்பிராயம் |

அ. அந்தரே இளம் வயதிலேயே ...................... காட்டத் தொடங்கினான்.

ஆ. அப்பா! உங்கள் கையில் மூன்று பணியாரங்கள் இருக்கின்றன என்பது எனது ...................... என்றான் அந்தரே.

இ. மூக்கறுபட்ட அந்தரே தந்தையின் முன்பு ...................... நின்றான்.



"அறியாமையிலிருந்து பிறப்பதே அச்சம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. கல்யாண வீட்டில் கதைகள் சொல்லி நேரத்தை ............... கழிக்க எண்ணினர்.

உ. அந்தரே வீட்டில் இருந்து மெல்ல ................................

16. பின்வரும் பந்தியைப் பார்த்து உறுப்பமையப் பயிற்சிக் கொப்பியில் எழுதுங்கள்.


ஒருநாள் நண்பகல் கொளுத்தும் வெயிலில் ஒரு பிச்சைக்காரன் நொண்டி நொண்டி இரந்து திரிந்தான். பெரிய மாடி வீட்டின் முன்போய் ''அம்மா பசிக்குதே; தாயே பசிக்குதே'' என்று இரக்கம் தரும் குரலில் விளித்தான். அந்த வீட்டு முற்றத்திலே, மங்கையொருத்தி இரண்டு சடை நாய்களுக்கு பிஸ்கட், அப்பம், பொரியல் என்பன போட்டு விளையாடிக் கொண்டிருந்தாள். பிச்சைக்காரன் அந்தப் பெண்ணைப் பார்த்து ''அம்மா, பசி தாங்க முடியவில்லை, பழைய உணவு ஏதும் இருந்தாலும் தாருங்கள். நீங்கள் மகராசியாய் இருப்பீர்கள்'' என்று கூறினான். அப்போது அந்தப் பெண் ''இங்கே நில்லாதே, நின்று சத்தமிட்டால்...உஸ்'' என்று நாய்களை ஏவினாள். பிச்சைக்காரன் நடுங்கி ''அம்மா பிச்சை வேண்டாம்; நாயைப் பிடியுங்கள்'' என்று அலறினான். பின் அவன் அவ்விடத்தை விட்டு நீங்கிச் சென்றான்.

..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. ஆறு



'கல்லும் மலையும் குதித்து வந்தேன்
பெருங் காடும் செடியும் கடந்து வந்தேன்...'

19.1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறு



01. பின்வரும் சொற்களுக்குரிய எதிர்ப்பொருட் சொற்களை எழுதுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| அ. அன்பு | ........................ | ஊ. காய்தல் | ........................ |
| ஆ. இம்மை | ........................ | எ. ஈதல் | ........................ |
| இ. உறக்கம் | ........................ | ஏ. இகழ் | ........................ |
| ஈ. உத்தமம் | ........................ | ஐ. வாட்டம் | ........................ |
| உ. குறுக்கம் | ........................ | ஒ. உறவு | ........................ |



"நன்மை பெற நல்ல வழிகளைப் பின்பற்று"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. பின்வரும் சொற்களுக்குரிய எதிர்ப்பாற் சொற்களை எழுதுங்கள்.

அ. குமரன் ........................ ஊ. நம்பி ........................

ஆ. குணவான் ........................ எ. நிபுணன் ........................

இ. பண்டிதன் ........................ ஏ. நாயகன் ........................

ஈ. சேவகன் ........................ ஐ. இரவலன் ........................

உ. கூனன் ........................ ஒ. எசமான் ........................

02. பின்வரும் சொற்களுக்குரிய ஒத்த சொற்களை எழுதுங்கள்.

அ. திங்கள் ........................ ஊ. வதனம் ........................

ஆ. பூமி ........................ எ. இலக்கு ........................

இ. பகலவன் ........................ ஏ. உத்தரவு ........................

ஈ. வௌவுதல் அபகரித்தல்........ ஐ. நெருப்பு ........................

உ. பறவை ........................ ஒ. யானை ........................

03. கீழே தரப்பட்டுள்ள வாக்கிய இடைவெளிக்குப் பொருத்தமான இணைமொழிச் சொற்களின் கீழ்க் கீறிடுங்கள்.

அ. எந்த விடயத்தையும் .............. யோசித்தே முடிவு எடுக்க வேண்டும்.
1. இன்பதுன்பம் 2. கணக்குவழக்கு
3. ஆறஅமர 4. அக்கம்பக்கம்

ஆ. பிற உயிர்கள் மேல் ................ உடையவர்களாக வாழுதல் நன்று.
1. ஆதி அந்தம் 2. ஈவிரக்கம்
3. கண்ணீரும் கம்பலையும் 4. உயர்வுதாழ்வு

இ. கள்ளனை ............. எங்கும் நகர் காவலர்கள் தேடி அலைந்தார்கள்.
1. சந்துபொந்து 2. கங்குகரை
3. இன்பதுன்பம் 4. ஆதிஅந்தம்

ஈ. மனித வாழ்விலே ............... மாறிமாறி வருவது இயல்பே.
1. வாட்டசாட்டம் 2. வாடிவதங்கி
3. முட்டிமோதி 4. வாழ்வுதாழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. சிங்கம் காட்டிலே ................ இரை தேடித் திரிந்தும் உணவு கிடைக்காததால் சோர்ந்தது.

1. அக்கம்பக்கம்  2. பாரதூரம்
3. அல்லும்பகலும்  4. ஓட்டிஉலர்ந்து

ஊ. நோயாளிக்கு .................. காய்ச்சல் வந்ததால் மருத்துவர் அவரின் இரத்தத்தை ஆய்வுக்கு உட்படுத்தினார்.

1. கங்குகரை  2. வாடிவதங்கி
3. ஆறஅமர  4. அடிக்கடி

05. பின்வரும் பல சொற்களுக்கு ஒரு சொல் எழுதுங்கள்.

(உ-ம்) பொருளைத் தேடி ஈயாது வைத்திருப்பவன் ....உலோபி....

அ. ஆதரிப்பவர்கள் எவரும் அற்றவர் ..........................

ஆ. தன்னைப் பற்றித் தானே எழுதுவது ..........................

இ. இருபத்தைந்தாவது ஆண்டில் செய்யும் விழா ..........................

ஈ. இல்லையென்று கூறாது வாரி வழங்குபவன் ..........................

உ. அறுபதாவது ஆண்டில் செய்யும் விழா ..........................

ஊ. ஒரே நேரத்தில் எட்டு விடயங்களை அவதானிப்பவன்..................

06. பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் ( X ) எனவும் அடையாளமிடுங்கள்.

அ. சிவதாணுப் பிள்ளை ஆதிலெட்சுமி ஆகியோரின் மூன்றாவது மகன் தேசிக விநாயகம்பிள்ளை ஆவார். (.........)

ஆ. தேசிகவிநாயகம்பிள்ளை 1876 ஆம் ஆண்டு ஆடித் திங்கள் 27 ஆம் நாள் பிறந்தார். (.........)

இ. தேசிகவிநாயகம்பிள்ளை அவர்கள் 78 ஆவது வயதில் இறைபதம் அடைந்தார். (.........)

ஈ. 'மலரும் மாலையும்' என்ற கவிதை நூலை இயற்றியவர் தேசிகவிநாயகம்பிள்ளை அவர்களாவர். (.........)



"நிறை கண்டால் போற்று குறை கண்டால் தூற்றாதே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. தேசிகவிநாயகம்பிள்ளை அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தேரூரில் வாழ்ந்தார். (.........)

ஊ. 'மலரும் மாலையும்' என்ற கவிதை நூலில் ஆறு என்ற கவிதையும் இடம் பெற்றுள்ளது. (.........)

07. பின்வரும் சொற்களின் பொருள் புலப்பட்ட வாக்கியம் அமையுங்கள்.

அ. குதித்து : ..............................................................................
..............................................................................................

ஆ. தவழ்ந்து : ..............................................................................
..............................................................................................

இ. கண்ணறை : ..............................................................................
..............................................................................................

ஈ. அழல் (வெப்பம்) : ..............................................................................
..............................................................................................

உ. நேயம் (விருப்பம்) : ..............................................................................
..............................................................................................

ஊ. ஆழி (கடல்) : ..............................................................................
..............................................................................................

08. கீழே கட்டத்துள் தரப்பட்டுள்ள பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இறைவனை | சமவெளி | பொங்கிட | அலைந்து | வெப்பத்தை | குதித்து |

அ. ஆறு, கல்லும் மலையும் .................................. வந்தது.

ஆ. எல்லை விரிந்த ............. எங்கும் ஆறு இறங்கித் தவழ்ந்து வந்தது.



"கோபம் அன்பை அழிக்கிறது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. காய்ந்து கொண்டிருக்கின்ற நிலத்தின் ................... ஆறு ஆற்றியது.

ஈ. ஆறு, மணல் ஓடைகள் ..................... ஓடி வந்தது.

உ. அல்லும்பகலும் ஆறு .................... வந்தது.

ஊ. கடலாகிய .................... காண (வந்துசேர) ஆறு ஓடி வந்தது.

**09. பின்வருவனவற்றைத் தொடர்புபடுத்துங்கள்.**

| | |
|---|---|
| அ. யுத்தக் கெடுபிடியால் மக்கள் கூட்டங் கூட்டமாக | அலுத்துவிட்டன |
| ஆ. தமிழ் மொழியின் சிறப்புப்பற்றி பலபடப்பேச | வடிந்தது |
| இ. மரத்தில் ஏறிஏறி அவனது கால்கள் | நிறைந்துள்ளன |
| ஈ. மெல்லமெல்லத் தண்ணீர் | முடியும் |
| உ. சின்னச்சின்ன ஆசைகள் எம்மிடம் | வெளியேறினர் |

**10. கீழே தரப்பட்டுள்ள பிராணிகளுக்கான பொருத்தமான மரபுத் தொனியை (ஒலி) கட்டத்தினுள் இருந்து தெரிந்தெடுத்து எழுதுங்கள்.**

| | | | | |
|---|---|---|---|---|
| ஊளையிடும் | கனைக்கும் | குறுகுறுக்கும் | ரீங்காரம் செய்யும் | அலறும் |
| இரையும் | அகவும் | கொக்கரிக்கும் | பிளிறும் | முக்காரம் போடும் |

எருமை - எக்காரம்

| | | | | |
|---|---|---|---|---|
| அ. | கோழி | ......................... | ஊ. ஆந்தை | ......................... |
| ஆ. | யானை | ......................... | எ. மயில் | ......................... |
| இ. | வண்டு | ......................... | ஏ. நரி | ......................... |
| ஈ. | குதிரை | ......................... | ஐ. புறா | ......................... |
| உ. | தேனீ | ......................... | ஒ. எருது | ......................... |



"நல்லவன் நட்பைப் பொருள் கொடுத்தாவது கொள்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. பின்வரும் பிராணிகளின் ஆண், பெண் மரபுப் பெயர்களை எழுதுங்கள்.

| | ஆண் | பெண் |
|---|---|---|
| (உ-ம்) ஆடு | கடா | மறி |
| அ. யானை | ........................ | ........................ |
| ஆ. மாடு | ........................ | ........................ |
| இ. பூனை, நாய் | ........................ | ........................ |
| ஈ. நண்டு | ........................ | ........................ |
| உ. மான் | ........................ | ........................ |
| ஊ. குரங்கு | ........................ | ........................ |
| எ. கோழி | ........................ | ........................ |

12. கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருத்தம் கண்டு தொடர்பு படுத்துங்கள்.

| | |
|---|---|
| அ. கபடம் | அம்பு |
| ஆ. முகடு | அழகு |
| இ. வண்ணம் | துன்பம் |
| ஈ. கலி | உச்சி |
| ஊ. சரம் | வஞ்சனை |

13. பின்வரும் சொல்லுக்குப் பல பொருள் பயப்ப இடைவெளிகளை நிரப்புங்கள்.

| | | | |
|---|---|---|---|
| (உ-ம்) கவி | பாட்டு | புலவன் | குரங்கு |
| அ. அகம் | .................... | .................... | .................... |
| ஆ. இறை | .................... | .................... | .................... |



"கவலையற்ற எதிர்காலத்திற்குக் கல்வியே நிகழ்காலம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| இ. | பதி | ..................... | ..................... | ..................... |
| ஈ. | அரி | ..................... | ..................... | ..................... |
| உ. | வண்ணம் | ..................... | ..................... | ..................... |

14. கீழே தரப்படும் சொற்கள் பெயராகவும், வினையாகவும் நின்று பொருள் உணர்த்துவதை எழுதுங்கள்.

| | சொல் | பெயர் | வினை |
|---|---|---|---|
| (உ-ம்) | அலை | கடல் அலை | அலைக்கழிதல் |
| அ. | ஓடு | ......................... | ......................... |
| ஆ. | உடு | ......................... | ......................... |
| இ. | தை | ......................... | ......................... |
| ஈ. | முடி | ......................... | ......................... |
| உ. | திரி | ......................... | ......................... |
| ஊ. | செல் | ......................... | ......................... |
| எ. | அணி | ......................... | ......................... |

15. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களுக்கு கட்டத்துள் தரப்பட்டுள்ள நிறுத்தற் குறியீடுகளைப் பயன்படுத்துங்கள்.

| காற்புள்ளி | முக்காற்புள்ளி | முற்றுப்புள்ளி | வினாக்குறி | வியப்புக்குறி |
|---|---|---|---|---|
| , | : | . | ? | ! |

அ. தமிழ்நாட்டைச் சேர சோழ பாண்டியர் ஆண்டனர்

ஆ. மா பலா வாழை முக்கனிகளாகும்

இ. விளக்கவுரை இனிமை தரும் கரும்புகளைத் தொகையாக ஆறு ஒதுக்கிக் கொண்டு வந்தது

ஈ. கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை அவர்கள் பிறந்த ஆண்டு எது



"உயர்ந்தோரின் வாழ்க்கை வரலாறே உலக வரலாறு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. முத்தமிழ் இயல் இசை நாடகம் ஆகும்

ஊ. அருஞ்சொற்கள் செய்கலார் - செய்ய இயலாதவர் ஆற்றி - முயன்று

எ. கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை அவர்கள் குழந்தைகளுக்கான கவிதைகளைப் புனைவதில் கைதேர்ந்தவர்

ஏ. கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை அவர்கள் எப்போது சிவபதம் அடைந்தார்

ஐ. கடவுளே நான் முதலாம் பிள்ளையா

ஒ. கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை அவர்கள் குழந்தைச் செல்வம் என்னும் கவிதை நூலை இயற்றினார்

ஓ. அம்மா இவ்வளவு சூடாக இருக்கிறதே

ஔ. ஆழி இறைவன் எனக் கூறப்படுவது எது

**15. பின்வரும் கீறிட்ட சொற்களைப் பிழைதிருத்தி எழுதுங்கள்.**

அ. விவசாயிக்கு மம்பட்டி முக்கியமான கருவியாகும். (...............)

ஆ. நெருப்புச் சுட்டதால் பொக்களம் போட்டு விட்டது. (...............)

இ. செம்மனச் செல்வி புட்டு விற்றுச் சீவனம் செய்தாள். (...............)

ஈ. மழை பெய்ததால் இவ்வருடம் பனையில் நொங்கு அதிகம் காய்த்திருக்கிறது. (...............)

உ. முயற்ச்சி உடையவர்கள் ஒருபோதும் இகழ்ச்சி அடையார்கள். (...............)

ஊ. கோடாலியால் மரம் தறித்தபோது பிடி கழன்றது. (...............)

எ. வெத்திலை போடுவது உடலுக்குத் தீங்கை விளைவிக்கும். (...............)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. பின்வரும் இரட்டை மொழிகளுக்கான விளக்கச் சொல்லைத் தொடர்புபடுத்துங்கள்.

| | | |
|---|---|---|
| அ. | கலகல | துடித்தல் |
| ஆ. | விறுவிறு | உதிர்தல் |
| இ. | படபட | ஒலி |
| ஈ. | பொலுபொலு | துரிதம் |
| உ. | கமகம | ஒளிர்தல் |
| ஊ. | தகதக | வாசனை |

17. கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை பாடப் புத்தகத்தை அடிப்படையாகக் கொண்டு விடை எழுதுங்கள்.

அ. ஆறு எங்கே தவழ்ந்து வந்ததாகக் கூறுகின்றது?

..............................................................................................

ஆ. கண்ணறை, சீப்புகள் என்பவற்றில் ஆறு எவ்விதம் செயற்பட்டது?

..............................................................................................

இ. ஆறு சென்றுவந்த மூன்று இடங்களைத் தருக.

..............................................................................................

ஈ. அல்லும் பகலும் அலைந்து ஆறு யாரைக் காணவந்தது?

..............................................................................................

உ. ஆற்றுக்கு ஏன் நேரமில்லை எனக்கூறப்பட்டுள்ளது?

..............................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலகுப் பரீட்சை - 3

## கடமை

01. பின்வரும் சொற்றொடர்களைப் பூரண வாக்கியமாக எழுதுங்கள்.

அ. என் வாழ்க்கையில் மறக்கமுடியாத பல சம்பவங்கள் ....................

ஆ. பயத்தின் மிகுதியால் எனது .................. படபட என அடித்தது.

இ. குசேலர் வறுமையால் மிகவும் ......................

ஈ. யானைக் கூட்டம் விவசாயிகளின் நெற்பயிர்களை அழித்து...............

உ. திறந்த மனத்துடன் பிறருக்கு உதவி ........................

ஊ. வாகனம் ஓட்டுநர், சாலை விதிகளைக் ......................

02. பின்வரும் சொற்களைப் பொருள் புலப்பட வாக்கியங்களில் அமையுங்கள்.

(உ-ம்) பகைமை : ஒருவரோடும் பகைமை கொள்ளாது அன்புடன் உறவாட வேண்டும்.

அ. விலகுதல் : ..........................................................................
..........................................................................................

ஆ. சஞ்சலம் : ..........................................................................
..........................................................................................

இ. அமைதி : ..........................................................................
..........................................................................................

ஈ. பயனற்றது : ..........................................................................
..........................................................................................

உ. நிலையானது : ..........................................................................
..........................................................................................



"மகிழ்ச்சியும் உழைப்பும் வாழ்நாளை வளர்ப்பன"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊ. மிக மெலிந்து : ..................................................................
..................................................................................

03. பின்வரும் வாக்கியத்தில் உள்ள கோடிட்ட சொற்களில் உள்ள பிழைகளைத் திருத்தி அடைப்பினுள் எழுதுங்கள்.

அ. கொழும்புப் பட்டணம் பெரிய துறைமுகத்தைக் கொண்டது. (...............)

ஆ. ஒவ்வொருவரது வீட்டிலும் திருக்குறள் அவசரம் இருக்க வேண்டும். (...............)

இ. மனிதனின் உயிர் வாழ்க்கைக்கு ஊனும், உடையும் அவசியமானவை. (...............)

ஈ. கண்ணன் வீட்டு முத்தத்தில் மிளகாய் காய்ந்தது. (...............)

உ. மழை காலத்தில் மாடுகள் வைக்கல் நன்றாகச் சாப்பிடும். (...............)

ஊ. பரியாரி கொடுத்த மருந்து குழந்தையின் வயிற்றோட்டத்தை நிறுத்தியது. (...............)

04. அடைப்பினுள் உள்ள பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புங்கள்.

அ. அரசனின் ............. மீறி நடப்போர் தண்டிக்கப்படுவர்.
விலங்குகளில் பெரியதும் பலம் வாய்ந்ததும் ................. ஆகும்.
(ஆனை, ஆணை)

ஆ. மல்லிகைப் பூவின் ............. கமழ்கின்றது .............. போன போக்கெல்லாம் போவது வாழ்வில் துன்பத்தைத் தரும்.
(மனம், மணம்)

இ. அவன் பெற்றோரை இழந்து ............ நின்றான்.
போரின் வேகத்தைத் ........ சமாதானம் காண்பதே எமது இலக்காகும்.
(தணித்து, தனித்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. மனுநீதி கண்ட சோழ மன்னன் உயிர்கள் மேல் .......... மிக்கவன். ஏற்றம் பெற்ற மனிதன் ............. பற்றி எண்ணுவதில்லை.
(இறக்கம், இரக்கம்)

உ. இராமன் மர .................... தரித்துக் கானகம் சென்றான். கண்ணன் .............. வெண்ணெயைத் திருடினான். (உரி, உறி)

ஊ. ..................... காத்த கிளிபோல நாம் ஏமாற்றமடையக் கூடாது. ..................... வீட்டின் அழுகை ஓலம் மனத்தைக் கருக்கியது.
(இழவு, இலவு)

எ. ...................... க்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம். படை அதிகாரிகள் ................. பார்த்துத் தவறு செய்பவர்களைக் கண்டுபிடிக்கின்றனர். (உளவு, உழவு)

05. பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுங்கள்.

அ. புல் + விளைந்தது = ....................................

ஆ. பொன் + காலம் = ....................................

இ. ஞானம் + உதயம் = ....................................

ஈ. வரவேற்பு + அறை = ....................................

உ. வெண்மை + தாமரை = ....................................

06. பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுங்கள்.

அ. ஒன்றுண்டு = ....................................

ஆ. அடுப்பேற்றி = ....................................

இ. கண்ணயர்ந்து = ....................................

ஈ. நெற்களஞ்சியம் = ....................................

உ. கப்பற்பயணம் = ....................................

ஊ. பல்லாயிரம் = ....................................



"அறிவை மேலும் கூர்மையாக்கிக் கொள்ளப் பயன்படுவது கல்வி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. பின்வரும் இணைப்பிடைச் சொற்களான உம், ஆனால் என்ற சொற்களைப் பயன்படுத்திப் பின்வரும் தனிவாக்கியங்களைக் கூட்டு வாக்கியங்களாக மாற்றி எழுதுங்கள்.

(உ-ம்) கந்தவனம் நன்றாகப் படிப்பான் - கந்தவனம் பொய்பேச மாட்டான்.
கந்தவனம் நன்றாகப் படிப்பான் ஆனால் அவன் பொய் பேச மாட்டான்.

அ. நான் பயணம் போனேன் - தம்பி பயணம் போனான்.

..............................................................................................

ஆ. ஆசிரியர் வள்ளியைப் பாராட்டினார் - பெற்றோர் வள்ளியைப் பாராட்டினர்.

..............................................................................................

இ. கமால் வரலாறு படித்தான். - பாத்திமா புவியியல் படிக்கவில்லை.

..............................................................................................

ஈ. காகத்தின் கூட்டில் குயில் முட்டை இடும் - குயில் அடைகாக்க மாட்டாது.

..............................................................................................

உ. மாலினி பாடசாலை சென்றாள் - வரதன் பாடசாலை சென்றான்.

..............................................................................................

08. கீழே தரப்பட்டுள்ள பாடலை இசையோடு படிப்போம். தரப் பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

ஏழைச் சிறுமியர் மனப்புழுக்கம் (வேதனை)

நல்ல பண்டங்களைக் கண்டறியோம் - ஒரு
நாளும் வயிறார உண்டறியோம்
அல்லும்பகலும் அலைந்திடுவோம் - பசி
ஆற வழியின்றி வாடிடுவோம்.

அன்னப்பால் காணாத ஏழைகட்கு - நல்ல
ஆவின்பால் எங்கே கிடைக்கும், அம்மா!
என்னப்பா! யாம்படும் பாட்டையெல்லாம் - சென்று
யாரிடம் சொல்லி அழுவோம், அம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றிய கந்தை ஒரு முழமாம் - அதில்
தோன்றிய பீறலும் ஆயிரமாம்;
பற்றும் அழுக்கினைப் போக்கவென்றால் - உடை
பஞ்சு பஞ்சாகப் பறக்கும், அம்மா!

புண்ணும் சிரங்கும் நிறைந்ததம்மா! - அதில்
போட மருந்தும் கிடையாதம்மா
கண்ணில் உறக்கமும் இல்லை, அம்மா! - எங்கள்
கஷ்டம் அறிபவர் உண்டோ? அம்மா!

கவிமணி சி. தேசிக விநாயகம்பிள்ளை

பண்டம் - பொருள்; அன்னப்பால் - கஞ்சி; ஆ - பசு; பீறல் - கிழிவு; பற்றும் - பிடிக்கும்; வயிறார - வயிறு நிறைய.

**பாடலைப் படித்தபின் வினாக்களுக்கு விடை எழுதுக.**

அ. ஏழைச் சிறுமியரின் உணவுப் பஞ்சம் எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

ஆ. இப்பாடலிலே அவர்கள் அணியும் ஆடையின் பரிதாபகரமான நிலை எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

இ. ஏழைச் சிறுமியர் நோய் தொடர்பாகவும், நித்திரை தொடர்பாகவும் ஏற்பட்டுள்ள துன்ப நிலையை எவ்வாறு எடுத்துக் காட்டுகின்றனர்?

........................................................................................................

........................................................................................................

ஈ. புண்ணும் சிரங்கும் ஏன் நிறைந்தது?

........................................................................................................



"உன் நாவை அடக்கு நிம்மதியாய் வாழ்வாய்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. கீழே தரப்பட்டுள்ள கதையை வாசித்தபின் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

## உண்மையின் உயர்வு

இலங்கையின் வடபகுதியிலே நயினாதீவு என்ற தீவு ஒன்று உண்டு. அங்கே ஓர் ஏழை இருந்தான். அவனுக்குத் தாய், தந்தையர் யாரும் இல்லை. இளம் வயதிலேயே திருத்தி நல்வழிப்படுத்துபவர் எவருமின்றி அவன் எல்லாவிதமான தீயசெயல்களையும் கற்றுக் கொண்டான். ஊரவர்கள அவனைக் கண்டு வெறுத்து ஒதுங்கி நடந்தனர்.

ஒரு நாள் அவ்வூர்ப் பெரியவர் அவனுக்கு நற்புத்தி கூற எண்ணி னார். நீ செய்யும் பாவங்களில் ஒன்றையாவது விட்டுவிடக் கூடாதா? எனப பெரியவர் அவனிடம் கேட்டார். பெரியவரின் அன்புக் கேள்விக்கு இசைந்த அவன் 'யான் எதைவிட வேண்டும்' எனக் கேட்டான். பெரியவர் 'இன்று முதல் நீ பொய்பேசக் கூடாது' என்றார். அவன் எல்லாப் பாவங்களையும் செய்தான். ஆனால் பொய் பேசுவதைக் கைவிட்டான்.

ஒருமுறை கோயில் திருவிழா முடிவுற்ற பின்னர் நகர் காவலர் ஒருவர் நள்ளிரவில் வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தார். அப்போது இவ் இளைஞன் அவரைத் திடுகூறாகக் கண்டதும் பதட்டமடைந்தான். 'இவ்விடத்திற்கு ஏன் இந் நள்ளிரவில் வந்தாய்' என நகர் காவலர் கேட்டார். அவன் 'நான் இந்த வீட்டில் திருடுவதற்காக வந்தேன்' என உண்மையைக் கூறினான். நகர் காவலர் அவனுக்குப் புத்திகூறி வீட்டுக்கு அனுப்பி வைத்தார்.

அடுத்த நாள் கிராமத்து மக்களை நகர் காவலர் தமது அலுவலகத் துக்கு அழைத்தார். அப்போது பெரியவரும், அவ் ஏழை இளைஞனும் வந்திருந்தார்கள். நடந்தவைகளைக் கூறிய நகர் காவலர் அவனைத் திருத்த என்ன செய்யலாம் எனப் பெரியவரைக் கேட்டார். பெரியவர் முன்னர் சந்தித்த நிகழ்வைக் கூறி அவன் உண்மையை உரைப்பவன்; அவனது வேறு தீயபழக்கங்களையும் விடக்கூடிய பக்குவம் அவனிடம் உள்ளது எனக் கூறினார்.

மக்கள் அவ் இளைஞனைத் திருத்தவும், அவனுக்கு உதவவும் முன்வந்தனர். அவனின் உண்மை பேசும் பெருந்தன்மையைப் போற்றி, வைத்தியசாலையின் காவலாளிப் பதவியைத் தற்காலிகமாகக் கொடுத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அப்பதவியைப் பெற்றதன் பின்னர் படிப்படியாக வறுமை நீங்கியது. அவனது தீயபழக்கங்கள் அவனைவிட்டு அகன்றன. மக்கள் அவனை மதித்தனர்; அவனை அணுகிக் குசலம் விசாரித்தனர். அவன் நற்குணங்கள் வாய்ந்தவனாக நலமே பிறர் வாழ்த்த வாழ்ந்தான்.

அ. ஏழை இளைஞன் தீயவழியில் செல்லக் காரணம் என்ன?

..............................................................................................

..............................................................................................

ஆ. பெரியவர், இளைஞனிடம் யாது வினவினார்?

..............................................................................................

..............................................................................................

இ. பெரியவர் எப்பாவத்தை செய்யாது விடும்படி இளைஞனிடம் வேண்டினார்?

..............................................................................................

ஈ. இளைஞன் எப்பாவங்களைச் செய்தான்? எதைக் கைவிட்டான்?

..............................................................................................

..............................................................................................

உ. நகர் காவலர் கேட்ட கேள்விக்கு இளைஞன் எவ்விதம் பதில் கூறினான்?

அ. காடு ........................... ...........................



"இரக்கப்படுபவன் ஏமாந்துபோகலாம் ஆனால் தாழ்ந்து போவதில்லை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. பறவை ......................... .........................

இ. மரம் ......................... .........................

ஈ. தீ ......................... .........................

உ. மகிழ்ச்சி ......................... .........................

ஆ. இக்கதையில் வந்துள்ள அடைமொழிச் சொற்கள் மூன்று எழுதுக.

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

இ. இக்கதைக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று இடுக.

.............................................................................................

III. கதையில் வந்துள்ள தொழிற்பெயர்கள் நான்கு தருக.

(உ-ம்) வாழ்ந்தன.

அ. ......................... ஆ. .........................
இ. ......................... இ. .........................

07. பாடப்புத்தகத்தை ஆதாரமாகக் கொண்டு கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

அ. ஆரம்பத்தில் தட்டச்சுப் பொறி எந்த மொழியில் உருவாக்கப்பட்டது?

.............................................................................................

ஆ. இப்பாடத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் சீடர்களில் ஒருவர் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

.............................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. முத்தையா அவர்கள் வர்த்தக தாபனத்தில் பணிபுரிந்த காலத்தில் கற்றவைகள் யாவை?

.....................................................................................................

ஈ. முத்தையா அவர்கள் உருவாக்கிய தட்டச்சைப் பின்பற்றி உருவாக்கப் பட்ட தட்டச்சுப் பொறிகள் எவை?

.....................................................................................................

உ. ஆங்கிலத் தட்டச்சின் கண்டு பிடிப்பு எவ்வித நன்மைகளை முதலில் ஏற்படுத்தியது?

.....................................................................................................

**08. கீழே தரப்பட்டுள்ள பாடலைப் படித்தபின் தரப்பட்டுள்ள வினாக் களுக்கு விடை எழுதுங்கள்.**

**கண்ணம்மா**

உன் கண்ணில் நீர் வடிந்தால் - என் நெஞ்சில்
உதிரங் கொட்டுதடி
என் கண்ணின் பார்வையன்றோ - கண்ணம்மா
என்னுயிர் நின்னதன்றோ?
சொல்லும் மழலையிலே - கண்ணம்மா
துன்பங்கள் தீர்த்திடுவாய்
முல்லைச் சிரிப்பாலே - எனது
மூர்க்கந் தவிர்த்திடுவாய்

- பாரதியார்

அ. பாரதியார் தனது நெஞ்சில் எப்போது உதிரம் கொட்டும் எனக் கூறுகின்றார்?

.....................................................................................................

ஆ. கவிஞர் தனது உயிர் யாருடையது எனக் கூறுகிறார்?

.....................................................................................................



"உள்ளத்தில் உள்ள அன்பு செயலிலும் வெளிப்பட வேண்டும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. கவிஞரின் துன்பங்கள் எவ்வாறு தீர்க்கப்படுகின்றன எனக் கூறப்பட்டுள்ளது?

..........................................................................................

ஈ. கவிஞரின் கோபம் எப்போது தீர்க்கப்படுகின்றது?

..........................................................................................

உ. கண்ணம்மாவைப் பாரதியார் கண்ணின் எது போன்றவள் எனக் கூறுகின்றார்?

..........................................................................................

**09. கீழே தரப்பட்டுள்ள இணைமொழிச் சொற்களை வைத்து வாக்கியம் அமையுங்கள்.**

அ ஊண் உறக்கம் : ..........................................................................

..........................................................................................

ஆ. வற்றிவரண்டு : ..........................................................................

..........................................................................................

இ. ஆடிப்பாடி : ..........................................................................

..........................................................................................

ஈ. அருமைபெருமை : ..........................................................................

..........................................................................................

உ. வாழ்வுதாழ்வு : ..........................................................................

..........................................................................................

**10. அடைப்புக்குள் தரப்பட்ட பொருத்தமான சொல்லை ரகர, றகர பேதங்களுக்கு அமையத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புங்கள்.**

அ. மக்கள் ............. போல் அறிவுக் கூர்மை உடையவர்களாக இருத்தல் வேண்டும். ....................... செய்பவன் சுவர்க்கம் தாமே புகுவான்

(அரம், அறம்)



"தர்மத்தைக் கடைப்பிடிப்பவன் முத்தி நிலையை அடைவான்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. மாம்பழத்தை ................. கொடுக்க மாதுமை விரும்பிச் சாப்பிட்டாள். நாம் எமது வீட்டில் செய்ய வேண்டிய கடமைகள் எதுவென ........... வைத்திருத்தல் வேண்டும். (அரிந்து, அறிந்து)

இ. .................. உண்டு வாழ்வது ஆறாத இகழ்ச்சியைத் தரும். தீமை செய்வோர் ..................... உழலுவர் என்பர். (இரந்து, இறந்து)

ஈ. இலைகுழைகள் ஆட்டுக்கு நல்ல .............. என்பர். .................. கொடுக்காத குடிகள் அரசனால் தண்டிக்கப்பட்டனர். (இரை, இறை - (திறை)

உ. .................. கூட்டங்கள் மனஅமைதியைத் தரும். தேவையற்ற விடயங்களில் ................ தீய விளைவுகளையும் ஏற்படுத்தலாம். (இரங்கல், இறங்கல்)

ஊ. எமது கடைக்காரன் ..................... இல்லாத வன்கணாளன் ஆவான். ஒவ்வோர் ஏற்றத்துக்கும் படிப்படியான ..................... உண்டு என்பர். (இறக்கம், இரக்கம்)

11. கட்டத்திலுள்ள பேச்சு வழக்குச் சொற்களைப் பொருத்தமான இடத்தில் வைத்து நிரப்புங்கள்.

அ. வதந்தி கேட்டுக்கேட்டுக் காது .....................

ஆ. சிரிச்சு சிரிச்சு வயிறு .....................

இ. புத்தகம் எழுதி எழுதிக் கை .....................

ஈ. தம்பி வருவான் எனப் பாத்துப் பாத்துக் கண் .....................

உ. நடந்து நடந்து கால் .....................

ஊ. யோசிச்சு யோசிச்சு மூளை .....................

| |
|---|
| தேய்ஞ்சு போச்சு |
| ஒடிஞ்சு போச்சு |
| கூழாப் போச்சு |
| புளிச்சுப் போச்சு |
| பூத்துப் போச்சு |
| புண்ணாப் போச்சு |



"நல்லவருக்கும் தங்கத்துக்கும் (பொன்) சோதனை அதிகம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. பொருத்தமான சொற்களை வைத்து வாக்கிய இடைவெளி களைப் பூரணப்படுத்துங்கள்.

| | | |
|---|---|---|
| அடைமழை | பசியினால் | சிங்கம் கர்ச்சிக்க |
| அதிக குளிர் | சூரியன் மறைவே | |

அ. ........................ காட்டு விலங்குகள் பயந்து ஓடின.

ஆ. கிணறுகள், குளங்கள் ......................யால் நிரம்பி வழிந்தன.

இ. பூமியெங்கும் இருள் சூழ்ந்தமைக்குச் ................. காரணமாகும்.

ஈ. குழந்தை ........................... தொடர்ந்து அழுதது.

உ. மலைநாட்டின் .................... தேயிலை செழிப்பதற்கு ஏற்ற கால நிலையைக் கொடுத்தது.

13. கீழே தரப்பட்டுள்ள ஔவையாரின் அறிவுரைகளை மனனம் செய்வோம்.

- அறம் செய விரும்பு
- ஆறுவது சினம்
- இயல்வது கரவேல்
- ஈவது விலக்கேல்
- உடையது விளம்பேல்
- ஊக்கமது கைவிடேல்
- எண் எழுத்து இகழேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. செந்தமிழ் போற்றிய சேரன்



திருவுடையாரைவிட அறிவுடையாரையே பெரிதும் மதித்த மன்னன் - சேரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலகுப் பரீட்சை - 8

# செந்தமிழ் போற்றிய சேரன்

01. கட்டத்துள் தரப்பட்டுள்ள இரட்டைக் கிளவியைக் கொண்டு வாக்கிய இடைவெளிகளைப் பூர்த்தி செய்யுங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சலசல | படபட | கூக்கூ | சரசர | கீச்கீச் | டொக்டொக் |

அ. மரங்கொத்திப் பறவை பனை மரத்தை ................ என்று கொத்தியது.

ஆ. படமெடுத்த பாம்பு ................ என ஓடி மறைந்தது.

இ. மலைவீழ் அருவி .................... எனப் பாய்ந்தது.

ஈ. கூட்டிலிருந்த குருவிக் குஞ்சுகள் .............. எனச் சத்தமிட்டன.

உ. நாவல் மரத்திலிருந்த குயில் ........... எனக் கூவியது.

ஊ. ஓட்டப் போட்டியில் ஓடிய வீரனின் நெஞ்சு ............... என அடித்தது.

02. கீறிட்ட இடத்தில் வரவேண்டிய சொற்களை வைத்து நிரப்புங்கள்.

அ. முத்தமிழ் : இயற்றமிழ் இசைத்தமிழ் ....................

ஆ. முக்கனிகள் : மா .................... ....................

இ. இருமுதுகுரவர் : தாய் ....................

ஈ. இருபொழுது : காலை ....................

உ. இருதிணை - உயர்திணை ....................

ஊ. நானிலம் - குறிஞ்சி முல்லை .................... ....................



"நன்மைகளிலெல்லாம் முதன்மையானது தீங்கு செய்யாதிருத்தல்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. உமக்குத் தெரிந்த பெயர்ச் சொற்கள், வினைச் சொற்கள் என்பவற்றைக் கட்டத்துள் நிரப்புங்கள்.

| | பெயர்ச் சொற்கள் | வினைச் சொற்கள் |
|---|---|---|
| அ. | .............................. | .............................. |
| ஆ. | .............................. | .............................. |
| இ. | .............................. | .............................. |
| ஈ. | .............................. | .............................. |
| உ. | .............................. | .............................. |

04. பின்வரும் சொற்களின் பொருள் விளங்க அவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் அமையுங்கள்.

அ. கலக்கம் : ..............................................................................
களங்கம் : ..............................................................................

ஆ. எளிமை : ..............................................................................
ஏழ்மை : ..............................................................................

இ. வரம்பு : ..............................................................................
உறங்கு : ..............................................................................

ஈ. முருங்கை : ..............................................................................
முறுக்கு : ..............................................................................

உ. சமுகம் : ..............................................................................
சமூகம் : ..............................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்கு ஒத்தகருத்துச் சொற்களை எழுதுங்கள்.

அ. நூல் ........................ ஈ. முதன்மை ........................

ஆ. வாசிகசாலை........................ உ. சிறந்த ........................

இ. பூரணத்துவம்........................ ஊ. சிரமம் ........................

06. பாடப்புத்தகத்தை ஆதாரமாகக் கொண்டு சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( X ) எனவும் அடையாளமிடுங்கள்.

அ. பெருஞ்சேரல் இரும்பொறை என்பவன் சேர மன்னன் ஆவான். (.........)

ஆ. இம்மன்னனை நாடிப் பல புலவர்கள் வந்தனர். (.........)

இ. இம்மன்னன் செல்வம் உடையவர்களைவிட அறிவுடையாரையே மதித்தான். (.........)

ஈ. வீரமுரசம் போர்க்காலங்களில் போரை அறிவிப்பதற்கு முழங்கும். (.........)

உ. இரும்பொறை வேந்தன் இனிய சொல் பேசுபவன் அல்லன். (.........)

07. கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பாடப் புத்தகத்தை அடிப் படையாகக் கொண்டு விடை எழுதுங்கள்.

அ. பெருஞ்சேரல் இரும்பொறை என்பவனின் சிறப்புக்கள் யாவை?

..........................................................................................

..........................................................................................

ஆ. புலவர்கள் பலர் இச் சேர மன்னனை நோக்கி வரக்காரணம் என்ன?

..........................................................................................



"எதையும் மன்னிக்கும் ஒரே நீதிமன்றம் தாயின் இதயம் மட்டுமே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. பாண்டி நாட்டுப் புலவர் மோசிகீரனார் இரும்பொறை மன்னனைப் போற்றி எவ்விதமான அறிவுரை கூறினார்?

..........................................................................................

..........................................................................................

ஈ. 1. வீரமுரசம் எதற்காகப் பாவிக்கப்படும்?
2. வீரமுரசம் எவ்வாறு, எதனால் அமைக்கப்பட்டிருக்கும்?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

உ. 1. முரசு கட்டில் எவ்வித பெருமையுடையது?
2. முரசு கட்டில் எதற்காக, எவ்விதம் பயன்படுத்தப்பட்டது? ஏன் இதில் எவரும் ஏறி அமருவதில்லை?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

ஊ. இரும்பொறை மன்னன் உருவிய வாளை உறையுள் இடக் காரணம் எதுவாக அமைந்தது?

..........................................................................................

..........................................................................................

எ. இரும்பொறை மன்னனின் அன்புரைகேட்ட மோசிகீரனார் மன்னனை எவ்வாறு புகழ்ந்து வாழ்த்தினார்?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................



"தன் வலிமையைக் கணித்த பின்னரே செயலில் இறங்க வேண்டும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புங்கள்.

| | | | |
|---|---|---|---|
| சிங்காசனம் | வீரமுரசம் | நுண்ணறிவு | செங்கோல் |
| நாடிச் செல்லும் | வெற்றித்தெய்வம் | திருவுடையாரை | |

அ. பெருஞ்சேரல் இரும்பொறை மன்னன் .................. விட அறிவுடை யாரையே போற்றினான்.

ஆ. சேரமன்னர் இரும்பொறையை நோக்கிப் புலவர்கள் பழுத்த மரங்களை ............................ பறவைகள்போற் சென்றனர்.

இ. குடிகளுக்கு .................. செலுத்துகின்ற அரசனே உயிராவான்.

ஈ. பாண்டி நாட்டுப் புலவர் மோசிகீரனார் ....................... மிக்கவர்.

உ. வெற்றியைத் தெரிவிக்க .......................... வீறுடன் ஒலிக்கும்.

எ. முரசு கட்டில் அரசன் வீற்றிருக்கும் .......................... போன்ற பெருமையுடையது.

09. பின்வரும் விடுகதைகளுக்கு விடை எழுதுவோம்.

அ. மேலிருந்து வந்தவன் கீழிருந்து தருகிறான்
அவன் யார்? ..........................

ஆ. பட்டினத்தார் கையில் கைத்தடி. கசக்கிப்
பிழிந்தால் சுவையோ சுவை எது? ..........................

இ. பார்த்தால் பளிங்குக் கல். கடித்தால்
வாயெல்லாம் இனிப்பு. அது என்ன? ..........................

ஈ. ஓங்கி வளர்ந்தவள் பெற்றாள் ஓராயிரம்
பிள்ளைகள். அவள் யார்? ..........................

உ. பச்சை பச்சை ராணிக்கு வெள்ளை
வெள்ளை முத்துக்கள். அது என்ன? ..........................



“அதிகமாகச் சபதம் செய்பவனிடம் நம்பிக்கை வைக்காதே”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊ. விடியவிடியப் பூந்தோட்டம் விடியப் பார்த்தால் வெறுந்தோட்டம். அது என்ன? ..........................

எ. தின்னப் பழம் பழுக்கும் தின்னாத காய் காய்க்கும் அம்மரம் எது? ..........................

10. கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்கு ஒரு பொருள் பல சொல் (பன்மொழி) எழுதுங்கள்.

(உ-ம்) வயல் - புலம், கழனி, கமம், பழனம்

அ. சத்தம் - ..........................................................

ஆ. ஆசிரியன் - ..........................................................

இ. அரசன் - ..........................................................

ஈ. நட்பு - ..........................................................

உ. தாமரை - ..........................................................

ஊ. குழந்தை - ..........................................................

எ. மேகம் - ..........................................................

11. கீழே தரப்பட்டுள்ள செயற்பாட்டுக்கு ஒரு சொல் பல பொருள் தருக.

(உ-ம்) துன்பம், கடல், ஒலி, போர், வஞ்சகம் - கலி

அ. கடல், சக்கரம், கணை, சமுத்திரம் ..........................

ஆ. சிரம் (சிரசு), பக்கம், மேற்பகுதி ..........................

இ. உதடு, பூவிதழ், புத்தகத்தின் தாள் ..........................

ஈ. கழுத்து, ஆபத்து, துண்டு, பூமியின் பெரும் பிரிவு..........................

உ. கடல், பணி, முடிக்க வேண்டிய காரியம் ..........................

ஊ. அரிசி, குதிரை, சிங்கம், அரிதல், விஷ்ணு ..........................

எ. கிழமை, மாதம், சந்திரன் ..........................

ஏ. குளிர்ச்சி, அன்பு, அழகு, அறிவு ..........................



"தாயின் ஆசிக்கு நிகர் எதுவுமில்லை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. பொதுப்பாற் சொற்கள் ஒன்பது எழுதுங்கள்.

(உ-ம்) அகதி, அறிவிலி, புலவர், எதிரி, ஏழை

அ. ...................... ஈ. ...................... எ. ......................

ஆ. ...................... உ. ...................... ஏ. ......................

இ. ...................... ஊ. ...................... ஐ. ......................

13. கீழே தரப்பட்டுள்ள உயர்த்திணைக்குரிய அட்டவணையை நிரப்புங்கள்.

| | ஆண்பால் | பெண்பால் | பலர்பால் |
|---|---|---|---|
| அ. | சகோதரன் | ...................... | ...................... |
| ஆ. | ...................... | புதல்வி | ...................... |
| இ. | கடலைக்காரன் | ...................... | ...................... |
| ஈ. | ...................... | ...................... | ஆசிரியர் |
| உ. | ...................... | உழத்தி | ...................... |

14. கீழே தரப்பட்டுள்ள அஃறிணைக்குரிய அட்டவணையை நிரப்புங்கள்.

| | ஒன்றன்பால் | பலவின்பால் |
|---|---|---|
| அ. | ஆடு | ...................... |
| ஆ. | குதிரை | ...................... |
| இ. | பாம்பு | ...................... |
| ஈ. | பூச்சி | ...................... |
| உ. | மரம் | ...................... |



"திட்டமிட்ட வாழ்க்கையே வெற்றியின் வாசலை அடையும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலேடை

சிலேடை என்ற சொல், அணிகளில் ஒன்றாகும். ஒரு சொல்லுக்கு இரண்டு பொருள் தரும் வகையில் பயன்படுத்தப்படுவதைச் சிலேடை என்பர். செய்யுளில் வரும் சொற்களை நன்றாக ஆராய்ந்து பொருள் நயந்து இன்புற வேண்டும். சொல்லைக் கொண்டு வெளிப்படையில் ஒரு கருத்தும், உள்பொருளாக வேறொரு கருத்தையும் தருவது **சிலேடை** ஆகும். சிலேடையாகப் பாடுவதில் அதாவது இரண்டு பொருள் வரக்கூடியதாகக் கவி இயற்றுவதில் புலவர் காளமேகத்துக்கு நிகர் எவருமிலர்.

கீழே காளமேகத்தின் இரு கருத்துப்பட வரும் பாடல்களைப் படிப்போம்.

**அ. பாம்புக்கும் வாழைப்பழத்துக்கும்**

நஞ்சிருக்கும் தோலு ரிக்கும் நாதர் முடி மேலிருக்கும்
வெஞ்சினத்தில் பற்பட்டால் மீளாது - விஞ்சு மலர்த்
தேம்பாயும் சோலைத் திருமலைரா யன் வரையில்
பாம்பாகும் வாழைப்பழம்.

விஞ்சு மலர்த் தேம் பாயும் சோலைத் திருமலை ராயன் வரையில் : மிகுதியான மலர்கள் தேனைப் பொழிந்து கொண்டிருக்கும் சோலைகளுடைய திருமலைராயன் மலைச்சாரலிலே.

பாம்பு : நஞ்சு கொண்டது; தோலைக் கழற்றும்; சிவபெருமானுடைய திருமுடியில் ஆபரணமாக இருக்கும்; கொடிய கோபத்தால் அதன் நஞ்சுப் பல் பட்டால் உயிரைப் போக்கும்; மீளமுடியாது.

வாழைப்பழம் : நன்கு கனிந்தால் நைந்து இருக்கும்; இறைவனுக்கு முடியில் சாத்தும் பஞ்சாமிர்தமாக விளங்கும்; பற்களினிடையே அகப்பட்டால் வயிற்றுள் செல்வதொழிய, திரும்ப மீள்வது இல்லை.

இப்பாடல் இருகருத்துப்பட வந்துள்ளதைக் காணமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆ. நாய்க்கும் தேங்காய்க்கும்

ஓடும் இருக்கும் அதன் உள்வாய் வெளுத்திருக்கும்
நாடும் இலைதனக்கு நாணாது - சேடியே
தீங்காய தில்லாத் திருமலைரா யன்வரையில்
தேங்காயு நாயுநேர் செப்பு.

தோழியே : தீமை இல்லாத திருமலைராயனின் எல்லைக்கான நாட்டிலே நாய்க்கு இணையானது தேங்காய் எனக் கொள்க.

தேங்காய் : தேங்காய் ஓட்டை உடையது. அதன் ஓட்டின் உட்புறம் வெண்மையான தேங்காயைக் கொண்டிருக்கும். அனைவரும் விரும்பும் குலையாகத் தொங்குவதற்கு அது வெட்கப்படுவதில்லை.

நாய் : சிலவேளை ஓடித்திரியும், சிலவேளை தானே இருக்கும். அதன் வாயின் உட்புறம் வெளுத்திருக்கும். தான் விரும்பும் குரைத்தலைச் செய்வதில் அது வெட்கப்படுவதில்லை. ஓயாது குரைக்கும்.

இங்கே தேங்காயையும் நாயையும் ஒன்றென ஒப்பிடப்படுகிறது. இருபொருள் தரக் காளமேகப் புலவர் சிலேடையுடன் பாடியுள்ளார்.

01. பின்வரும் ஒத்தகருத்துச் சொற்களை எழுதுங்கள்.

அ. சாமர்த்தியம்......................
ஆ. முனைந்தார்......................
இ. தீனி ......................
ஈ. புத்திமதி ......................
உ. உற்சாகம் ......................
ஊ. சந்தேகம் ......................
எ. நிரூபித்தல்......................
ஏ. உத்தி ......................
ஐ. பரோபகாரம் ......................
ஒ. புத்தி ......................

02. பின்வரும் எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுங்கள்.

அ. இன்பம் ......................
ஆ. பெருமை ......................
இ. மலர்ந்தது ......................
ஈ. குளிர்காலம் ......................
உ. இகழ்ச்சி ......................
ஊ. உவகை ......................



"மனம் சுத்தமாக இருந்தால் செயல் நல்ல வழியில் நடக்கும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. பின்வரும் இணைமொழிகளைப் பொருத்தமான இடத்தில் வைத்து நிரப்புங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| துள்ளிக் குதித்து | செழித்தோங்கி | வாடிவதங்கி | அங்குமிங்கும் | ஆடிப்பாடி |

அ. பருவமழை பெய்தமையால் வயல்கள் ...................... காட்சி தருகின்றன.

ஆ. பாடசாலை விடுமுறையன்று மாணவர்கள் ................ மகிழ்ந்தனர்.

இ. தாய்ப் பசுவைக் கண்ட கன்றுக்குட்டி ........................ ஓடியது.

ஈ. காணாத குஞ்சைத் தேடித் தாய்க்குருவி ..................... பறந்து திரிந்தது.

உ. நோயின் தாக்கத்தால் நோயாளியின் உடல் ........................ காணப்பட்டது.

04. அடைப்புக்குறியுள் இருக்கும் சொல்லுக்கு எதிர்ச்சொல் எழுதுங்கள்.

அ. பொம்மை வாங்கிக் கொடுத்ததால் ஆத்விகா மிகவும் ................ அடைந்தாள். (துக்கம்)

ஆ. அவசரத்தில் ....................... விடைகளை எழுதிவிட்டேன் என ஜனகன் வேதனைப்பட்டான். (சரியான)

இ. நான் அவதானித்துக் கொண்டிருந்த பறக்கும் விமானம் என் பார்வையில் இருந்து .............................. (தோன்றியது)

ஈ. கொட்டைப் பாக்களவு ..................... குருவி எங்கள் வீட்டினுள் அடைக்கலமாகக் கூடு கட்டியது. (பெரிய)

உ. ஆதேஷ் தன் தங்கையின் கையிலிருந்த பென்சிலை ................... இழுத்தான். (மெதுவாக)



"பின் வாங்குவது தோல்வியின் அடையாளமாகும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதை படிப்போம்

05. கீழே தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு கதையைப் பூரணப் படுத்துங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மெல்லமெல்ல | கருக்கருக் | பதுங்கி | தகர | கால் | மிளகாய்த்தூள் |
| கண்களை | ஏமாற்றம் | பெருகியது | தகரப்பெட்டி | எரிச்சல் | பட்டது |

எலி ஒன்று சமையல் அறையில் வைக்கப்பட்ட முறுக்கை ............... என்ற சத்தத்துடன் தின்று கொண்டிருந்தது. பூனையொன்று ............. அடியெடுத்து வைத்து சமையல் அறைக்குள் ............. நுழைந்தது. உடனே எலி ................ யின் பின்னால் ஓடி ஒழிந்தது. சிறிது நேரம் சென்றது. எலி, பூனையின் பார்வையிற் படாமல் தகரப் பெட்டியின் மேல் ஏறியது. எலியின் ................ பட்டுத் ................ பெட்டி கீழே வீழ்ந்து உருண்டது. அதிலிருந்த ............... முழுவதும் பதுங்கிய பூனையின் மேல் கொட்டியது. தூள் பூனையின் கண்களில் ............ பூனைக்குக் கண் ............... ஏற்பட்டது. அது .............. மூடிக் கொண்டது. அதன் கண்களில் நீர் ............. அச்சமயம் பார்த்து எலி வேகமாக ஓடி மறைந்தது. பூனை ................ அடைந்தது.

06. கீழே தரப்பட்டுள்ள பந்திக்கு நிறுத்தற் குறியீடுகளை இடுங்கள்.

ஆதியும் மேரியும் இம்றானும் தோட்டத்துக்குச் சென்றனர் அங்கே மா புளி பலா கொன்றை போன்ற பலவகையான மரங்களைக் கண்டனர் கிளிகள் குயில்கள் மயில்கள் சிட்டுக் குருவிகள் போன்ற பலவகையான பறவைகளைக் கண்டனர் ஆகா என்னே அழகான காட்சி என்று வியந்தனர்



"அழிவுக்கு முன் கர்வம் வரும், வீழ்ச்சிக்கு முன் திமிர் வரும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. பின்வரும் பழமொழிகளைப் பூரணப்படுத்துங்கள்.

அ. உட்பிட்டவரை ..........................................

ஆ. பொறுத்தார் பூமி ..................................

இ. உயரப் .......................................... ஊர்க்குருவி பருந்தாகுமா?

ஈ. தாயைப் போல பிள்ளை நூலைப் போல ..................................

உ. மதியாதார் முற்றம் ..............................................

ஊ. அகத்தின் அழகு .................................................. தெரியும்.

08. பாடப்புத்தகத்தை ஆதாரமாகக் கொண்டு விடை எழுதுங்கள்.

அ. அம்மா வாணை என்கிறாய்
அம்மா வருதல் ஒருபொருள்
அம்மா வாணை சத்தியம்
அம்மா வாணை சத்தியம் ஒருபொருள்

மேலே தரப்பட்ட சிலேடைப் பாடலில் இரு பொருள் பயிலப்பட்டுள்ளது. அவற்றை எழுதுங்கள்.

I. அம்மா ..........................................
II. அம்மா ..........................................

ஆ. புத்தியி லாதவன் என்று நீ .................
புத்தியில் ஆதவன் ஆகிறாய் .............

ஒருசொல் இரு பொருள் பயப்ப நிற்பதனை எழுதுக.

I. ..................................................
II. ..................................................

இ. தாவரம் என்று நீ சாமியைக் கேட்கிறாய்
தாவரம் இந்த உலகைத் தழைக்க வைக்கிறது.

ஒரு சொல் இருபொருள் விளக்குக.

I. ..................................................
II. ..................................................



"பொறுப்புள்ளவன் புகழ்பெறுவான், இறுமாப்புள்ளவன் ஏமாறுவான்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. பின்வரும் சொற்களைக் கொண்டு இருபொருள்தர வாக்கியங்கள் அமையுங்கள்.

அ. அம்மாவாணை : ..................................................
அம்மா வாணை : ..................................................

ஆ. புத்தியில்லாதவன் : ..................................................
புத்தி இல்லாதவன்: ..................................................

இ. படுக்கவா : ..................................................
படுக்க வா : ..................................................

ஈ. தாவரம் : ..................................................
தா வரம் : ..................................................

10. பொருத்தமாகத் தொடர்புபடுத்துங்கள்.

| | | |
|---|---|---|
| அ. | வாணை | செழிக்க |
| ஆ. | ஆணை | அருள் |
| இ. | வரம் | கட்டளை |
| ஈ. | ஆதவன் | வாருங்கள் |
| உ. | தழைக்க | சூரியன் |

11. பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுங்கள்.

அ. கப்பற்பயணம் = ..................................
ஆ. அடுப்பேற்றி = ..................................
இ. நெற்களஞ்சியம் = ..................................
ஈ. பல்லாயிரம் = ..................................
உ. படையெடுத்தனர் = ..................................
ஊ. வெள்ளிக்கிழமை = ..................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ. சருவச்சட்டி = ....................................

ஏ. ஒன்றுண்டு = ....................................

12. பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுங்கள்.

அ. இடம் + பரப்பு = ....................................

ஆ. வெண்மை + தாமரை = ....................................

இ. அன்று + இரவு = ....................................

ஈ. எண்ணுவது + இல்லை = ....................................

உ. கறி + வேப்பிலை = ....................................

ஊ. பகை + அரசர் = ....................................

13. பின்வரும் சொற்களைத் திருத்தி எழுதுங்கள்.

அ. குளிச்சி ........................ உ. கோடாலி ..........................

ஆ. தலணி ........................ ஊ. நெர்ப்பயிர் ..........................

இ. வெய்யில் ........................ எ. முயர்ச்சி ..........................

ஈ. புகயிலை ........................ ஏ. வண்ணாத்திப்பூச்சி ..............



"அகந்தை இல்லாதவனுக்கு ஆண்டவனின் அருள் கிடைக்கும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலகுப் பரீட்சை - 10

# பென்சிலின் கதை

01. கீழே தரப்பட்டுள்ள அடுக்கு (இரட்டைமொழி)ச் சொற்களை வைத்து இடைவெளி நிரப்புங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| தகதக | கீச்கீச் | குடுகுடு | கிடுகிடு | வெடுக்வெடுக் |
| கலகல | வழுவழு | பொலுபொலு | படபட | |

அ. மழையில் நனைந்த பாமினி ...................... என நடுங்கினாள்.

ஆ. தாயைக் கண்டு அழுத குழந்தை .................. எனச் சிரித்தது.

இ. சூரியன் ...................... என ஒளி பாய்ச்சி எழுந்தான்.

ஈ. கோழிக்குஞ்சுகள் ..................... எனச் சத்தமிட்டன.

உ. பாட்டி ..................... என நடந்து சென்றாள்.

ஊ. மாணவர்களிடம் ........................ என்று பேசக்கூடாது.

எ. குழந்தையின் உடம்பு தடவுவதற்கு ............. என இதமாக இருந்தது.

ஏ. பயத்தால் நெஞ்சம் ........................ என அடித்தது.

ஐ. குழந்தையின் கண்ணிலிருந்து ............ எனக் கண்ணீர் உதிர்ந்தது.

02. பின்வருவனவற்றிற்கான மரபுப் பெயர்களை எழுதுங்கள்.

அ. கத்தரியின் வித்து ........................................

ஆ. நெல்லின் இலை ........................................

இ. மாவின் பிஞ்சு ........................................

ஈ. பலாவின் பிஞ்சு ........................................



"கவலைப்படுவதன் மூலம் வாழ்வில் வெற்றி பெற முடியாது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. யானையின் மலம் ....................................

ஊ. பனையின் கூட்டம் ....................................

எ. ஆமணக்கின் வித்து ....................................

ஏ. வண்டின் ஒலி ....................................

ஐ. சிங்கத்தின் ஒலி ....................................

03. தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு வாக்கியம் அமையுங்கள்.

(உ-ம்) கைகூடுதல் : நீண்ட நாட்களாகத் தடைப்பட்டிருந்த திருமணம் இப்போது கைகூடியுள்ளது.

அ. கிணற்றுத்தவளை (உலகம் அறியாதது) : ..................................
..........................................................................................

ஆ. ஊமை கண்ட கனவு (உரைக்க முடியாதநிலை) : ......................
..........................................................................................

இ. ஆகாயக் கோட்டை (முடியாத எண்ணம்) : ..................................
..........................................................................................

ஈ. ஆறஅமர (மெதுமெதுவாக) : ..................................................
..........................................................................................

04. வழக்கிலுள்ள ஒரு சொல் பிரயோகம் எழுதுங்கள்.

அ. பொருளைத் தேடி ஈயாது வைத்திருப்பவன். .................

ஆ. முனிவர்கள் வசிக்கும் இடம். .................

இ. பகையரசர்களுக்குக் கொடுக்கப்படும் காணிக்கை. .................

ஈ. ஒரே நேரத்தில் நூறு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் உடையவன். .................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. உடம்பைப் பாதுகாக்க அணியும் இருப்பினால் ஆன உடை. ................

ஊ. விகடமாகவும், பரிகாசமாகவும் பாடுவோன். ................

05. **பாடசாலை விடுதியில் தங்கியிருக்கும் மகன் அல்லது மகள் தனது பெற்றோருக்கு விடுதி பற்றியும், தனது படிப்புப் பற்றியும் எழுதும் உறவுமுறைக் கடிதம் ஒன்று எழுதுங்கள்.**

உறவுமுறைக் கடிதம்

................................................................................................

................................................................................................

................................................................................................

................................................................................................

................................................................................................

................................................................................................

................................................................................................

06. அ. கீழே தரப்பட்டுள்ள பாடலை இசையோடு பாடுவோம்.

**காந்திமகான்**

மண்ணில் வந்து பிறந்தாரே
மனிதரில் உயர்ந்து நின்றாரே
அன்பின் வழியில் நின்றாரே
அகிலம் வியக்க வாழ்ந்தாரே



அடிமை வாழ்வை முடித்திடவே
அந்நியர் மெச்சிட முயன்றாரே
விடுதலை பெற்றுத் தந்தாரே
வியக்கக் காந்தி மறைந்தாரே



"தேவையும் ஆசையும் அதிகரித்தால் அமைதியும் நிம்மதியும் பறிபோகும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை சத்தியம் உள்ளவரை
வாழ்வார் காந்தி உலகினிலே
நாட்டு மக்கள் மனதினிலே
நல்லவர் காந்தி நிலைப்பாரே.

நன்றி: ம.கணேசன்

ஆ. கீழே தரப்பட்டுள்ள பாடலை இசையோடு பாடுவோம்.

பாட்டியின் வீட்டுப் பழம்பானை - அந்தப்
பானை ஒரு புறம் ஓட்டையடா
ஓட்டை வழியே ஒரு சுண்டெலியும்
உள்ளே சென்று நெல் தின்று வயிறு
ஊதிப் புடைத்துப் பெருத்ததடா
மெல்ல வெளியில் வருவதற்கும் ஓட்டை
மெத்த சிறிதாகிப் போச்சுதடா
பானையைப் பாட்டி திறந்தவுடன்
பாய்ந்தே வந்த சுண்டெலியை அந்தப்
பக்கமாய் வந்த பூனையுமே
கௌவிப் பிடித்துக் கொண்டதடா.

07. பாடப்புத்தகத்தை ஆதாரமாகக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

அ. பேனாவை விடப் பென்சிலினால் பெறக்கூடிய நன்மைகள் யாவை?

..............................................................................................

ஆ. பென்சிலுக்கான மூலப்பொருட்கள் எவை? அவை அதிகமாக எந்த நாட்டிலிருந்து பெறப்படுகின்றன?

..............................................................................................

இ. பென்சிலில் இடப்பட்டிருக்கும் B, H என்ற எழுத்துக்களைக் கொண்டு எதனைத் தீர்மானிக்கலாம்?

..............................................................................................



“உடல் வேதனையைவிட மனவேதனை மோசமானது”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. பென்சிலில் எழுதும் கூர் எப்பொருளினைக் கொண்டு தயாரிக்கப் பட்டது?

.......................................................................................

08. தரப்பட்டுள்ள சொற்களை வைத்து இடைவெளி நிரப்புங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஜாக்கிரதையாக | வெள்ளி | பளபளக்கும் | காரீயக்குச்சி | கரியமும் |

அ. எழுதும் கூருக்குக் களிமண்ணும் ...................... வேண்டும்.

ஆ. ஜேர்மனியில் பென்சில் ...................... என அழைக்கப்படுகிறது.

இ. எப்பொழுதும் பென்சிலை ...................... சீவ வேண்டும்.

ஈ. பழங்காலத்தில் ஓவியர்கள் படம் வரைய ..................... களைப் பயன்படுத்தினர்.

உ. பென்சிலின் மீது ......................... எழுத்துக்கள் உள்ளன.

## படிப்போம் சிரிப்போம்






சிறுவன் : ஒரு முழம் இட்லி தாங்க.
கடைக்காரி : என்ன ஒரு முழம் இட்லியா?
சிறுவன் : நீங்கதானே பூப்போன்ற இட்லி கிடைக்கும் என்று எழுதிப் போட்டிருக்கிறீர்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யானை – எறும்பு






யானை தலைதெறிக்க ஓடி வருகிறது?

எறும்பு : ஏன் இப்படி ஓடி வருகிறாய்?
யானை : என்னை ஒரு சிங்கம் துரத்தி வருகிறது.
எறும்பு : எனக்கு பின்னால் ஒளிந்து கொள்.
யானை : .....?

## குரங்கிடம் உதவிகேட்கும் முள்ளம் பன்றி






முள்ளம்பன்றி : எனது முதுகு கடிக்கிறது. கொஞ்சம் சொறிந்து விடுகிறியா?
குரங்கு : ??!



"இரும்பை இரும்பால் தான் வெட்ட வேண்டும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளி சோதிடம்




எலி : எனது பலனைப் பார்த்துக் கூறும்
கிளி : உங்களை நோக்கி நல்லகாலம் வந்து.....கொண்டு....இருக்கு...

# படிப்போம் சிரிப்போம்

### நன்றி மறந்த தவளை

ஒரு குளத்தின் மேட்டுக் கரைப் பகுதியில் எலி வளை ஒன்றிருந்தது. எலி பக்கத்து வயல்களுக்குச் சென்று தானியங்களைக் கொண்டுவந்து வளையில் சேர்த்து வைக்கும். மழை காலத்தில் வெயிலில் செல்ல முடியாத போது, எலி தானியங்களை வயிறாரத் தின்று மகிழ்ச்சியுடன் இருந்தது.

அந்த எலிக்கும் குளத்தில் வாழ்ந்து வந்த தவளைக்கும் சிநேகிதம் ஏற்பட்டது. கோடைகாலம் வந்தபோது குளத்தில் தண்ணீர் வற்றியது. தவளையின் வாழ்வு ஆபத்துக்கு உள்ளானது. நீரில்லாவிடில் தவளை உணவின்றி மடிய வேண்டியது தான்.

தவளைக்கு உதவ எலி எண்ணியது. தண்ணீர் உள்ள குளம் தேடிச் சென்றது. ஒருநாள் நீர் நிறைந்த குளத்தை எலி கண்டது. மகிழ்ச்சி அடைந்தது. தவளையைப் புதிய குளத்துக்குக் கூட்டிச் செல்ல எலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பியது. குளத்தை விட்டுப் பிரிந்து செல்லும் போது வழி தவறாது ஒன்றாகச் செல்ல கயிறு ஒன்றினால் எலியும், தவளையும் தம் கால்களைக் கட்டிக் கொண்டன.

புதிய குளத்தருகே வந்த எலியும், தவளையும் குளிர்காற்றை உணர்ந்தன. புதிய குளத்தையும், பெருக்கெடுத்த நீரையும் கண்ட தவளை, தன் நண்பன் எலி செய்த நன்றியை மறந்தது. நீரைக் கண்ட தவளை மகிழ்ச்சியால் பிணைக்கப்பட்ட கயிற்றுடன் 'தொப்' என நீரினுள் தாவிப் பாய்ந்தது. தவளை எலியின் நிலைபற்றிச் சிறிதும் சிந்திக்கவில்லை. கயிற்றால் பிணைக்கப்பட்ட எலி நீரினுள் விழுந்தது. தண்ணீரில் மூழ்கி எலி இறந்தது.

ஆனால் தவளையோ நண்பனின் இறப்புப் பற்றிக் கவலை கொள்ளவில்லை. புதிய குளத்தில் கிடைத்த புதிய இரையை உண்டு தவளை இன்பத்தில் திளைத்தது. இறந்த எலி தண்ணீரில் மிதப்பதை வானத்தில் வட்டமிட்ட பருந்து கண்டது. ஒரே பாய்ச்சலில் நீர் மட்டத்தை அடைந்து எலியைத் தன் கால்களால் பற்றி உயரப் பறந்தது. கயிற்றால் காலில் பிணைக்கப்பட்ட தவளையும், எலியுடன் சேர்ந்து சென்றது. தவளை பருந்துக்கு விருந்தாகியது.

நன்றி மறந்தவர்களுக்கும், சுயநலவாதிகளுக்கும் தெய்வம் கொடுத்த தண்டனை அல்லவா இது!

**'கெடுவான் கேடு நினைப்பான்'**

**நன்றி : கவிஞர். தே.ப.பெருமாள்**
**சிந்திக்க வைக்கும் சிறுகதைகள்**

**09. கதையை வாசித்தபின் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

அ. எலிக்கு மழை, வெயில் காலத்தில் எவ்வாறு உணவு கிடைத்தது?

..........................................................................................

ஆ. குளத்தில் வாழ்ந்த தவளையின் வாழ்வு ஏன் ஆபத்துக்கு உள்ளானது?

..........................................................................................



“ஊழ் வினைப்பயன் வாழ்வைப் பின்பற்றி வரும்”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. எச்சந்தர்ப்பத்தில் தவளை நண்பன் எலி செய்த நன்றியை மறந்தது? எச் செயலைச் செய்து தப்பியது?

..............................................................................................................

ஈ. தண்ணீரில் வீழ்ந்த எலியின் நிலை என்ன?

..............................................................................................................

உ. தவளை எதனால் இன்பத்தில் திளைத்தது?

..............................................................................................................

ஊ. எதனால் தவளை பருந்துக்கு விருந்தாக வேண்டி ஏற்பட்டது?

..............................................................................................................

எ. இக்கதை உணர்த்தும் படிப்பினை யாது?

..............................................................................................................

10. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ. மாம்பழத்தின் உள்ளீடு சதை, என்பது போல பலாவின் உள்ளீடு
1. சதை 2. சுளை 3. மணி 4. கனி

ஆ. பசுவின் இளையது கன்று, சிங்கத்தின் இளையது
1. குருளை 2. குட்டி 3. போத்து 4. கடா

இ. பலாவின் பிஞ்சு மூசு என்பதுபோல வாழையின் இளம் பிஞ்சு
1. பழம் 2. காய் 3. கச்சல் 4. வடு

ஈ. குயில் பாடும், மயில்
1. கத்தும் 2. கரையும் 3. கூவும் 4. அகவும்

உ. ஆந்தை அலறும், எருது
1. முக்காரமிடும் 2. பிளிறும் 3. கத்தும் 4. அகவும்

ஊ. யானையின் தொகுதி பந்தி, மலைகளின் கூட்டம்
1. கூட்டம் 2. தொடர் 3. குவியல் 4. அடுக்கு



"முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. கீழே தரப்பட்டுள்ள தொழில்களுக்கான பெயர்களை எழுதுங்கள்.

(உ-ம்) உழுது பயிரிடுபவர். உழவர்

அ. ஓவியங்களை வரைபவர். ............................

ஆ. துறவு பூண்டவர். ............................

இ. புத்தகம் பதிப்பவர். ............................

ஈ. பேரூத்தில் பயணச்சீட்டு வழங்குபவர். ............................

உ. மட்பாண்டம் வனைபவர். ............................

ஊ. யானையைப் பழக்கி நடத்துபவன். ............................

12. கீழே தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு வாக்கியம் அமையுங்கள்.

அ. உருவம் : ..............................................................................................
..............................................................................................

ஆ. இயற்கை : ..............................................................................................
..............................................................................................

இ. இரகசியம் : ..............................................................................................
..............................................................................................

ஈ. அசுத்தம் : ..............................................................................................
..............................................................................................

உ. சுலபம் : ..............................................................................................
..............................................................................................

ஊ. சாந்தம் : ..............................................................................................
..............................................................................................



"நீர்க் குமிழியைப் போன்றது இளமைப் பருவம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. உயிர் காக்கப் பயிர் காப்போம்



'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர் காக்கப் பயிர் காப்போம்

01. கீழேயுள்ள 'எங்கள் தோட்டம்' என்ற பாடலை இசையோடு பாடுவோம். தரப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

**எங்கள் தோட்டம்**

தோட்டம் எங்கள் தோட்டமாம்
அழகான தோட்டமாம்
பூத்த மலர்க் கூட்டமாம்
இரவில் மலரும் கூட்டமாம்
கனி மிகுந்த தோட்டமாம்
காணத் தகுந்த தோட்டமாம்
பழுத்தால் நன்றாக இருக்குமாம்
பழம் மிகுந்த தோட்டமாம்
தின்றால் நன்றாக இருக்குமாம்
தின்னத் தின்ன இனிக்குமாம்.

நன்றி: புதுப்பாதை

அ. காணத் தகுந்த தோட்டமாம் என ஏன் கவிஞர் பாடியுள்ளார்?

..........................................................................................

..........................................................................................

எடுத்த செயலை எந்த இடையூறு ஏற்படினும் செய்து முடிக்கும் பருவம் இளமைப் பருவம். இப்பருவத்தில் உண்மையாகவும் ஏற்றத்தாழ்வு நீங்கவும், நீதியை நிலை நாட்டவும், நாடு நிறை கல்வி பெறவும் எழுச்சி மிக்க எண்ணுத்துடன் செயலாற்ற வேண்டும் என்பது கீழ் உள்ள பாடலின் கருத்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைஞனே இதயம் கொள்

தூய்மையென்ற கொடியேந்தித் துலங்கிடுவாய் தோழா!
வாய்மையென்ற ஒளிதாங்கி விளங்கிடுவாய் தோழா!
சாதியென்ற நோய்போக்கத் துணிந்து விடு தோழா!
நீதியெங்கும் நிலவிடவே நிமிர்ந்து செல்லு தோழா!
ஞாலத்தை நிறைவாக்கும் கல்விதேடு தோழா!
கோலத்தால் மாறிவிடாக் கொள்கை நாடு தோழா!
ஏற்றமிகு எண்ணமுடன் எழுந்து செல்லு தோழா!
ஏற்றத்தாழ்(வு) ஒழிந்துவிடும் இதயங்கொள் தோழா!

நன்றி : அருள்தந்தை. சி.மணிவாளன்
கைவளை கவிதைத் தொகுப்பு

02. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுங்கள்.

அ. 'தூய்மையென்ற கொடியேந்தித் துலங்கிடுவாய்' இவ் அடி உணர்த்தும் பொருள் யாது?
1. கனி இருக்கக் காய் கவர்வது
2. மெய்ப்பொருள் காண்பது.
3. மனத்தில் தூய்மையுடன் விளங்கல்.

ஆ. 'வாய்மையென்ற ஒளிதாங்கி விளங்கிடுவாய்' இவ்வடி உணர்த்தும் பொருள்
1. ஒளியும் உயர்வும் உண்மையாம்.
2. நீதியில்லாத சொல்லே வாய்மை.
3. பொய் பேசாதே.

இ. 'மக்களுள் வேற்றுமை நீங்க வேண்டும்' என்பதை உணர்த்தும் அடி
1. ஏற்றமிகு எண்ணத்துடன் எழுந்து செல்.
2. ஞாலத்தை நிறைவாக்கும் கல்வி தேடு.
3. சாதியென்ற நோய் போக்கத் துணிந்து விடு.

ஈ. 'நீதியெங்கும் நிலவிடவே நிமிர்ந்து செல்லு' என்பது உணர்த்துவது
1. நீதி எல்லோருக்கும் பொதுவானது.
2. நீதி ஆட்சி செய்ய வேண்டும்.
3. மக்கள் நீதியை விரும்ப வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. 'ஏற்றமிகு எண்ணமுடன் எழுந்து செல்லு' இவ் அடி உணர்த்தும் பொருள்

1. எண்ணியதைச் செயற்படுத்து.
2. எண்ணம் உயர்வாயின் செயல் விரைவில் நிகழும்.
3. ஏற்றமாக எழுந்து செல்க.

03. தரப்பட்ட சொற்கள் உணர்த்தும் பொருளைப் பொருத்துங்கள்.

| | |
|---|---|
| அ. துலங்குதல் | தோற்றம் |
| ஆ. கோலம் | குற்றமற்றவன் |
| இ. ஏற்றமிகு | தீமைபயக்காத |
| ஈ. தீதில்லா | விளங்குதல் |
| உ. மாசிலன் | உயர்வுமிக்க |

04. உவமைத் தொடருக்கான பொருளை எழுதுங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| பகைமை | அழியாமை | நிலையாமை | பிரிவுத்துயர் | கலக்கம் |

அ. இனம் பிரிந்த மான் போல ..........................

ஆ. இடியேறு கேட்ட நாகம் போல ..........................

இ. கீரியும் பாம்பும் போல ..........................

ஈ. கன்மேல் எழுத்துப் போல ..........................

உ. நீர்மேற் குமிழி போல ..........................

05. கீழே தரப்பட்டுள்ள உவமை மணிகளை வைத்து வாக்கியம் எழுதுங்கள்.

(உ-ம்) அம்புபோல் : அரிச்சந்திரன் அம்புபோல் விரைந்து சென்றான்.

அ. அறுகுபோல் வேரூன்றி : ..........................................................
..........................................................................................


"இறை சிந்தனை இருந்தால் பாவம் தொடராது"
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. மதிபோன்ற முகம் : ..............................................................

..............................................................................................

இ. ஆல் போல் தளைத்து : ..................................................

..............................................................................................

ஈ. குசேலனை ஒத்த வறிஞன் : ..............................................

..............................................................................................

உ. பசுப்போன்ற சாந்தம் : ..................................................

..............................................................................................

## 06. குறுக்கெழுத்துப் புதிர்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | ■ | 3 | ■ | 4 |
| | ■ | | ■ | 5 | | | |
| 6 | | ■ | ■ | | ■ | ■ | ■ |
| 7 | | 8 | | ■ | ■ | 9 | |
| | ■ | | ■ | 10 | | | ■ |
| | ■ | | 11 | ■ | ■ | | ■ |
| ■ | 12 | ■ | 13 | | | 14 | ■ |
| 15 | | | | ■ | ■ | 16 | |

கீழ்க் குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டங்களை நிரப்புங்கள்.

அ. இடமிருந்து வலம் ( →)

1. தைப்பொங்கலுக்குப் புதிதாக ...... செய்த நெல்லைப் பயன்படுத்துவர்.
5. வருடத்தின் கடைசி மாதம் இதுவாகும்.
6. சிநேகிதியை இப்படியும் கூறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. பெண்கள் முகத்தில் பூசுவது. இது ஒரு கிருமி கொல்லி ஆகும்.
9. ............ வளை ஆனாலும் தனி வளை வேண்டும்.
10. எறும்பு, கறையான் இதைக் கட்டி வாழும். பாம்பும் குடி இருக்கும்.
13. ஆலையில் இட்ட இப்பொருள் திரும்பி வராது.
15. இதனைக் கண்டால் பனி விலகும். தாமரை மலரும்.
16. தண்டனை பெற்றுச் சிறைக்குள் இருப்பவர்.

ஆ. மேலிருந்து கீழ் ( ↓ )

1. புத்தபெருமான் நிஷ்டையில் அமர்ந்திருந்த மரம்
2. நுளம்பிலிருந்து பாதுகாக்க இதைப் பயன்படுத்துவர்.
3. நம் முன்னோர் இதனைக் கொண்டு வயலை உழுதனர்.
4. இதன் வளர்ப்பு மூலம் வருமானத்தைப் பெறலாம்.
5. உழவனின் நண்பன். தைப்பொங்கலுக்கு அடுத்த நாள் சிறப்பிக்கப் படும் விலங்கு.
8. ஆழ்கடலில் இருந்து கிடைக்கும். இதை ஊதினால் ஒலி எழும்.
9. இது ஊரக் கல்லும் குழியும்.
11. இராமருக்குப் படகோட்டியவன். இராமரின் நண்பரானான்.
12. தந்திரம் மிக்க விலங்கு. திராட்சைப் பழத்தைக் கண்டாலும் இதன் நினைவு வரும்.
14. நெருப்பிலிருந்து தோன்றும். யானையின் நிறமும் இதுவாகும்.

07. கீழே உள்ள பேச்சு வழக்குச் சொற்களைத் திருத்தி எழுதுங்கள்.

| | | |
|---|---|---|
| (உ-ம்) | பேசுது | பேசுகிறது |
| அ. | கூவுது | ........................................ |
| ஆ. | பறக்குது | ........................................ |
| இ. | வளருது | ........................................ |
| ஈ. | பாக்குது | ........................................ |
| உ. | பரவுது | ........................................ |
| ஊ. | நினைக்குது | ........................................ |


"உயிர்களுக்குச் செய்யும் தொண்டே கடவுளுக்குச் செய்யும் தொண்டு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. பின்வரும் தலைப்புகளுக்கேற்ப இரண்டு பழமொழிகள் எழுதுங்கள்.

அ. தூய்மை (சுத்தம்) பற்றியது

I. ....................................................................................

II. ....................................................................................

ஆ. ஆடை பற்றியது

I. ....................................................................................

II. ....................................................................................

இ. உணவு பற்றியது

I. ....................................................................................

II. ....................................................................................

09. கட்டத்துள் உள்ள உதாரணங்கள் இரண்டு வீதம் அறுசுவைக்கான தலைப்பைத் தொடர்புபடுத்துங்கள்.

| அறுசுவை | எடுத்துக்காட்டு |
|---|---|
| அ. இனிப்பு | பாகற்காய், குறிஞ்சாயிலை |
| ஆ. கசப்பு | உப்பு, கடல்நீர் |
| இ. புளிப்பு | தேன், சீனி |
| ஈ. உவர்ப்பு | பாக்கு, வாழைப்பூ |
| உ. உறைப்பு (கார்ப்பு) | மாங்காய், புளியங்காய் |
| ஊ. துவர்ப்பு | மிளகு, மிளகாய் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுங்கள்.

அ. செந்தாமரை = ..................................

ஆ. வெண்ணிறம் = ..................................

இ. கருமுகில் = ..................................

ஈ. தண்ணீர் = ..................................

உ. பைங்கிளி = ..................................

ஊ. வெற்றிலை = ..................................

எ. தொன்னூல் = ..................................

11. பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுங்கள்.

அ. மூன்று + காலம் = ..................................

ஆ. ஏழு + பிறப்பு = ..................................

இ. ஒன்பது + ஆயிரம் = ..................................

ஈ. ஆறு + கால் = ..................................

உ. பருப்பு + கறி = ..................................

ஊ. மண் + அரிப்பு = ..................................

எ. கால் + சதங்கை = ..................................

ஏ. கட்டு + மரம் = ..................................

12. பாடப்புத்தகத்தை ஆதாரமாகக் கொண்டு வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

அ. 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்பதன் பொருள் என்ன?

..........................................................................................................



"பிடிவாதமும், கோபமும் இயலாமையின் வெளிப்பாடு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. தாயினும் தலையுடைய நல்லாள் யார்?
அவள் எவ்வித நற்குணமுடையவள் எனக் கூறப்பட்டுள்ளது?

..............................................................................................

..............................................................................................

இ. இன்றைய சிற்றூர்களின் நிலை பற்றிக் கட்டுரை ஆசிரியர் யாது கூறுகின்றார்?

..............................................................................................

..............................................................................................

ஈ. நாம் எமது சிந்தனையை மாற்றி எவ்விதம் செயற்பட வேண்டுமெனக் கட்டுரை ஆசிரியர் கூறுகின்றார்?

..............................................................................................

..............................................................................................

**13. கீழே தரப்பட்டுள்ள தொடர்களைக் கையாண்டு வாக்கியம் அமையுங்கள்.**

........................................................................................................

ஆ. ஆண்டி முதல் அரசன் வரை : ..................................................

........................................................................................................

இ. சொற்சுருக்கமும் பொருட் பெருக்கமும் : ..................................................

........................................................................................................

ஈ. நெஞ்சாரப் புகழ்ந்து வாயார வாழ்த்தி : ..................................................

........................................................................................................

உ. உடல் பொருள் ஆவி அனைத்தும் : ..................................................

........................................................................................................



"அழிவைத்தரும் செயல்களில் நம்மை ஆட்படுத்திக் கொள்ளக்கூடாது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. கீழே உள்ள வாக்கியங்கள் காட்டும் காலத்தை இடைவெளியில் எழுதுங்கள்.

(உ-ம்) சிறிய குன்றின் அருகே முன்பு வீடு இருந்தது. - இறந்தகாலம்

அ. தந்தை சொற்படி மகன் வேலை செய்தான். ........................

ஆ. ஜனகனும் நானும் பாடசாலைக்குப் போவோம். ........................

இ. மழை வெள்ளத்தில் சிறுவர்கள் கும்மாளம் அடித்தனர். ........................

ஈ. மாதவி பாட்டுப் பாடுகிறாள். ........................

உ. திருக்குறளை நான் பாடமாக்கினேன். ........................

04. ஆக்கம் எழுதுவோம்.

**கட்டுரை, கடிதம்**

அ. பின்வரும் தலைப்புகளில் ஒன்றைப் பற்றிக் கட்டுரை எழுதுங்கள்.

1. நான் விரும்பும் பெரியார்.
2. நான் கண்ட பயங்கரக் கனவு.
3. நான் டாக்டர் ஆனால்......
4. நான் சென்ற புகையிரதப் பயணம்.

ஆ. பின்வரும் தலைப்பில் கடிதமொன்று எழுதுங்கள்.

'திருக்குறள்' புத்தகம் ஒன்று உமக்குத் தேவைப்படுகிறது எனக் கொண்டு அதனைத் தந்துதவும்படி உமது நண்பனுக்கு அல்லது நண்பிக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................



"ஒட்ட வைத்தாலும் உடைந்தபொருள் என்ற பெயர் மாறாது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. கீழே தரப்பட்டுள்ள பழமொழிகளுக்குப் பொருத்தமான வாக்கியங்களைக் கட்டத்தினுள் தெரிந்து இலக்கமிடுங்கள்.

1. ஒற்றுமையே பலம்.
2. செல்வத்துள் சிறந்த செல்வம் நோயற்ற வாழ்வு.
3. தனக்கெனத் தங்க சுதந்திரமான ஓரிடம் வேண்டும்.
4. இளமையிற் கல்வி நீங்காது மனத்தில் பதியும்.
5. ஒருவனின் இளமை காலத்தின் கண்ணாடி.
6. எப்பொழுதும் முன்னேற்பாட்டுடன் இருக்க வேண்டும்.

அ. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து. (.........)

ஆ. விளையும் பயிரை முளையில் தெரியும். (.........)

இ. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு. (.........)

ஈ. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். (.........)

உ. எலி வளையானாலும் தனி வளை வேண்டும். (.........)

ஊ. வெள்ளம் வருமுன் அணை கட்டவேண்டும். (.........)

06. கீழேயுள்ள இரட்டைக் கிளவிகளைப் பொருத்தமாக வைத்துப் பூர்த்தி செய்யுங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| பளபள | தாரைதாரை | குளுகுளு | நறநற | கடகட |

அ. துரியோதனன் கோபமிகுதியால் பற்களை .............. எனக் கடித்தான்.

ஆ. மலை நாட்டில் கறவைப் பசுக்கள் ............... எனக் காட்சியளித்தன.

இ. மணமகளின் கழுத்தில் ஆபரணங்கள் ................ என மின்னின.

ஈ. கடுகதிப் புகைவண்டி ........................ என வேகமாக ஓடியது.

உ. துச்சாதனன் துகிலுரிந்தபோது திரௌபதையின் கண்களிலிருந்து கண்ணீர் ............................ யாகப் பெருகியது.



“குற்றம் குற்றமே, திருந்தி வாழ்தலே தூய்மையான நெறியாகும்”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையை உரியபடி நிரப்புங்கள்.

| | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| உ-ம் நான் | பாடினேன் | பாடுகிறேன் | பாடுவேன் |
| அ. நாம் | ..................... | ஓடுகிறோம் | ..................... |
| ஆ. அவன் | அடைந்தான் | ..................... | ..................... |
| இ. அவர்கள் | ..................... | ..................... | வளர்ப்பர் |
| ஈ. அது | ..................... | பாய்கிறது | ..................... |
| உ. அவை | வாடின | ..................... | ..................... |

08. கீழே தரப்பட்டுள்ள சொற்கூட்டங்களுள் உள்ள சொற்களை முற்றுவினை, எச்சவினை என இனங்கண்டு பகுக்குக.

பிறந்தேன், பொறிக்கப்பட்டு, வளர்ந்த, குனிந்தான், செய்து, தெளிவாக, வருவார், திருத்தி, முடித்தார், ஓடி, சுவையானது, கண்டு

| முற்றுவினை | எச்சவினை |
|---|---|
| ............................ | ............................ |
| ............................ | ............................ |
| ............................ | ............................ |
| ............................ | ............................ |
| ............................ | ............................ |



“பழிப்பு அழிவைக் கொடுக்கும்; பரிவு வாழ்வை வளர்க்கும்”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. பின்வரும் இரட்டைமொழிகளை வைத்து வாக்கியம் அமையுங்கள்.

அ. மளமள : ..................................................................................

ஆ. டாங்டாங் : ..................................................................................

இ. கலகல : ..................................................................................

ஈ. விருவிரு : ..................................................................................

உ. புறுபுறு : ..................................................................................

10. அ. எழுவாய் (முதலாம்) வேற்றுமை கொண்ட வாக்கியங்கள் இரண்டு எழுதுங்கள்.

1. ..................................................................................

2. ..................................................................................

ஆ. இரண்டாம் வேற்றுமை உருபு கொண்ட வாக்கியங்கள் இரண்டு எழுதுங்கள்.

1. ..................................................................................

2. ..................................................................................

11. பொருத்தமாக வரவேண்டிய தோன்றாய்ச் செயப்படுபொருளை அடைப்பினுள் எழுதுங்கள்.

அ. நான் ஆடினேன் (.....................)

ஆ. மாலதி சேகரித்தாள் (.....................)

இ. நீ சாப்பிட்டாயா? (.....................)

ஈ. ஆசிரியர் கற்பித்தார் (.....................)

உ. தந்தையார் சென்றார் (.....................)

ஊ. பாரதியார் பாடினார் (.....................)



"பாம்பைவிடக் கொடிய நஞ்சினர் தீயவர்களே ஆவர்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. உங்கள் பயிற்சிக் கொப்பியில் கீழ்உள்ள தலைப்பில் கட்டுரையொன்று எழுதுங்கள்.

**எனது பொழுதுபோக்கு**

..............................................................................................

..............................................................................................

13. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் வரவேண்டிய தோன்றாய் எழுவாயை அடைப்பினுள் எழுதுங்கள்.

அ. முத்திரையைச் சேர்த்து வை (....................)

ஆ. அல்லும் பகலும் புகழ்ந்து போற்றுவோம் (....................)

இ. முட்டை இட்டது (....................)

ஈ. அஞ்சல் அலுவலகத்தைப் பார்க்கச் சென்றேன் (....................)

உ. பாம்புக்குப் பால் வார்க்காதே (....................)

14. பாடப்புத்தகத்தை ஆதாரமாகக் கொண்டு விடை எழுதுங்கள்.

அ. ஆடு, பால் தருவதற்கு எலியிடம் என்ன கேட்கிறது?

..............................................................................................

ஆ. எலியின் யோசனையைக் குழப்பச் சத்தமிட்டவை யாவை?

..............................................................................................

இ. எலி கல்லெடுக்க யாரிடம் போவதாகக் கூறியது?

..............................................................................................

ஈ. எலி 'நிறைய நடுவோம்' என்றது எதனை?

..............................................................................................

உ. 'மழையே மழையே மெத்தப் பெய்' என்ற பாடலை உறுப்பமைய எழுதுக. எழுதிய பின் உரத்து இசையோடு பாடுக.

..............................................................................................



"பிறரிடம் பேசும்போது சொற்களை அளந்து பேசவேண்டும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. கீழே தரப்பட்டுள்ள அரும்பதங்களுக்குரிய பொருள் தரும் சொற்களை எழுதுவோம்.

| சூடு, கவனம், கட்டிடம் கட்டுபவர், சீவன், அங்கேயொரு, விடயம் |
|---|

அ. வெக்க ........................ ஈ. உயிர் ..........................

ஆ. விசயம் ........................ உ. கொத்தனார்........................

இ. பத்திரம் ........................ ஊ. அங்கையொரு....................

16. கீழே தரப்பட்டுள்ள இணைப்பிடைச் சொற்களை வைத்து வாக்கியம் அமைப்போம்.

(உ-ம்) I. எனக்குக் குளிருகிறது அதனால் குளிக்கமாட்டேன்.

II. கமலா கணிதம் செய்வாள் ஆனால் வரலாறு செய்ய மாட்டாள்.

❖ 'ஆனால்' என்ற இணைப்பிடைச் சொல்லை வைத்து வாக்கியம் ஐந்து எழுதுங்கள்.

அ. ....................................................................................................

ஆ. ....................................................................................................

இ. ....................................................................................................

ஈ. ....................................................................................................

உ. ....................................................................................................

17. கீழேயுள்ள பந்தியை வாசித்த பின்பு பெயர்ச் சொற்களைப் பந்தியில் தெரிந்தெடுத்து எழுதுங்கள்.

பரமன் ஓர் உழவன். அதிகாலையில் வயலுக்குச் சென்றான். களை பிடுங்கினான். உழவனின் மகன் கணபதி தந்தைக்கு உதவி செய்ய வில்லை. கூட்டாளிகளுடன் மைதானத்தில் காலையில் பந்தடித்து, விளையாடினான். உதவியின்றித் தான் தனித்து நிற்பது பற்றி தந்தை யின் மனம் எந்த நேரமும் பதைபதைத்து நாத்தளுதளுத்தது. என் செய்வது? எல்லாம் விதியின்மேல் பழியைப் போட்டான். வயல் வரம்பில் நடப்பட்டிருந்த கத்தரிச் செடியை ஆடு தின்றிருப்பதைக் கண்டான். கவலையினால் அவனது பதைத்திருந்த மனம் மட்டுமல்ல



"அரிய பொருட்களைக் காப்பதுபோல் அரிய பெரியார்களையும் காப்பது முக்கியம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்களும் நடுங்கின. ஆடுகளின் செயலை எண்ணிக் கோபமடைந் தான். என்ன செய்வது 'பிற உயிர்கள் மேல் அன்பு காட்ட வேண்டும்' என்று ஆசிரியர் கற்பித்தது அவன் நினைவில் வந்து மறைந்தது. அப்படியே நீலம் போர்த்த வானத்தை நோக்கினான். தான் எண்ணிய படி வேலைகளைத் தொடர வயல் வரம்புகளின்மீது ஓட்டமும் நடையுமாகச் சென்றான்.

அ. பொருட்பெயர் - ......................................

ஆ. இடப்பெயர் - ......................................

இ. காலப்பெயர் - ......................................

ஈ. சினைப்பெயர் - ......................................

உ. குணப்பெயர் - ......................................

ஊ. தொழிற்பெயர் - ......................................

18. பின்வரும் சொற்களைச் சேர்த்து (புணர்த்தி) எழுதுங்கள்.

அ. சாரை + பாம்பு = ......................................

ஆ. பாக்கு + உரல் = ......................................

இ. மண் + அகம் = ......................................

ஈ. தமிழ் + பிள்ளை = ......................................

உ. குரங்கு + குட்டி = ......................................

ஊ. கிடுகு + வேலி = ......................................

19. பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுங்கள்.

அ. ஆட்டுக்குட்டி = ......................................

ஆ. மாட்டெரு = ......................................

இ. பனையோலை = ......................................

ஈ. கோழிக்குஞ்சு = ......................................

உ. பூமாலை = ......................................

ஊ. விளாங்காய் = ......................................



"தீமைகளை அகற்றித் தெளிந்த வழியை நமக்குக் காட்டுவதே அறநெறியாகும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலகுப் பரீட்சை - 19

# வெண்ணிலாவே

01. கீழே தரப்பட்டுள்ள பாடல்களை இசையோடு பாடுவோம். தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

**பாலைப் போல நிலவு**

1. பாலைப் போல நிலவு வானில்
பவனி வரப் போகுது
கோலக் கடல் அலை கைதட்டிக்
குதூகலிக்கப் போகுது
நீலவானும் கண்சிமிட்டி நின்று பார்க்கப் போகுது
மாலைவேளை மலர்ந்து கங்குல்
மங்கை தோன்றப் போகிறாள்

அ. நிலவு எதைப்போல எவ்வாறு வரப்போகிறது எனக் கூறப்பட்டுள்ளது?

........................................................................................................

ஆ. நிலவைக் கண்டு கடல் அலைகள் எவ்விதம் மகிழ்ச்சி கொள்கிறது?

........................................................................................................

இ. கங்குல் (இரவு) இங்கே எவ்விதம் உவமிக்கப்பட்டுள்ளது?

........................................................................................................

ஈ. நீலவானம் எதனை நின்று பார்க்கப் போகிறது?

........................................................................................................

உ. இப்பாடல் எந்நிகழ்வைப் பற்றிக் கூறுகிறது?

........................................................................................................


"கைப்பொருள் இருந்தால்தான் கவலையற்று இருக்க முடியும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மீனினம் ஓடிப் பரக்கு தம்மா! - ஊடே
வெள்ளி ஓடமொன்று செல்லுதம்மா!
வானும் கடலாக மாறுதம்மா! - இந்த
மாட்சியி லுள்ளம் முழுகுதம்மா!

முல்லை மலர்ப்பந்தல் இட்டனரோ? - தேவர்
முத்து விதானம் அமைத்தனரோ?
வெல்லு மதியின் திருமணமோ? - அவன்
விண்ணில் உலாவரும் வேளையிதோ?

அம்புயம் வாடித் தளர்ந்ததம்மா! - அயல்
ஆம்பலும் கண்டு களிக்கு தம்மா!
இம்ப ருலகின் இயல்பிதம்மா! - மதிக்கு
இன்னார் இனியாரும் உண்டோ அம்மா?

- கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை

பரக்குதல் - பரவுதல்; ஓடம் - தோணி; மாட்சி - சிறப்பு; விதானம் - மேடை; அம்புயம் - தாமரை; ஆம்பல் - அல்லி; களித்தல் - மகிழ்தல்; இம்பர் - தேவர்; இயல்பு - தன்மை.

அ. எவ்விதமான சிறப்பில் உள்ளம் மூழ்கின்றது?

..........................................................................................

ஆ. சந்திரன், விண்ணில் உலாவரும் வேளை எத்தகையது எனக் கவிமணி காட்டுகின்றார்?

..........................................................................................

இ. வாடித்தளர்வது, கண்டு களிப்பது எம் மலர்கள்?

..........................................................................................

ஈ. தேவர் எதனை வானத்தில் அமைத்துள்ளனரோ எனக் கூறப்பட்டுள்ளது?

..........................................................................................


"போராட்டம் பண்பைப் போக்கி வாழ்வைப் பாழ்மையாக்கி விடும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செந்தமிழ் நாடு

3. செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே
தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே

கல்வி சிறந்த தமிழ்நாடு - புகழ்
கம்பன் பிறந்த தமிழ் நாடு - நல்ல
பலவிதமாயின சாத்திரத்தின் - மணம்
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு

- பாரதியார்

அ. காதினில் தேன்வந்து பாய்வது போல் இருப்பது எப்போது?

..............................................................................................

ஆ. எந்தப் பேச்சினிலே சக்தி பிறக்கும் எனக் கூறப்பட்டுள்ளது?

..............................................................................................

இ. யார் பிறந்ததால் தமிழ் நாட்டுக்குச் சிறப்பு ஏற்பட்டது?

..............................................................................................

4. தலைவாரிப் பூச்சூடி உன்னைப் பாட
சாலைக்குப் போ என்று சொன்னார் உன் அன்னை!
சிலை போல ஏனங்கு நின்றாய் - நீ
சிந்தாத கண்ணீரை ஏன் சிந்து கின்றாய்

- பாரதிதாசன்

அ. அன்னை எவ்வாறு அழகுபடுத்திப் பிள்ளையைப் பாடசாலைக்கு அனுப்பி வைத்தார்?

..............................................................................................

ஆ. பிள்ளை பாடசாலையில் எவ்விதம் நிற்கின்றது எனக் கவிஞர் காட்டுகின்றார்?

..............................................................................................



"மனம் தடம் புரண்டால் மதியும் பாதை தவறிவிடும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. பாடப்புத்தகத்தை ஆதாரமாகக் கொண்டு விடை எழுதுங்கள்.

அ. வெண்ணிலா, விண்ணில் எதற்கு இடையில் விளங்குகிறது?

..............................................................................................................

ஆ. நிலவு என அழைப்பதன் காரணம் எதுவெனக் கவிஞர் வினா எழுப்புகின்றார்?

..............................................................................................................

இ. நிலவு உலகுக்கு எவ்விதம் ஒளி தருகிறது?

..............................................................................................................

ஈ. எச் செயல் அநியாயம் எனக் கூறப்பட்டுள்ளது?

..............................................................................................................

உ. துன்பம், தடை யாவும் எவருக்கு ஏற்படும்?

..............................................................................................................

ஊ. வெண்ணிலா எதற்கு உவமை எனக் கவிஞர் கூறுகின்றார்?

..............................................................................................................

எ. இப்பாடலைப் பாடியவர் யார்?
இப்பாடல் எக்கவிதை நூலில் இருந்து பெறப்பட்டது?

..............................................................................................................

03. கீழே தரப்பட்டுள்ள பாடல்களை இசையோடு பாடுவோம்.

**குடிகுடிக்குது**

அ.

வட்ட நிலா வானத்திலே
சுற்றி வருகுது - நன்றாய்
சுற்றி வருகுது அதைச்
சுற்றிச் சுற்றி விண்மீன்கள்
கொட்டமடிக்குது - நன்றாய்க்
கொட்டமடிக்குது!



"ஈனருக்கு இடம் கொடுத்தால் இருக்கும் இடமும் பாழாகும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுப் போன்ற மேனியுடன்
பவனி வருகுது - நன்றாய்
பவனி வருகுது - அதைத்
தொட்டுப் பார்க்க எந்தன் மனம்
துடிதுடிக்குது - மனமோ
துடிதுடிக்குது

- பால நடராசன்

## வட்டநிலா

ஆ. வானத்திலே வட்ட நிலா
எட்டிப் பார்க்குது - அது
வா வாவெனப் பாப்பா யெனைப்
பார்த்து அழைக்குது!

சிந்து மழகை முந்தித் தந்து
சிணுங்கி அழைக்குது - என்
சிந்தை மிகக் குளிர்ந்திடவே
சிரித்து அழைக்குது!

எங்கள் வீட்டுக் கூரை வழியே
எளிதாய் நுழையுது - எனை
ஏற்ற தோழி என்றே யாட
எண்ணி அழைக்குது!

03. பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுங்கள்.

அ. இன்றைய உலகம் அறிவியல் வளர்ச்சி கண்டுள்ளது. (.........)

ஆ. நாம் பல தொழிநுட்ப சாதனங்களைப் பயன்படுத்துகிறோம். (.........)

இ. ஊடகங்கள் மூலம் பல தேசங்களின் அரசியல், கலாசாரம், பொருளாதாரம் பற்றி அறிய முடிகிறது. (.........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. வேற்றுமொழிச் சொற்களுக்குத் தமிழ் மொழியில் உருவாக்கப்படும் சொல்லே கலைச் சொல்லாகும். ( ......... )

உ. கணனி (computer) என்பது கலைச் சொல்லல்ல. ( ......... )

04. கீழே தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்கான கலைச் சொற்களை எழுதுங்கள்.

அ. E - mail மின்னஞ்சல் உ. Internet ..........................

ஆ. Exchange .......................... ஊ. Memory ..........................

இ. Fax .......................... எ. Data Base ..........................

ஈ. Date .......................... ஏ. Password ..........................

05. பின்வரும் கலைச் சொற்களுக்கான ஆங்கில மொழிச் சொற்களை எழுதுங்கள்.

அ. சுட்டி .......................... ஈ. வன்தகடு ..........................

ஆ. உலாவி .......................... உ. விசைப்பலகை ..........................

இ. கோப்பு .......................... ஊ. பதிவிறக்கம் ..........................

06. பின்வரும் இணைமொழிகளை வைத்து இடைவெளி நிரப்புங்கள்.

| | | |
|---|---|---|
| கங்குகரை | ஆறஅமர | நோய்நொடி |
| பாலும்பழமும் | கண்ணீரும்கம்பலையும் | |

அ. நாம் போசாக்குள்ள உணவைச் சாப்பிடுவதன் மூலம் .................. அற்று வாழலாம்.

ஆ. இரணைமடுக் குளத்தின் அணைக்கட்டு உடைந்ததால் நீர் ............ இன்றிப் பாய்ந்தது.

இ. கோவலன் இறந்த செய்தி கேட்ட கண்ணகி ................. ஆக அரச சபைக்கு ஓடினாள்.


"நீண்டகாலம் வாழ்வதற்கு அளவான உணவே அருமருந்தாகும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. திருமணத் தம்பதிகள் .................... போல் இன்பத்தில் திளைத்தனர்.

உ. வினாக்களுக்கு விடை எழுத முன்பு முதலில் ...................... யோசித்தல் வேண்டும்.

07. கட்டத்திலுள்ள சொல்லை வைத்து இடைவெளி நிரப்புங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| மின்காந்த | இணையம் | மின்சக்தி | கணனி | தொலைநகல் |

அ. நாம் தொலைபேசியில் பேசும் போது ஒலிச்சக்தி ................ யாக மாறுகிறது.

ஆ. வானொலியில் ஒலிச்சக்தி .................. அலைகளாக மாற்றப்பட்டு ஒலிபரப்பப்படுகிறது.

இ. ∴ பாக்ஸை .................. என்று தமிழில் கூறுகிறோம்.

ஈ. இன்ரநெற் ................. என்ற தமிழ்ச் சொல்லால் அழைக்கப்படுகிறது.

உ. இன்றைய உலகம் ...................... மயமாக்கப்பட்டது.

08. நீதி வாக்கியங்களில் விடுபட்ட சொல்லை எழுதுங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| விரும்பு | கனம் | கைவிடேல் | கடவுளை | முன்னறி |

அ. அன்னையும் பிதாவும் ........................... தெய்வம்.

ஆ. அறம் செய ............................

இ. .................. நம்பியோர் கைவிடப்படார்.

ஈ. பெரியோரைக் ..................... பண்ணு.

உ. ஊக்கமது ..........................



"அறிவில்லார்க்கு அவர்தம் நலத்தின் மீதே நோக்கம் இருக்கும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. 'அ' பகுதிக்குப் பொருத்தமான பிற்பகுதியை 'ஆ' பகுதியில் தெரிந்து பழமொழி ஆக்குங்கள்.

| 'அ' பகுதி | 'ஆ' பகுதி |
|---|---|
| அ. கந்தையானாலும் | காலைவிடு |
| ஆ. ஆபத்துக்குப் | அடிசறுக்கும் |
| இ. ஆழமறிந்து | கசக்கிக்கட்டு |
| ஈ. பழகப்பழக | பாவமில்லை |
| உ. ஆனைக்கும் | பிற்பகல் விளையும் |
| ஊ. முற்பகல் செய்யின் | பாலும் புளிக்கும் |

10. அடுக்குத் தொடர்களை இனங்கண்டு இடைவெளிகளை நிரப்புங்கள்.

| | | |
|---|---|---|
| மெல்லமெல்ல | வளைந்துவளைந்து | வண்ணவண்ண |
| முத்துமுத்தாக | புள்ளிப்புள்ளி | கட்டுக்கட்டாக |

அ. மலையில் வீழ் அருவி நீர் ........................ ஓடியது.

ஆ. குழந்தையின் கண்களில் இருந்து கண்ணீர் ............... உதிர்ந்தது.

இ. வங்கியில் காசு நோட்டுகள் .............. அடுக்கி வைக்கப்பட்டிருந்தது.

ஈ. அணிற்பிள்ளை அணிற்பிள்ளை எங்கே போகிறாய்? ................. மாம்பழத்தைத் தின்னப் போகிறேன்.

உ. ................. வீசும் தென்றற் காற்று உடலுக்கு இதமாக இருந்தது.

ஊ. .................... மானே எங்கே போகிறாய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. பின்வரும் அடுக்குமொழிகளை வைத்து வாக்கியம் அமையுங்கள்.

அ. புதிதுபுதிது : ..........................................................

ஆ. வண்ணவண்ண: ..........................................................

இ. ஊர்ஊர் : ..........................................................

ஈ. சின்னச்சின்ன : ..........................................................

உ. பக்கம்பக்கம் : ..........................................................

12. தரப்பட்ட பல சொற்களுக்கு ஒரு சொல் எழுதுங்கள்.

(உ-ம்) தானே தன்னைப் பற்றி எழுதுவது ....சுயசரிதை....

அ. இளம் பயிருக்கு நீர் பாய்ச்சுதல் ..............................

ஆ. உலகின் முடிவு காலம் ..............................

இ. பொருளைத் தேடி ஈயாது வைத்திருப்பவன் ..............................

ஈ. முனிவர்கள் தங்குவதற்கு இலைதளைகளால் வேய்ந்த குடிசை ..............................

உ. தனக்கே சொந்தமாக முழுப்பொருளையும் அனுபவித்தல் ..............................

13. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் தடித்த எழுத்தில் உள்ள பெயர்ச் சொல், உருபு என்பவற்றை வேறுபடுத்தி அட்டவணை யுள் நிரப்புங்கள்.

அ. பருப்பைத் தராசில் நிறுத்தேன்.

ஆ. நாயோடு பூனையும் சென்றது.

இ. உழவனுக்கு உரியது வேளாண்மை.

ஈ. இவ்வீடு **பனையோலையால்** வேயப்பட்டது.

உ. பாலன் **பதுமனோடு** சேர்ந்து விவசாயம் செய்தான்.

ஊ. **மாணவருக்கு** உரியது வெள்ளைச் சீருடை ஆகும்.



"வல்லமை நமக்கு மாத்திரமல்ல பிற ஏனையோரிடமும் இருக்கும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பெயர்ச்சொல் | வேற்றுமை உருபு |
|---|---|
| ............................ | ................................ |
| ............................ | ................................ |
| ............................ | ................................ |
| ............................ | ................................ |
| ............................ | ................................ |
| ............................ | ................................ |

14. கீழே தரப்பட்டுள்ள உருபுகளை அடைப்பினுள் எழுதுங்கள்.

அ. குருவிக்குப் பாலன் உணவளித்தான். (................)

ஆ. பாப்பாவுடன் அம்மாவும் கோயிலுக்குச் சென்றனர். (................)

இ. பாலனோடு பாரதியும் சென்றனர். (................)

ஈ. கோழிக்கு குஞ்சு பாரமல்ல. (................)

உ. வைக்கோலால் வேய்ந்த வீடு குளிருக்கு உகந்தது. (................)

15. பின்வரும் பந்தியை வாசித்த பின்பு விடை எழுதுங்கள்.

பேசுகின்ற ஒரு சொல், கேட்பவரை மகிழ்விக்கும், வேறொரு சொல் கேட்பவருக்கு வருத்தத்தை உண்டாக்கும். ஒரு சொல் வெல்லும்; பிறிதொரு சொல் கொல்லும். ஒரு சொல் சினத்தைத் தூண்டும்; இன்னொரு சொல் ஆறுதல் தரும். ஒரு சொல் இன்பம் தரும், மற்றொரு சொல் துன்பம் தரும். எனவே ஒன்றைப் பேசுவதற்கு முன் சிந்தித்துச் சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பேச வேண்டும். மொழியைக் கேட்டு மகிழும் வண்ணம் பயன்படுத்த வேண்டும்.

அ. நாம் எப்படிப் பேசுதல் வேண்டும் என்பதற்கு விளக்கம் தருக.

........................................................................................................

........................................................................................................



"நம்மைவிட வல்லமை மிக்கார் இருப்பர் என்பதை மறந்துவிடக் கூடாது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. பேசுவதற்கு முன்னர் எவ்விதம், எதனைச் சிந்திக்க வேண்டும்?

.......................................................................................

.......................................................................................

16. பின்வரும் தலைப்புகளில் ஒன்றைப் பற்றிக் கட்டுரை எழுதுங்கள்.

அ. கிழிந்த குடையின் சுயசரிதை.

ஆ. கோபமடையாதே.

இ. மூத்தோர் வார்த்தை அமிர்தம்

ஈ. பாடசாலையில் நிகழ்ந்த கலைவிழா.

17. கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்துக்குப் பொருத்தமான பழமொழியின் கீழ்க் கீறிடுக.

அ. எதிர்கால உயர்வை இளமையில் அறியலாம்.
1. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்.
2. விளையும் பயிரை முளையில் தெரியும்.
3. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.

ஆ. முன்செய்த வினைகள் பின்வந்து சூழும்.
1. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
2. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
3. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.

இ. தாய்க்குத் தன் குழந்தை கிடைத்தற்கரியதே.
1. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு.
2. பெரியோரைக் கனம் பண்ணு.
3. மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.

ஈ. ஒற்றுமையே உயர்வைத் தரும்.
1. ஆறின கஞ்சி பழங்கஞ்சி.
2. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.
3. ஆறிலும் சாவு நூறிலும் சாவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. ஆதரவற்றவனுக்கு இறைவனே துணையாவான்.

1. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.
2. எறும்பூரக் கற்குழியும்.
3. திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை.

18. கீழே தரப்பட்டுள்ள பாடல்களை இசையோடு பாடுவோம். வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

**சேமிப்பு வேண்டும்**

சேமிக்க வேண்டும் - காசு
சேமிக்க வேண்டும்
சிக்கனமாய்ச் செலவு செய்து
காண்பிக்க வேண்டும்.

தேவைக்குத் தான் மின்சாரத்தை
எரித்திடவேண்டும் - சும்மா
தேவையில்லா மின்சாரத்தை
அணைத்திட வேண்டும்.

எரிசக்தி வீணாவதை
மிச்சம் ஆக்குவோம்
எதிர்காலத் தலைமுறையின்
அச்சம் போக்குவோம்.

- குழ. கதிரேசன்

பொருளுணர் திறன் பயிற்சி

அ. சேமிக்கவும், காண்பிக்கவும் வேண்டுவன யாவை?

.................................................................................................

ஆ. மின்சாரத்தை எப்படிப் பயன்படுத்த வேண்டும்?

.................................................................................................


இ. எதிர்காலத் தலைமுறையின் அச்சம் போக்க நாம் செய்ய வேண்டுமென (மூன்று விடயம்) எழுதுங்கள்.

I .................................................................................
II. .................................................................................
III. .................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20. ஒழுக்கம் உடைமை



'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்'

192.1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுக்கம் உடைமை

01. பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுங்கள்.

அ. அறங்கூறும் நூல்களுள் திருக்குறளும் ஒன்று. (.........)

ஆ. திருக்குறளில் மனிதர் போற்றும் விழுமியக் கருத்துக்கள் உண்டு. (.........)

இ. திருக்குறளை 'உலகப் பொதுமறை' என்பர். (.........)

ஈ. திருவள்ளுவரின் மறுபெயர் பொய்யாமொழிப் புலவர் ஆகும். (.........)

உ. திருக்குறள் 133 அதிகாரம் 1330 குறட் பாக்களைக் கொண்டது. (.........)

ஊ. திருக்குறள் - அறம், பொருள், இன்பம் என முப்பால்களைக் கொண்டது. (.........)

02. கீழே தரப்பட்டுள்ள பாடல்களை இசையோடு பாடுவோம். தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

**அறிவியல் சிந்தனை**

அறிவியல் சிந்தனை அறிவை வளர்க்கும்
ஆற்றலும் அறிவும் உலகை இணைக்கும்
அருந்தமிழ் மொழியில் அறிவியல் சிறந்தால்
ஆழ்கடல் கடந்தும் நம்மொழி நிலைக்கும்

மருத்துவம் பொறியியல் தகவல் தொழிநுட்பம்
மண்பதை காக்கும் வேளாண் அறிவியல்
உறவை வளர்க்கும் கணிப்பொறி படைப்புகள்
உன்னால் மேலும் உருப்பெறச் செயற்படு

- கவிஞர் செம்பை சேவியர்



"ஊரார் போற்ற வாழவேண்டுமேயொழிய ஊரார் தூற்ற வாழக்கூடாது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தமான விடையைத் தெரிந்து கீறிடுங்கள்.

அ. உலகை இணைப்பவை?
1. அறிவியலும் சிந்தனையும்
2. ஆற்றலும் அறிவும்
3. அறிவும் வளர்ச்சியும்

ஆ. ஆழ்கடல் கடந்தும் தமிழ்மொழி நிலைக்க,
1. தமிழ்மொழியில் சிந்தனை சிறக்க வேண்டும்.
2. தமிழ்மொழியில் அறிவியல் சிறக்க வேண்டும்.
3. தமிழ்மொழியில் கணனிப்பொறி படைக்க வேண்டும்.

## சுற்றுச் சூழல் காத்திடுவோம்

சுற்றுச்சூழல் காத்திடுவோம்
சுகமாய் வாழ வழிவகுப்போம்
வெற்றி வார்த்தை இதுவல்ல
விளையும் நன்மையோ பலப்பல

கண்ட பொருளை எரிப்பதனால்
காற்று மாசு அடைகிறது
அண்டவெளியில் ஓசோனும்
அகிலம் பாதிப்படைகிறது

கொதிக்க வைத்த பிறகேதான்
குடிநீர் குடிப்பது நலமாகும்
எதற்கும் விழிப்பாய் இருந்தாலே
எல்லா நன்மையும் கிடைத்திடுமே

- பி.வி. கிரி

அ. பொருத்தமான விடையைத் தெரிந்து கீறிடுங்கள்.
ஓசோன் அதிகம் பாதிப்படையக் காரணமாவது
1. நீரைக் கொதிக்க வைப்பது
2. கண்ட பொருளை எரிப்பது
3. மக்கள் விழிப்பாக இல்லாதது


"எல்லோரும் பகைவரானால் எவரும் அன்பு, ஆதரவு காட்ட மாட்டார்கள்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. எதனை வெற்று வார்த்தையாகக் கொள்ளக் கூடாது? எதனால்?

.......................................................................................................

இ. நாம் விழிப்பாய் இருப்பதற்குச் சான்றாக ஒரு உதாரணம் தருக.

.......................................................................................................

03. கட்டத்தில் உள்ள கருத்து விளக்கங்களை உரிய உவமைச் சொற்றொடரில் குறியுங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| பிரிவுத்துயர் | கவருதல் | கலக்கம் | வெளிவேடம் | அனுபவம் |

அ. இடியேறு கேட்ட நாகம் போல ..........................................

ஆ. இனம் பிரிந்த மான் போல ..........................................

இ. உருத்திராக்கப் பூனை போல ..........................................

ஈ. இரும்பும் காந்தமும் போல ..........................................

உ. சூடுகண்ட பூனை போல ..........................................

04. கீழே தரப்பட்டுள்ள வினைச் சொற்களை வைத்து மூன்று காலங்களையும் உணர்த்துமாறு வாக்கியம் அமையுங்கள்.

(உ-ம்) செல் : நேற்று நான் பாடசாலைக்குச் சென்றேன். இன்று நான் பாடசாலைக்குச் செல்கின்றேன். நாளை நான் பாடசாலைக்கு செல்வேன்.

அ. உண் : ..........................................................................

.......................................................................................................

ஆ. படி : ..........................................................................

.......................................................................................................

இ. ஓடு : ..........................................................................

.......................................................................................................



"குற்றம் குறைகளை எடுத்துக் கூறும் பொழுதும் அறம் பிறழாமல் பேசவேண்டும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. படித்து : ..................................................................................................

..................................................................................................................

உ. பாடி : ......................................................................................................

..................................................................................................................

05. அடைப்பினுள் உள்ள சொற்களுள், பொருத்தமானவற்றைத் தெரிந்து இடைவெளி நிரப்புங்கள்.

அ. அறிவில்லாதவர் சொல்லும் ............... வார்த்தைகளைக் கற்றறிந்தோர் பொறுப்பர். (புகழ், நிந்தை)

ஆ. ........................ கேட்பவன் ஒருபோதும் உய்ய மாட்டான். (நற்புத்தி, துர்ப்புத்தி)

இ. பெற்றோரை ஆதரிக்காதவன் ஒரு போதும் .................. புகுவதில்லை. (சுவர்க்கம், நரகம்)

ஈ. .................. முகமுள்ள ஒரு குரங்காயினுங் காணக் கிடைக்கவில்லை. (நல்ல, கெட்ட)

உ. கொடுக்கக் கொடுக்கச் ............... பெருகும். (வறுமை, செல்வம்)

06. தரப்பட்டுள்ள சொற்கூட்டங்களுள் ஒரு சொல் வேறுபட்டது. அதன் கீழ்க் கோடிடுங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| அ. | வையகம், | அகிலம், | அவனி, | விடுகை |
| ஆ. | மகிழ்ச்சி, | இன்பம், | சந்தோஷம், | பனுவல் |
| இ. | அல்லல், | உவகை, | களிப்பு, | சந்தோஷம் |
| ஈ. | வானம், | தாரகை, | விசும்பு, | விண் |
| உ. | உணவு, | வதந்தி, | ஆகாரம், | சாப்பாடு |



"ஆதாயம் என்பது நன்மை என்றாலும் அதனை நல்ல நெறியில் பெறவேண்டும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. தரப்பட்டுள்ள வாக்கியத்தில் வரவேண்டிய காலத்தை உணர்த்தும் வினைச் சொற்களைக் கீறிட்ட இடத்தில் எழுதுங்கள்.

அ. பாத்திமா சந்தையிலிருந்து ............................ (இறப்பு)
பாத்திமா சந்தையிலிருந்து ............................ (நிகழ்வு)
பாத்திமா சந்தையிலிருந்து ............................ (எதிர்வு)

ஆ. பார்வதி பனங்கிழங்கு ............................ (இறப்பு)
பார்வதி பனங்கிழங்கு ............................ (நிகழ்வு)
பார்வதி பனங்கிழங்கு ............................ (எதிர்வு)

இ. குருவி மரத்திலிருந்து ............................ (இறப்பு)
குருவி மரத்திலிருந்து ............................ (நிகழ்வு)
குருவி மரத்திலிருந்து ............................ (எதிர்வு)

08. பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமையுங்கள்.

அ. அரம் : ..........................................................................
அறம் : ..........................................................................

ஆ. விழா : ..........................................................................
விளா : ..........................................................................

இ. தாலி : ..........................................................................
தாழி (குடம்) : ..................................................................

ஈ. கண்ணி : ..........................................................................
கன்னி : ..........................................................................

உ. கிலி (பயம்) : ..................................................................
கிளி : ..........................................................................



"தீய வழியில் பெறும் நன்மை முடிவில் அல்லலைத் தந்துவிடும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. கோடிடப்பட்ட இடங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப் பினுள் இருந்து தெரிந்தெடுத்து எழுதுங்கள்.

அ. ...................... பெரியோர் ......................... இழிகுலத்தோர் என்றார் ஔவைப் பிராட்டியார். (இடாதார், இட்டார்)

ஆ. கற்றாரைக் ................. விரும்புவர்; ...................... விரும்பார். (கற்றாரே, கல்லாதார்)

இ. பனி பெய்து குளம் .............. மழை பெய்தே குளம் .................... (நிறையும், நிறையாது)

உ. ............... அன்றி .............. ஒருவரும் மகிழ்வெய்த மாட்டார்கள். (இன்சொல்லால், வன்சொல்லால்)

10. கீழே கட்டத்துள் தரப்பட்டுள்ள சொற்கூட்டங்களில் இருந்து பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மைதானம் | வால் | கரும்பலகை | கிராமம் | வட்டம் | வேர் |
| கண்ணாடி | மாரி | மகிழ்ச்சி | பறத்தல் | பாடுதல் | நான் |

அ. பொருட்பெயர் : ................................ ................................

ஆ. இடப்பெயர் : ................................ ................................

இ. காலப்பெயர் : ................................ ................................

ஈ. சினைப்பெயர் : ................................ ................................

உ. குணப்பெயர் : ................................ ................................

ஊ. தொழிற்பெயர் : ................................ ................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. கீழே தரப்பட்டுள்ள ஓரெழுத்துச் சொற்களைப் பொருத்தமாக இடைவெளியில் நிரப்புங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| பா | நா | ஆ | தை | தீ |

அ. .................. கதறும் சத்தம் கேட்டு கன்று ஓடிச் சென்றது.

ஆ. வருடத்தில் உள்ள மாதங்களில் .............. மாதமும் ஒன்றாகும்.

இ. சங்கப் புலவோர் பொருள் பொதிந்த ............... வகைகளைப் பாடினர்.

ஈ. .............. கட்டிடத்தின் எல்லாப் பகுதியிலும் பரவிச் சேதத்தை ஏற்படுத்தியது.

உ. எதனைக் காக்காவிட்டாலும் .............. காக்க என்றனர் பெருந் தகையினர்.

12. பாடப்புத்தகத்தை ஆதாரமாகக் கொண்டு விடை எழுதுங்கள்.

அ. ஒழுக்கத்தினை எவ்வாறு காக்க வேண்டும்?

.............................................................................................

ஆ. ஒரு நற்குடிப் பிறப்பின் பண்பு எது?

.............................................................................................

இ. அந்தணரின் ஒழுக்கம் எவ்வாறு அமைதல் வேண்டும்?

.............................................................................................

ஈ. ஒருவன் எப்போது உயர்வு இன்றி இருப்பான்?
பொறாமை உடையவனிடம் எது இருக்காது?

.............................................................................................

.............................................................................................

உ. யார் ஒழுக்கத்தில் இருந்து தவறமாட்டார்?

.............................................................................................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊ. ஒழுக்கத்தின் உயர்வு யாது?
ஒழுக்கத்தில் தவறுவதால் என்ன ஏற்படும்?

.................................................................................................

.................................................................................................

எ. நல்லொழுக்கம், தீயொழுக்கம் எவ்வெவற்றைத் தரும்?

.................................................................................................

ஏ. நல்லொழுக்கம் உடையவர் ஒருபோதும் எதனைச் சொல்லார்கள்?

.................................................................................................

ஐ. பல நூல்களைக் கற்றிருந்தாலும் அறிவில்லாதவர் யாவர் எனத் திருக்குறள் கூறுகிறது?

.................................................................................................

13. 'ஒழுக்கம் உயர்வு தரும்' என்ற தலைப்பில் பயிற்சிக் கொப்பியில் கட்டுரையொன்று எழுதுங்கள்.

.................................................................................................

அ. கீழேயுள்ள சொற்களுடன் வேறு எந்தச் சொல்லோ அல்லது சொல் உறுப்புக்களோ இணைந்து வரவில்லை.

❖ அவை தனியாக நின்று பொருள் தருகின்றன.

| | | | |
|---|---|---|---|
| சங்கு | உள்ளம் | இசை | தாடி |
| தட்டம் | தாமதம் | புளிப்பு | பூனை |
| குருவி | வாட்டம் | கூடு | கட்டில் |

ஆ. கீழே தரப்படும் சொற்களுடன் இரண்டு சொற்கள் இணைந்துள்ளன.

| | | |
|---|---|---|
| மாம்பழம் | பருப்புக்கறி | சட்டைப்பை |
| குருவிக்கூடு | குதிரைவண்டி | வாழைப்பழம் |
| பனையோலை | கூலிவேலை | பாம்புப்புற்று |

பனை + ஓலை = பனையோலை



"சோம்பலை நீக்கவல்ல சக்தி விடியலுக்கே மிகுதியாக உண்டு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. கீழே தரப்படும் சொற்களில் சொல் உறுப்புகள் புணர்ந்துள்ளன.

கண்டான், உண்டான், பாடினான், ஆடினான்,
வந்தான், கற்றான், ஓடினான், உண்டாள்
உண் + ட் + ஆன், கண் + ட் + ஆன், கல் + ற் + ஆன்

ஈ. (உ-ம்) கண் + மணி = கண்மணி

கண் ↓ நிலைமொழி
மணி ↓ வருமொழி

14. பின்வரும் சொற்களைச் சேர்த்து (புணர்த்தி) எழுதுங்கள்.

அ. கல் + வயல் = ........................................
ஆ. மாலினி + வந்தாள் = ........................................
இ. காலை + பொழுது = ........................................
ஈ. மா + பழம் = ........................................
உ. வட்டம் + வடிவம் = ........................................
ஊ. படம் + வேலை = ........................................
எ. பொன் + குடம் = ........................................
ஏ. மரம் + வேர் = ........................................
ஐ. புத்தகம் + கடை = ........................................
உ. பணம் + வரவு = ........................................



"ஒன்றுக்கும் பயனில்லாதவருடன் சேர்ந்தால் நாமும் பயன் இல்லாதவர்களாய் ஆகிவிட நேரும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. கீழே தரப்பட்டுள்ள பாடப்பகுதியைப் படித்தபின்பு தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

எங்கள் நாடு இலங்கை. அது ஒரு அழகிய தீவு. அதன் மத்தியில் வானத்தை அளாவும் பல மலைகள் இருக்கின்றன. அவற்றிலிருந்து பெருகிச் 'சலசல' என்றோடும் பல சிற்றாறுகளை அவ்விடத்தில் காணலாம். ஆற்றுப் பாய்ச்சலினாலும் குறைவற்ற மழையினாலும் பல தென்னஞ் சோலைகளும், ஆகாயத்தை அளாவும்படி உயர்ந்த கமுக மரங்களும் வளர்ந்திருக்கும். பல குளங்கள் அங்குமிங்குமாகக் காணப்படும். அவற்றின் பக்கங்களிலே கதிர்களோடு கூடிய நெல் வயல்கள் பலவற்றைக் காணலாம். மலைகளின்மேல் தேயிலைச் செடிகளும், இறப்பர் மரங்களும் செழித்து நிற்கின்றன. இலங்கைத் தீவை ஆகாயத்தில் நின்று பார்த்தால் ஒரே பச்சை நிறமாக இருப்பதைக் காணலாம். இதனால் எங்கள் தீவை மரகதத் தீவு என்று சொல்கிறார்கள். (மரகதம் - பச்சை) இவ் அழகிய தீவில் நாங்கள் பிறந்து, வாழ்வது நாம் செய்த புண்ணியமே.

ஒவ்வொருவருக்கும் அவரவர் பிறந்த நாடு தாய் நாடாகும். ஒவ்வொருவரும் தம் தாய் நாட்டைத் தம்முடைய தாயை நேசிப்பது போல நேசிக்க வேண்டும்; போற்ற வேண்டும்; புகழ வேண்டும்; இலங்கை யைத் தாய் நாடாகக் கொண்ட இருபுலவர்கள் தங்கள் நாட்டின் சிறப்பை மகிழ்வுடன் கூறியிருக்கிறார்கள். அவர்களுள் ஒருவர் சின்னத் தம்பிப் புலவர். இவரால் பாடப்பட்ட இலக்கியங்களுள் பறாளை விநாயகர் பள்ளும் ஒன்றாகும். மற்றைய புலவரால் பாடப்பட்ட நூல் கதிரைமலைப் பள்ளு ஆகும். இந்நூல் ஆசிரியரின் பெயர் அறியப்படவில்லை. கதிரை மலைப் பள்ளு நூலில் இலங்கையின் சிறப்பும், அழகும் கீழ்வருமாறு பாடப் பட்டுள்ளது.

**''எங்கும் மாமணி வில்பொலி யுங்கதிர்**
**எங்கும் தாமரை அன்னம் படுமலர்**
**மங்குறாத வளந்திக ழுந்திரு**
**மாவலி கங்கை நாடெங்கள் நாடே''**

இலங்கையிலுள்ள பெரிய ஆறு மகாவலி கங்கை. அது பல பகுதிக்கும் பரந்து நாட்டைச் செழிப்படையச் செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. இலங்கை நாட்டின் மத்திய பகுதியில் மரங்களும், பயிர்களும் செழித்து வளரக் காரணம் என்ன?

.......................................................................................................

ஆ. இலங்கைத் தீவை ஆகாயத்தில் நின்று பார்த்தால் எவ்வாறு இருக்கும்?

.......................................................................................................

இ. சின்னத்தம்பிப் புலவரால் பாடப்பட்ட நூல் எது?

.......................................................................................................

ஈ. ஒவ்வொருவரும் தம் தாய் நாட்டை எவ்வாறு நேசிக்க வேண்டும்?

.......................................................................................................

உ. மலைநாட்டுப் பிரதேசத்தில் வளரும் பயிர் வகைகள் மூன்று எழுதுக.

.......................................................................................................

16. பின்வரும் தொடர்மொழிகளுக்கு ஒரு மொழி எழுதுங்கள்.

(உ-ம்) ஒன்றைப் பிரதிசெய்து எழுதுவது - படியெடுத்தல்

அ. வெளிப்படைப் பொருளில் புகழ்ந்தும்
மறைமுகமாக இகழ்ந்தும் பாடுவது ..............................

ஆ. நூல் ஒன்றுக்கு நூலாசிரியர் அல்லாத
வேறொருவரால் எழுதப்படும் உரை ..............................

இ. ஐம்பதாவது ஆண்டின் இறுதியில்
எடுக்கும் விழா ..............................

ஈ. விகடமாகவும் பரிகாசமாகவும் பாடுபவன் ..............................

உ. புகழுடன் இறந்த போர் வீரனுக்காக
நாட்டப்படும் கல். ..............................



"கண்பார்வை அற்றவன் குருடனல்ல தன் குற்றங்களை உணராதவனே குருடன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. மாறிக் கிடக்கும் சொற்களை ஒழுங்குபடுத்தி ஒழுங்கான வாக்கியங்களை எழுதுங்கள்.

அ. கள்வன், எடுத்துவிட்டான், பெட்டியுள், பணத்தை, இருந்து

..............................................................................................................

ஆ. உதிர்ந்தது, கண்களிலிருந்து, கண்ணீர், உன்

..............................................................................................................

இ. தண்ணீரை, தாகத்தால், மடமட என, குடித்தான்

..............................................................................................................

ஈ. டாண்டாண், கோயில்மணி, அடித்தது, என

..............................................................................................................

உ. ஆட்டுக்குட்டி, விளையாடியது, துள்ளிக்குதித்து, தாய்மேல்

..............................................................................................................

ஊ. வரிசையாக, சென்றன, இரைதேடி, எறும்புகள்

..............................................................................................................

18. பழமொழிக்குப் பொருத்தமான பொருளைத் தெரிந்து எழுதுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| சலிப்பு, | ஆராய்ந்து செய், | வீண் பெருமை, | அரசனின் மாட்சி |

அ. குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர் ........................................

ஆ. பழகப்பழகப் பாலும் புளிக்கும் ........................................


இ. ஆழமறியாது காலை விடாதே ........................................

ஈ. அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி ........................................


"அதிகமான எதிர்பார்ப்பு நிச்சயம் கைகூடப் போவதில்லை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21. பாரதியார் பாடிய புதிய ஆத்திசூடி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியார் பாடிய புதிய ஆத்திசூடி

01. கீழே தரப்பட்டுள்ள பாடல்களை இசையோடு பாடுவோம். தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

### பிறந்த நாட்டின் புகழ்

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந் நாடே - அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந் நாடே - அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்த்து
சிறந்ததும் இந் நாடே - இதை
வந்தனை கூறி மனதி லிருத்தியென்
வாயுற வாழ்த்தேனோ - இதை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கேனோ

- பாரதியார்

எந்தை - எமது தகப்பன்; குலாவி - சேர்ந்து; முந்தையர் - தந்தையும் அவரது தந்தையும் போன்றோர்; சிந்தை - மனம்; வந்தனை - வழிபாடு; வந்தே - வந்தனம்; மாதரம் - மாதா (தாய்) நாடு; முடிந்தது - இறந்ததும்; வாய்உற - வாயார; வாழ்த்தல் - புகழ்தல்.

அ. தரப்பட்டுள்ள பாடலில் பிறந்த நாட்டின் சிறப்பைப் பாரதியார் எவ் விதம் எடுத்துரைக்கின்றார்?

.............................................................................................

.............................................................................................

.............................................................................................



"அரிய செயலைச் செய்து முடிப்பது வலிமையால் அல்ல விடாமுயற்சியால் தான்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. அடைப்பினுள் உள்ள பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுங்கள்.

அ. நாங்கள் (ஓடுவோம், ஓடுவீர்)

ஆ. நீ (பார்த்தாய், பார்த்தீர்கள்)

இ. நீங்கள் (செய்கிறாய், செய்கிறீர்கள்)

ஈ. சிறுவன் (கூறினான், கூறினாள்)

உ. சிறுமி (கழுவினாள், கழுவினார்)

03. அடைப்பினுள் உள்ள பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுங்கள்.

அ. (நான், நாங்கள்) பாடம் படித்தோம்.

ஆ. (நீ, நீங்கள்) எப்போது சென்றீர்கள்.

இ. (அவன், அவள், அவர்) கதை சொன்னார்.

ஈ. (காகம், காகங்கள்) அழுக்கை உண்டன.

உ. (மலர், மலர்கள்) மலர்ந்தன.

ஊ. பாம்பு படமெடுத்து (ஆடின, ஆடியது)

எ. நிலவு (எறித்தது, எறித்தன)

04. கவிதையைப் படித்து வினாவுக்கு விடை எழுதுவோம்.

பாலைவனம் சோலைவனம் ஆகவேண்டும்.
பசுங்கிளிகள் அங்கிருந்து பாடவேண்டும்
சாலைகளில் பல தொழிலும் பெருகவேண்டும்
சபைகளிலே தமிழ் எழுத்து முழங்கவேண்டும்.

அ. கவிஞரின் கனவும், ஆசைகளும் எவையென எழுதுங்கள்.

.....................................................................................................

.....................................................................................................



"பகைமையை அன்பால் வெல்லுங்கள், சோம்பலை ஊக்கத்தால் வெல்லுங்கள்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. தரப்பட்டுள்ள வாக்கியங்களுக்குப் பொருத்தமான பழமொழி களுக்குரிய இலக்கத்தை அடைப்பினுள் குறியுங்கள்.

| |
|---|
| 1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும். |
| 2. உப்பிட்டவரை உள்ளளவும் நினை. |
| 3. ஆழமறியாது காலை விடாதே. |
| 4. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? |
| 5. திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை. |

அ. ஒன்றின் இயல்பை அறியாது அதனுள் பிரவேசியாதே. (.........)

ஆ. யார் உதவியும் இல்லாதவனுக்குக் கடவுளே துணையாவார். (.........)

இ. உள்ளத்தின் உயர்வை முகம் காட்டும். (.........)

ஈ. இளமையில் பழகிய பழக்கம் வயது சென்ற காலத்திலும் தொடரும். (.........)

உ. சிறிய உதவி செய்தவர் என்றாலும் அவருக்கு நன்றியுடைவராக இருக்க வேண்டும். (.........)

06. கீழே தரப்பட்டுள்ள செயற்பாடுகளில் கூறப்பட்ட பிராணிகளை யும், பொருட்களையும் எழுதுங்கள்.

பதுமை போல உடையுடுத்த
சின்னஞ் சிறிய பாலர் நாம்
பளிங்கு போலப் பல்லைக் காட்டி
பம்பரம் போல சுழலுவோம்.

பூனைபோலப் பதுங்கிப் பதுங்கி
தவளை போலப் பாய் வோம்
மானைப் போலத் துள்ளித்துள்ளி
ஓடியாடி மகிழுவோம்.



"பதவியும் அந்தஸ்தும் நிரந்தரமில்லாதவை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| செயற்பாடு | பிராணி பொருள் |
|---|---|
| அ. சுழலுதல் | ................................ |
| ஆ. பதுங்குதல் | ................................ |
| இ. பாய்தல் | ................................ |
| ஈ. துள்ளுதல் | ................................ |

07. பின்வரும் அருஞ்சொற்களை வைத்து வாக்கியங்களைப் பூர்த்தி செய்யுங்கள்.

| | | |
|---|---|---|
| மன்னுயிர்க்கு இரங்கி | தோன்றாத்துணையாய் | வாழ்வும் வளமும் |
| தகவுடைமங்கையர் | நூலறிவும்நுண்மதியும் | நெஞ்சு நடுக்குற்று |
| பதைபதைக்க | | |

அ. ............................ இல்லறம் பேணுவதில் சிறப்புடையவர் ஆவர்.

ஆ. இறைவன் எப்பொழுதும் எம்முடன் ......................... உள்ளான் என்பதை மறவற்க.

இ. இயேசு பிரான் .......................... தன் உயிரைச் சிலுவையில் மாய்த்தார்.

ஈ. பேராசிரியர் உவைஸ் அவர்கள் .................................. மிக்கவர்.

உ. இராவணன் இறந்த செய்தி கேட்ட மனைவி ............................ ஓடினாள்.

ஊ. வயோதிபத் தம்பதிகள் ............................ உடையவர்களாகத் திகழ்ந்தனர்.



"அறிவுக்கு அடையாளம் அடங்குதலே ஆகும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. பின்வரும் சொற்களுள் சரியான புணர்ச்சியைத் தெரிவு செய்யுங்கள்.

அ. பால் + குடம் = (பாற்க்குடம், பாற்குடம், பால்குடம், பால்க்குடம்)

ஆ. மான் + தோல் = (மான்தோல், மானின்தோல், மானத்தோல், மான்றோல்)

இ. மண் + சட்டி = (மண்சட்டி, மட்சட்டி, மண்ணின்சட்டி, மட்ச்சட்டி)

ஈ. பொன் + நிறம் = (பொன்நிறம், பொன்னின்நிறம், பொன்னிறம், பொன்னாலானநிறம்)

உ. முள் + செடி = (முள்ளுச்செடி, முட்செடி, முள்செடி, முள்ளாலானசெடி)

09. பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுங்கள்.

அ. நச்சுப்பாம்பு = ....................................

ஆ. கட்டிப்பால் = ....................................

இ. மூட்டைப்பூச்சி = ....................................

ஈ. நுளம்புக்கடி = ....................................

உ. தாயன்பு = ....................................

ஊ. பாலபாடம் = ....................................

எ. கிணற்றுநீர் = ....................................

ஏ. பாவமாகும் = ....................................

10. பேச்சு வழக்குச் சொற்களை நியம (எழுத்து வழக்கு) மொழிக்கு எழுதுங்கள்.

அ. மூஞ்சி ........................ ஈ. இளனி ........................

ஆ. பெரிசு ........................ உ. கிடாய் ........................

இ. ஆத்தங்கரை ........................ ஊ. புட்டு ........................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. பொருத்தமான இரட்டைமொழிச் சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புங்கள்.

(உ-ம்) வெட்டுக் காயத்திலிருந்து இரத்தம் குபீர்குபீர் எனப் பாய்ந்தது.

அ. சூரியன் ................................ என ஒளியைப் பரப்பினான்.

ஆ. மல்லிகைப் பூ ........................... என நறுமணத்தை வீசியது.

இ. குதிரை வண்டி ............................ வென வேகமாக ஓடியது.

ஈ. .......................... எனப் பாய்ந்த ஆற்றுநீர் குளிர்மையைத் தந்தது.

உ. தடிமன் நோயால் தொண்டை ................ எனத் தாக்கமாக இருந்தது.

12. கீழே தரப்பட்டுள்ளவற்றிற்குப் பொருத்தமான மரபுத் தொடரைத் தெரிவு செய்யுங்கள்.

| | | |
|---|---|---|
| பகற்கனா | பழி வாங்குதல் | விழலுக்கு இறைத்தல் |
| தூண்டி விடுதல் | கடன் கழித்தல் | |

அ. மனமின்றிச் செய்தல் ..........................................

ஆ. எரியும் நெருப்புக்கு எண்ணெய் ஊற்றுதல்..................................

இ. தீமைக்குத் தீமை செய்தல் ..........................................

ஈ. செய்ய முடியாததற்கு ஆசைப்படல் ..........................................

உ. வீணே பயனின்றிப் பாடுபடல் ..........................................

13. அருஞ்சொற்களுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து கீறிடுங்கள்.

அ. அரியணை - (சிங்காசனம், தலையணை)

ஆ. வீராவேசம் - (வீரப்படை, வீரவெறி)

இ. ஆசிகூறுதல் - (வாழ்த்துதல், நிந்தித்தல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. ஆணித்தனம் - (உறுதி, ஆண்மை)

உ. வைகறை - (நள்ளிரவு, அதிகாலை)

14. பாடப்புத்தகத்தை ஆதாரமாகக் கொண்டு கீறிட்ட இடங்களை நிரப்புவோம்.

| | | | |
|---|---|---|---|
| மனக்கலக்கம் | தருமம் | நேர்மையாக | கருத்தில் |
| தங்குவதற்கு | அஞ்சுதல் | | |

அ. பழைமைக்கு ஒருபோதும் ............................... கூடாது.

ஆ. தோல்விகள் ஏற்படின் ....................... கொள்ளக்கூடாது.

இ. எப்பொழுதும் நல்லவற்றைக் ....................... கொள்ளல் வேண்டும்.

ஈ. நாம் ....................... போதிக்கும் நூல்களைப் படிக்க வேண்டும்.

உ. எப்பொழுதும் ............................... பேசுதல் வேண்டும்.

ஊ. கெட்டன ................................... இடம் கொடுக்கக் கூடாது.

15. பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுங்கள்.

அ. புதுமைகளை விரும்பி ஈடுபடுவோம். (.........)

ஆ. முதுமைக்கு இடம் கொடுக்கக் கூடாது. (.........)

இ. பொய்யுரைகளை வெறுப்போம். (.........)

ஈ. புத்தகங்களைப் பிரித்தறிந்து உணர்வோம். (.........)

உ. பயனில்லாத பழையனவற்றைப் பாதுகாக்காதே. (.........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. கதை எழுதுவதற்கான ஆரம்பப் பந்தி கீழே கொடுக்கப் பட்டுள்ளது. தொடர்ந்து கதை எழுதுவோம்.

**வறுமையின் கொடுமை**

''பூபாலனின் கன்னத்தின் குழிகளும், பள்ளங்களும், தோள் எலும்பு வெளியில் புறப்பட்டு நிற்கும் காட்சியும் அவன் உணவுக்காகத் திண்டாடு கிறான் என்பதை உணர்த்தியது. அவனது மனைவி சாரதாம்பாள் முற்றத்தில் தன் குடிசை முன்னால் நின்ற விலாட்டு மாமரத்தில் சாய்ந்து நின்ற அவலம், தன்னை மறந்து வானம் பார்த்த பெண்ணாக நின்ற காட்சி இன்று சமைப்பதற்கு என்ன செய்வது எதுவுமில்லையே என்ற ஏக்கம் அவளது முகத்தின் விம்பத்தில் இழையோடியது....."

.......................................................................................................

17. பின்வரும் தலைப்புகளில் ஒன்றைப் பற்றிக் கட்டுரை எழுதுங்கள்.

அ. வறியோருக்கு உதவுவோம்.

ஆ. கல்வியின் சிறப்பு.

இ. நான் விரும்பும் பெரியார்.

ஈ. நோய்க்கு இடங்கொடேல்.

18. தரப்பட்ட வாக்கியங்களில் பிழைதிருத்தம் செய்வோம்.

அ. தேப்பன் மணவறைக்குப் பக்கத்தில் முடுக்காக நின்றார்.

.......................................................................................................

ஆ. பட்டிணி கிடந்தாலும் கைமாறு கருதாது கருமமாற்ற வேணும்.

.......................................................................................................

இ. நிறம்ப நொங்கு குடித்ததால் சாப்பாடு தேள்வை இல்லை.

.......................................................................................................

ஈ. இன்று அடிக்கும் வெய்யிலால் வேர்வை கொட்டுது.

.......................................................................................................

உ. புட்டு வித்த பணத்தில் வெத்திலையும் போயிலையும் வேண்டினான்.

.......................................................................................................



"உயர்ந்த எண்ணங்களை உடையோர் ஒருநாளும் தனித்தவராகார்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழியும் இலக்கியமும்

## முதலாம் தவணை

**வகுப்பறை. வீட்டுவேலை மாதிரிப் பரீட்சை**

தரம் : 7

நேரம் : 40 நிமிடங்கள்

புள்ளிகள் 40

### பகுதி - I

01. கீழே அடைப்புக்குள் தரப்பட்டுள்ள பொருத்தமான சொல்லின் கீழ்க் கீறிடுங்கள்.

அ. கண்டாமணி ஓசை (பொலுபொலு, படபட, கணீர்கணீர்) என ஒலித்தது.

ஆ. நெல்லிக்கனி மரத்தில் இருந்து (சடசட, குடுகுடு, பொலுபொலு) என உதிர்ந்தது.

இ. விளையாட்டில் பங்குபற்றிய கோபாலன் (வளவள, மடமட, குளுகுளு) எனத் தண்ணீரைப் பருகினான்.

ஈ. துச்சாதனனின் பாதகச் செயலைக் கண்ட வீமன் (நறநற, கடகட, சடசட) எனப் பற்களைக் கடித்தான்.

உ. அர்த்தம் இல்லாது (குளுகுளு, மடமட, வளவள) எனப் பேசுவோனின் பேச்சை சபையோர் நிராகரித்தனர்.

(புள்ளிகள் 10)

02. கீழே தரப்பட்டுள்ள சொற்களுள் ஒத்த கருத்து அல்லாத சொல்லின் கீழ்க் கீறிடுக.

அ. ஆவி, உயிர், சீவன், சுடர்

ஆ. ஆகாயம், விண், நிலம், விசும்பு



"அன்பைவிட வலிய சக்தி உலகில் எதுவுமில்லை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. அக்கினி, அழல், தீ, காயம்

ஈ. சிரிப்பு, அழுகை, நகைப்பு, முறுவல்

உ. மனைவி, கிழத்தி, பாரியார், இளவல்

(புள்ளிகள் 05)

03. கீழே தரப்பட்டுள்ள பழமொழிகளின் இலக்கங்களைப் பொருத்தமாக அடைப்பினுள் இடுங்கள்.

1. அடாது செய்பவன் படாது படுவான்.
2. அன்பான சினேகிதனை ஆபத்தில் அறியலாம்.
3. நித்தம் போனால் முற்றம் சலிக்கும்.
4. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
5. மருந்தாயினும் விருந்தோடு உண்.

அ. ஒருவருடைய இல்லத்துக்கு அடிக்கடி சென்றால் வரவேற்புக் குறையும். (.........)

ஆ. தீங்கு செய்தவன் சொல்லொணாத் தண்டனை பெறுவான். (.........)

இ. ஒருவனின் அன்பின் உயர்வை ஆபத்து வேளையில் அறியலாம். (.........)

ஈ. உள்ளத்தின் தெளிவை முகம் வெளிப்படுத்தும். (.........)

உ. பிறருக்குக் கொடுத்து உண்பதே சிறப்புடையது. (.........)

(புள்ளிகள் 10)

04. அடைப்பினுள் உள்ள சரியான எதிர்ப்பொருள் சொல்லின் கீழ்க் கீறிடுங்கள்.

அ. இன்பம் (மகிழ்ச்சி, துன்பம், களிப்பு, மேன்மை)

ஆ. உதயம் (சூரியன், தோன்றல், மறைவு, உலகம்)



"சிக்கல் எது என்று அறிந்தாலே பாதிச் சிக்கல் தீர்ந்துவிடும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No: 894.811
Acc No 342

இ. குணம் (குற்றம், சிறப்பு, மேன்மை, வனப்பு)

ஈ. வெற்றி (பெற்றி, முதன்மை, வாகை, தோல்வி)

உ. உறக்கம் (நித்திரை, துயில், விழிப்பு, மயக்கம்)

(புள்ளிகள் 05)

05. தரப்பட்ட சொற்களைக் கொண்டு ஒழுங்கான வாக்கியங்களை அமைக்குக.

அ. இயற்றப்பட்டது, ஔவையாரால், வாக்குண்டாம்

..........................................................................................................

ஆ. மொழியை, மகிழும், வண்ணம், கேட்டு, பேசவேண்டும், பிறர்

..........................................................................................................

இ. மணிமேகலை, இல்லையென, பசித்தோருக்கு, உணவளித்தாள், கூறாது.

..........................................................................................................

ஈ. கடலை, அனுமன், சென்றான், கடந்து

..........................................................................................................

உ. பேசுவதற்கு, ஒன்றுபற்றி, முன்பு, சிந்திக்க வேண்டும்

..........................................................................................................

ஊ. வரிசையாக, சென்றன, இரைதேடி, எறும்புகள்

..........................................................................................................

(புள்ளிகள் 10)

❖ புள்ளிகள் $\frac{\quad}{40}$

..rasady Public Library
Municipal Council
Batticaloa.



“நம்பிக்கையுடையவன் எதையும் எளிதில் முடிக்கும் திறமையுடையவன்”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No:
Acc No

# பகுதி - II

புள்ளிகள் 60 நேரம் : 1 மணித்தியாலம் 30 நிமிடம்

01. கீழே தரப்பட்டுள்ள நற்செய்தியை வாசித்த பின்பு தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

## அன்பே இன்பம் தரும்

வீரமாமுனிவர் துறவறத்தார் மேற்கொள்ள வேண்டிய நெறிகளை மட்டும் கூறவில்லை. இல்லறத்தார் கைக்கொண்டு ஒழுக வேண்டிய பண்புகளையும் கூறியுள்ளார். சிறந்த குடும்பத்துக்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்தார். வரலாறே காப்பியம். எனவேதான் இல்லறத் தாருக்கு அமையவேண்டிய இயல்புகளை அவர் கூறுகின்றார்.

சூசை அறத்தைப் பிறருக்கு அறிவுறுத்த முற்பட்டதற்கு அவர் மானிடர் மீது கொண்ட அன்பே காரணம். இவ்விடத்தில் ஆசிரியர் அன்பை விதைப்போருக்கு அன்பே கிட்டும் என்கிறார். ஒருவர் மீது அன்பு செலுத்தத் தொடங்கிவிட்டால் அதன் பொருட்டு எத்தகைய துன்பம் வந்தாலும் அது துன்பமாகத் தோன்றாது என்கிறார். அதற்குச் சில எடுத்துக் காட்டுகளும் தருகிறார். மானிடர்மீது கொண்ட அன்பால் இறைவன் மனிதாவதாரம் எடுத்தார். குடும்பமே அதற்காகத் துன்பம் அனுபவித்தது. என்றாலும் அவற்றிற்காக வருந்தவில்லை. மாறாக மகிழ்ந்தனர். பிறர்மீது அன்பு கொண்டால் எதிர்ப்படும் எதுவும் துன்ப மாயிராது. எனவே எல்லோரிடமும் அன்பு செலுத்த வேண்டும் என்பது வீரமாமுனிவரின் நற்செய்தியாகும்.

(ஆதாரம்: வீரமாமுனிவர். ஆ. இன்னாசி)

...ncasady Public Library
Municipal Council
Batticaloa

அ. வீரமாமுனிவர் இல்லறத்தார் பற்றி யாது கூறினார்?

..............................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. சூசை ஏன் அறத்தைப் பிறருக்கு அறிவுறுத்த முற்பட்டார்?

.................................................................................................

இ. கட்டுரை ஆசிரியர் அன்பை விதைப்பின் எது கிடைக்கும் என்கிறார்?

.................................................................................................

ஈ. ஒருவர் மீது அன்பு செலுத்தத் தொடங்கும் போது துன்பத்துக்கு என்ன நிகழும்?

.................................................................................................

உ. இறைவன் ஏன் மனிதாவதாரம் எடுத்தார்?
எமக்கு எதிர்ப்படும் துன்பத்தை நீக்க நாம் என்ன செய்ய வேண்டும்?

.................................................................................................

**(புள்ளிகள் 10)**

**02. கீழே தரப்பட்டுள்ள தலைப்பினுள் ஒன்றைத் தெரிந்து கட்டுரை எழுதுங்கள்.**

அ. கல்வியே சிறந்த செல்வம்.

ஆ. சுத்தம் சுகம் தரும்.

இ. பெரியோரைக் கனம் பண்ணு.

ஈ. மலைக் காட்சி

**(புள்ளிகள் 10)**

**03. கீழே தரப்பட்டுள்ள விபரத்திற்கு ஏற்ப உறவுமுறைக் கடிதம் ஒன்று எழுதுக.**

விடுதியில் தங்கியிருக்கும் மாணவன் அல்லது மாணவி பெற்றோருக்கு எழுதும் உறவுமுறைக் கடிதம்.

**(புள்ளிகள் 10)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. இங்கே தரப்பட்டுள்ள பாடலைப் படித்தபின்பு கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

சிற்றூர்

காக்கா ஒரு புறம் கா கா கா
குருவி ஒரு புறம் கீ கீ கீ
மேய்க்கும் ஆடு மே மே மே
தின்னும் கோழி கோ கோ கோ
பார்க்கும் பூனை மா மா மா
ஆக்கும் இந்தக் கச்சேரி
ஆங்காங்குண்டு சிற்றூரில்.

அ. இப்பாடலில் கூறப்பட்டுள்ள கச்சேரி இடம்பெறும் இடங்கள் எவை எனக் கூறப்பட்டுள்ளது?

........................................................................................................

ஆ. இக் கச்சேரியில் பங்கு கொண்ட விலங்குகள், பிராணிகளின் தொனியையும், பெயர்களையும் தருக.

........................................................................................................

இ. பிரித்து எழுதுக.

1. சிற்றூர் - ......................................
2. இந்தக்கச்சேரி - ......................................

(புள்ளிகள் 10)

05. கீழே தரப்பட்டுள்ள, பாடப்புத்தகத்தில் உள்ள 'கடமை' என்ற கட்டுரைக்கான வினாக்களுக்குரிய விடைகளை எழுதுங்கள்.

அ. நாம் யார் யாருக்குக் கடமைப்பட்டுள்ளோம்?

........................................................................................................

ஆ. நாம் முழு உரிமையாகப் பெற்றுக் கொண்ட செல்வங்கள் எவை?

........................................................................................................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. மனிதனுக்கு உள்ள ஒரேயொரு தலையாய கடமை எது?

..........................................................................................

ஈ. பிறர் நலம் பேணுவதால் எந் நன்மை கிடைக்கும்?

..........................................................................................

உ. ஒழுங்காகக் கடமையைச் செய்பவன் எதனைப் பெறுகின்றான்?

..........................................................................................

(புள்ளிகள் 10)

06. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களை வாசித்த பின்பு உரியபடி அட்டவணையை நிரப்புங்கள்.

அ. மாடு பசும் புல்லை மேய்ந்தது.

ஆ. வானத்தில் பருந்து நீண்ட நேரம் வட்டமிட்டது.

இ. விவசாயி நெல் வயல்களை உழுதான்.

ஈ. பெரிய குலை வாழை ஈன்றது.

உ. மாணவர்கள் பாடசாலைக்குச் சென்று பாடங்களைப் படித்தனர்.

| | எழுவாய் | பயனிலை | செயற்படுபொருள் |
|---|---|---|---|
| அ. | ........................ | ........................ | ........................ |
| ஆ. | ........................ | ........................ | ........................ |
| இ. | ........................ | ........................ | ........................ |
| ஈ. | ........................ | ........................ | ........................ |
| உ. | ........................ | ........................ | ........................ |

(புள்ளிகள் 10)

❖ புள்ளிகள் $\frac{\quad}{60}$

❖ புள்ளிகள் $\frac{\quad}{100}$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழியும் இலக்கியமும்

## முதலாம் தவணைப் பரீட்சை மாதிரி

தரம் : 7

நேரம் : 40 நிமிடங்கள்

புள்ளிகள் 40

## பகுதி - I

01. கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்திற்குப் பொருத்தமான சொல்லின் கீழ்க் கீறிடுங்கள்.

அ. தோட்டத்தில் நின்ற ஆட்டுக்குட்டிகள் ....................................
1. புல்மேயுது 2. புல் மேய்ந்தது
3. புல் மேய்கின்றன 4. புல் மேய்ந்தன

ஆ. சிட்டுக் குருவி நேற்றய தினம் கூட்டைக் ..................................
1. கட்டியது 2. கட்டும் 3. கட்டின 4. கட்டாது

இ. இப்பொழுது பனை மரத்திலிருந்து காவோலை சரசரவென.............
1. விழுகின்றன 2. விழும் 3. விழுகின்றது 4. விழாது

ஈ. உறியில் இருந்த தயிர்ச்சட்டியைப் பூனை..................................
1. தட்டி வீழ்ந்தன 2. தட்டி வீழ்த்தியது
3. தட்டுப்பட்டது 4. தட்டுகின்றன

உ. பறவைக் கூட்டம் வானத்தில்........................................
1. பறக்கும் 2. பறந்தது 3. பறந்தன 4. பறக்கின்றன

(புள்ளிகள் 10)

02. பின்வரும் னகர, ணகர பேதச் சொற்களை வைத்து வாக்கியம் எழுதுங்கள்.

அ. அரன் : ..........................................................................................
அரண் : ..........................................................................................



"நேர்மையான நடத்தை எம்மை உயர்ந்தவனாக்கும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. கனி : ..........................................................................................

காணி : ..........................................................................................

இ. சனம் : ..........................................................................................

சாணம் : ..........................................................................................

ஈ. பானம் : ..........................................................................................

பாணம் : ..........................................................................................

உ. மனம் : ..........................................................................................

மணம் : ..........................................................................................

(புள்ளிகள் 10)

03. அடைப்புக்குள் இருக்கும் ளகர, ழகர சொற்களுள் பொருத்த மானதைக் கோடிட்ட இடத்தில் வைத்து நிரப்புங்கள்.

அ. அதிகாலையில் நித்திரை விட்டு எழுதல் நற்.................... ஆகும். (பழக்கம், பளக்கம்)

ஆ. ஆற்றில் போட்டாலும் ...................... போடு. (அளந்து, அழந்து)

இ. தோகை விரித்தாடும் மயிலின் ...................... பலர் கண்டு கழித்தனர். (அழகை, அளகை)

ஈ. பாடசாலையில் முத்தமிழ் ................... சிறப்பாக நடைபெற்றது. (விளா, விழா)

உ. பழகப் பழகப் பாலும் ........................... (புழிக்கும், புளிக்கும்)

(புள்ளிகள் 05)

05. பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்யுங்கள்.

அ. ஒன்றுபட்டால் ................................ வாழ்வு

ஆ. சூடு கண்ட பூனை ........................... நாடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. ............................. கொடியும் திரண்டால் மிடுக்கு.

ஈ. அகத்தின் ......................... முகத்தில் தெரியும்.

உ. ஆறிலும் சாவு ......................... சாவு.

(புள்ளிகள் 05)

06. பின்வரும் சொற் பிழைகளைத் திருத்தி எழுதுங்கள்.

அ. கோடாரி ......................... ஈ. அடமழை .........................

ஆ. திருவலை ......................... உ. புகயிலை .........................

இ. துறப்பு ......................... ஊ. தவக்கை .........................

(புள்ளிகள் 06)

07. கீழே உள்ள ஒரு சொல்லுக்குப் பல சொல் எழுதுங்கள்.

அ. அழகு .................... .................... ....................

ஆ. உடல் .................... .................... ....................

இ. மகிழ்ச்சி .................... .................... ....................

ஈ. சந்திரன் .................... .................... ....................

(புள்ளிகள் 04)

❖ புள்ளிகள் $\frac{\quad}{40}$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி - II

புள்ளிகள் 60 நேரம் : 1 மணித்தியாலம் 30 நிமிடம்

01. கீழே தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைப் பற்றி கட்டுரை எழுதுக.

அ. மலைக்காட்சி

ஆ. பாடசாலையில் நடைபெற்ற கலைவிழா

இ. எனது பாடசாலையும் கல்வியும்

ஈ. எனது தாய்நாடு (புள்ளிகள் 10)

02. நீர் சென்ற பாடசாலைக் கல்விச் சுற்றுலா பற்றி உமது நண்பன் அல்லது நண்பிக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

(புள்ளிகள் 10)

03. கீழே தரப்பட்டுள்ள பந்தியைப் படித்தபின்பு வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

**கண்ணகியின் சீற்றம்**

வீரக் கற்பு வாய்ந்த கண்ணகியின் கதையால் ஓர் அரசியல் உண்மையும் விளங்குகிறது. நெறிதவறிய அரசனை அறமே ஒறுக்கும் என்னும் உண்மையைப் பாண்டியன் வரலாறு காட்டுகிறது. அரண் மனைச் சிலம்பைக் களவாடிய கள்வன் அகப்பட்டான் என்று பொற் கொல்லன் சொல்லிய சொல்லை ஆராய்ந்து பாராது, உண்மையை விசாரித்து அறியாது 'அக்கள்வனைக் கொன்று சிலம்பைக் கொண்டு வருக' என்று பணித்தான் பாண்டியன். அரசன் ஆணையால் தன் கணவன் கோவலன் இறந்தான் என்றறிந்த கண்ணகி சீறி எழுந்தாள். 'தீவேந்தன் தனைக் கண்டு இத்திறம் கேட்பேன்' எனப் புறப்பட்டாள்.

அ. கண்ணகியின் கதை விளக்கும் அரசியல் உண்மை எது?

........................................................................................................

ஆ. கண்ணகியின் சீற்றத்துக்குக் காரணம் என்ன?

........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. வேந்தனிடம் எது? கேட்பேன் எனப் புறப்பட்டாள் கண்ணகி.

..........................................................................................

ஈ. பாண்டிய மன்னன், பொற்கொல்லனிடம் எதனைச் செய்யுமாறு பணித்தான்?

..........................................................................................

(புள்ளிகள் 10)

04. கீழே தரப்பட்டுள்ள பாடலைப் படித்த பின்பு கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
    தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்.
இறவாதபுகழுடைய புதுநூல்கள்
    தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்.
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
    சொல்வதிலோர் மகிமை இல்லை.
திறமான புலமையெனிற் பிறநாட்டார்
    அதை வணக்கம் செய்தல் வேண்டும்.

- பாரதியார்

அ. எத்தகைய நூல்களை மொழி பெயர்த்தல் வேண்டும்?

..........................................................................................

ஆ. எத்தகைய புதுநூல்கள் இயற்றல் வேண்டும்?

..........................................................................................

இ. மகிமையற்ற செயல் எது?

..........................................................................................

ஈ. திறமான புலமை எப்படிப்பட்டது?

..........................................................................................

(புள்ளிகள் 10)

05. உமது வகுப்பறைப் பாடப்புத்தகத்தை ஆதாரமாகக் கொண்டு வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

அ. யானைக் கூட்டங்களை இயற்கையாகக் காணக்கூடிய மூன்று இடங்களைத் தருக.

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. காந்தி அடிகள் எவ்வூரில், எத்தனையாம் ஆண்டு பிறந்தார்?

..........................................................................................................

இ. ஆங்கிலத் தட்டச்சு (டைப்ரைட்டர்) எதற்கு முக்கிய காரணமாக அமைந்தது?

..........................................................................................................

ஈ. உயிர் எழுத்துக்களின் தொகை - ..............................

மெய் எழுத்துக்களின் தொகை - ..............................

தமிழில் உள்ள மொத்த எழுத்துக்கள் - ..............................

உ. காடுகள் எவ்வகையில் எமக்கு உதவுகின்றன என்பதற்கு மூன்று காரணங்கள் தருக.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

(புள்ளிகள் 10)

06. பின்வரும் உவமைத் தொடர்களை வைத்து வாக்கியம் அமையுங்கள்.

அ. பூனையும் எலியும் போல (பகைமை) : ......................................

..........................................................................................................

ஆ. காட்டிலெறித்த நிலாப் போல (பயனின்மை) : ............................

..........................................................................................................

இ. பாலும் பழமும் போல (இன்பத்தில் இன்பம்) : ............................

..........................................................................................................

ஈ. அணை கடந்த வெள்ளம்போல (பொங்கிப் பிரவாகித்தல்) : ...........

..........................................................................................................

உ. இணை பிரிந்த மான் போல (பிரிதல்) : ......................................

..........................................................................................................

(புள்ளிகள் 10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வகுப்பறை. வீட்டுவேலை மாதிரிப் பரீட்சை

# தமிழ்மொழியும் இலக்கியமும்
## இரண்டாம் தவணை

தரம் : 7 நேரம் : 40 நிமிடங்கள்

புள்ளிகள் 40

## பகுதி - I

01. பழமொழிக்குப் பொருத்தமான வாக்கியத்தின் கீழ்க் கீறிடுங்கள்.

அ. சுகதுக்கம் சுழலும் சக்கரம்
1. நாம் சுகதுக்கம் பேணல் வேண்டும்.
2. இன்பம், துன்பம் வாழ்க்கையில் மாறிமாறி வரும்.
3. நாம் சுழன்று சக்கரத்தை ஓட்ட வேண்டும்.

ஆ. வெள்ளம் வருமுன் அணை கட்ட வேண்டும்.
1. வெள்ளத்துக்குப் பெரிய அணை கட்டவேண்டும்.
2. நாம் எக்காரியத்திலும் முன்னேற்பாடாக நடக்க வேண்டும்.
3. அணையை ஆழமாகப் போட வேண்டும்.

இ. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
1. நாம் ஒன்றுபட்டுப் பணம் திரட்ட வேண்டும்.
2. ஒற்றுமையே பலம்.
3. எமது வாழ்க்கை சிறக்க முயற்சிக்க வேண்டும்.

ஈ. பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு
1. பிள்ளையைத் தாயே பெற்றெடுத்தாள்.
2. பெற்றமனம் கல்லுப் போன்றது.
3. தாய் அன்பு இலகுவில் இரங்கக் கூடியது பிள்ளை அவ்வாறல்ல.

உ. விளையும் பயிரை முளையில் தெரியும்.
1. முளைப்பது நன்றாக இருக்க வேண்டும்.
2. முளையில்லாது பயனை எதிர்பார்க்கக் கூடாது.
3. எதிர்காலச் சிறப்பை இளமையில் அறிந்து விடலாம்.

(புள்ளிகள் 05)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்கு எதிர்ப்பொருட் சொற்களை எழுதுங்கள்.

அ. முயற்சி ........................ ஈ. சத்தம் ........................

ஆ. நாடு ........................ உ. சண்டை ........................

இ. புகழ்ச்சி ........................ ஊ. சுத்தம் ........................

(புள்ளிகள் 06)

03. கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சேர்த்தெழுதுங்கள்.

அ. நன்றி + உள்ளவன் = ..................................

ஆ. வேட்டை + காரன் = ..................................

இ. வாழ் + இடம் = ..................................

ஈ. மக்கள் + அனையர் = ..................................

(புள்ளிகள் 04)

04. பின்வருவனவற்றிற்கான மரபு ஒலிகளைக் (தொனி) குறிக்கும் பெயர்களை எழுதுக.

(உ-ம்) ஆந்தை - அலறும்

அ. வண்டு ........................ ஈ. ஆடு ........................

ஆ. புலி ........................ உ. எருது ........................

இ. சிங்கம் ........................ ஊ. பல்லி ........................

(புள்ளிகள் 06)

05. பின்வருவனவற்றின் மரபு இளமைப் பெயர்களை எழுதுங்கள்.

அ. மான் ........................ இ. மீன் ........................

ஆ. பாம்பு ........................ ஈ. புகையிலை ........................

உ. கிளி ........................

(புள்ளிகள் 05)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. பின்வருவனவற்றைப் பிரித்து எழுதுங்கள்.

அ. ஒன்றுண்டு ........................ இ. கட்டுமரம் ........................

ஆ. பலவுண்டு ........................ ஈ. வட்டச்சட்டி ........................

(புள்ளிகள் 04)

07. சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாள மிடுங்கள்.

அ. முதலாம் வேற்றுமைக்கு உருபு உண்டு. (.........)

ஆ. இரண்டாம் வேற்றுமை உருபு 'ஐ' ஆகும். (.........)

இ. மூன்றாம் வேற்றுமை உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஓடு என்பனவாகும். (.........)

ஈ. நான்காம் வேற்றுமை உருபு 'கு' ஆகும். (.........)

உ. நான்காம் வேற்றுமையின் பொருள் வகையினுள் கோடல் என்பதும் ஒன்றாகும். (.........)

(புள்ளிகள் 05)

08. கீழே தரப்பட்டுள்ள ஒலிக்குறிப்புச் சொற்களை வைத்து இடைவெளி நிரப்புங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| திருதிரு, | கிடுகிடு, | கலகல, | கமகம, | படபட |

அ. நகர் காவலர் ........................ எனக் கதவைத் தட்டினர்.

ஆ. நெற்கதிர்கள் ........................ எனச் சாய்ந்து ஆடின.

இ. களவெடுத்த திருடன் ........................ என விழித்தான்.

ஈ. பொருட்களின் விலைகள் .................... என உயர்ந்தன.

உ. மல்லிகைப் பூ ........................ என நறுமணம் வீசியது.

(புள்ளிகள் 05)

❖ புள்ளிகள் $\frac{\quad}{40}$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி - II

புள்ளிகள் 60 நேரம் : 1 மணித்தியாலம் 30 நிமிடம்

01. கீழே தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைப் பற்றி கட்டுரை எழுதுக.

அ. தந்தை தாய் பேண்.

ஆ. விடாமுயற்சி வெற்றி தரும்.

இ. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

ஈ. உண்மை பேசுவோம்.

(புள்ளிகள் 10)

02. சுகயீனம் காரணமாகப் பாடசாலைக்கு ஒருநாள் சமுகமளிக்க வில்லை என்பதைத் தெரிவித்து மன்னிப்புக் கேட்டு பாடசாலை அதிபருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

(புள்ளிகள் 10)

03. கீழே தரப்பட்டுள்ள பந்தியைப் படித்தபின்பு வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

புங்குடுதீவின் கிழக்கூரிலே ஒரு வேப்பமரம் நின்றது. பத்துப் பேர் சேர்ந்தும் அம்மரத்தின் அடியைக் கட்டிப்பிடிக்க முடியாது. அவ்வளவு பருமன் உடையது அது. அதன் கிளைகள் நாற்றிசையும் நீண்டு பரந்து வளர்ந்திருந்தன. ஒவ்வொரு கிளையிலும் பசிய இலைகள் நிறைந்திருந்தன. மெல்லிய காற்று வீசும் போது அவ் இலைகள் கலகல எனச் சிரித்து ஒலி எழுப்பின. அவ் ஒலி மக்களை மரநிழலில் இளைப்பாற வரும்படி அழைப்பது போல இருந்தது. அந்த மரத்தின் நிழல், கடுங்கோடையிலும் 'குளுகுளு' எனக் குளிர்ச்சியாக இருந்தது. அந் நிழலில் ஆயிரக் கணக்கான மக்கள் வசதியாக இருந்து இளைப்பாற முடியும்.

அ. வேப்ப மரம் நின்ற இடம் எது?

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. வேப்பமரத்தின் பருமன் எப்படிப்பட்டது?

.................................................................................................

இ. இம்மரத்தின் கிளைகள், இலைகள் எவ்வகைப்பட்டிருந்தன?

.................................................................................................

ஈ. காற்று வீசும்போது மரத்தின் இலைகள் எவ்விதம் ஒலி எழுப்பின? அவ் ஒலி எதனைத் தெரிவிப்பதாக அமைந்திருந்தது?

.................................................................................................

(புள்ளிகள் 10)

04. கீழே தரப்பட்டுள்ள பாடலைப் படித்த பின்பு வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

**ஆறு**

கல்லும் மலையும் குதித்து வந்தேன் - பெருங்
காடும் செடியும் கடந்து வந்தேன்;
எல்லை விரிந்த சமவெளி எங்கும் - நான்
இறங்கித்த வழ்ந்து தவழ்ந்து வந்தேன்.

காயும் நிலத்தழல் ஆற்றிவந்தேன் - அதில்
கண்குளிரப் பயிர் கண்டுவந்தேன்;
ஆயும் மலர்ப்பொழில் செய்துவந்தேன் - அங்கென்
ஆசை தீர விளையாடி வந்தேன்.

ஏறாத மேடுகள் ஏறிவந்தேன் - பல
ஏரிகுளங்கள் நிரப்பி வந்தேன்;
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் - மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்.

- கவிமணி. தேசிக விநாயகம்பிள்ளை

அ. ஆறு எதனூடாகத் தவழ்ந்து வந்தது?

.................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஆற்றின் இரண்டு பயன்கள் கூறுக.

..........................................................................................

இ. ஆறு ஓடிவரும்போது நிலத்தில் உள்ள எதனை இல்லாமல் செய்தது?

..........................................................................................

ஈ. மேடுகள், ஏரிகுளங்கள், ஊற்று, ஓடைகள் என்பவற்றில் ஆறு என்ன செய்து வந்தது என்பதைத் தனித்தனியாக எழுதுக.

..........................................................................................

(புள்ளிகள் 10)

**05. உமது வகுப்பறைப் பாடப்புத்தகத்தை ஆதாரமாகக் கொண்டு வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

அ. பெருஞ்சேரல் இரும்பொறையிடம் இருந்த நற்பண்புகள் இரண்டு தருக.

..........................................................................................

ஆ. மோசி கீரனார் என்ற புலவர் ஏன் அடிக்கடி இரும்பொறை சேர மன்னனின் அவைக்களத்துக்கு வந்தார்?

..........................................................................................

இ. பென்சிலுக்கான மரக்குற்றிகள் எம்மரத்திலிருந்து பெறப்படுகின்றன?

..........................................................................................

ஈ. வீட்டுத் தோட்டத்தால் கிடைக்கும் நன்மைகள் இரண்டு தருக.

..........................................................................................

..........................................................................................

உ. இறைவன் எவ்விதப் பூவை விரும்பவில்லை?
எக் கமலத்தை இறைவன் விரும்புகின்றான்?

..........................................................................................

..........................................................................................

(புள்ளிகள் 10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. கீழே தரப்பட்டுள்ள 'அ' பகுதியை 'ஆ' பகுதியுடன் தொடர்புபடுத்துக.

| | | |
|---|---|---|
| அ. | வைக்கோல் பட்டடை நாய்போல | தெட்டத்தெளிவு |
| ஆ. | வெள்ளிடை மலைபோல | செயலற்றநிலை |
| இ. | சித்திரப் பதுமைபோல | அனுபவியாமை |
| ஈ. | சூரியனைக் கண்ட பனிபோல | வெளிப்படை |
| உ. | குன்றின் மேலிட்ட தீபம்போல | உடன் மறைதல் |

**(புள்ளிகள் 05)**

06. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களைப் பொருத்தமான தன்மை, முன்னிலை, படர்க்கைச் சொல்லை வைத்து நிரப்புங்கள்.

அ. ..................... பாடசாலைக்கு ஓடிச் சென்றோம்.

ஆ. ..................... நேற்றைய தினம் சுற்றுலா சென்றனர்.

இ. ..................... அனைவரும் ஒருபோதும் பொய் சொல்லக்கூடாது.

ஈ. ..................... இன்று கோயிலுக்குச் செல்வேன்.

உ. ..................... பறவைகளாகும்.

**(புள்ளிகள் 05)**

❖ **புள்ளிகள்** ____ / 60

❖ **புள்ளிகள்** ____ / 100



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழியும் இலக்கியமும்

## இரண்டாம் தவணைப் பரீட்சை மாதிரி

தரம் : 7 நேரம் : 40 நிமிடங்கள்

புள்ளிகள் 40

### பகுதி - I

01. கீழே தரப்பட்டுள்ள உவமைத் தொடருக்குப் பொருத்தமான பொருளைத் தெரிந்து தொடர்படுத்துக.

| | | |
|---|---|---|
| அ. | அடிவயிற்றில் இடிவிழுந்ததுபோல | மீளாத்துன்பம் |
| ஆ. | கண்ணை இமை காப்பது போல | கொடுந்துன்பம் |
| இ. | ஆலையில் இட்ட கரும்புபோல | துன்பத்தில்துன்பம் |
| ஈ. | இடியேறு கேட்ட நாகம்போல | மிக்கபாதுகாப்பு |
| உ. | வெந்தபுண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல | பதட்டம் |

(புள்ளிகள் 05)

02. பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுங்கள்.

அ. அறுபதாயிரம் .................. ஈ. விழிப்படைய ......................

ஆ. நல்லதன்று .................. உ. பாகற்காய் ......................

இ. வயிற்றுவலி .................. ஊ. ஓடோடி ......................

(புள்ளிகள் 06)

03. கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சேர்த்தெழுதுங்கள்.

அ. நெடுமை + நாள் = ....................................

ஆ. தவறு + இல்லை = ....................................

இ. பிறகு + என்ன = ....................................

ஈ. தீடீர் + என்று = ....................................

(புள்ளிகள் 04)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. பின்வருவனவற்றுள் ஒரு சொல் வேறுபட்டது. கீறிடுக.

அ. கதிரவன், அருக்கன், வெய்யோன், சூரியன், திங்கள்

ஆ. இறைவன், கடவுள், அரசன், ஆண்டவன், தெய்வம்

இ. பாத்திமா, அனோமா, ஆத்மிகா, நிமால், பிறேமினா

ஈ. ஆகாயம், வானம், சந்திரன், விண், விசும்பு

உ. கத்தரிக்காய், வெண்டைக்காய், பூசினிக்காய், அகத்தியிலை, வாழைக்காய்

(புள்ளிகள் 05)

05. பொருத்தமான உவமைச் சொற்றொடரின் கீழ்க் கீறிடுங்கள்.

அ. கணவன் இறந்த செய்தி கேட்ட மனைவி .......... வீழ்ந்தாள்.
1. ஒளியைக் கண்ட இருள் போல
2. சூரியனைக் கண்ட பனிபோல
3. அடியற்ற மரம் போல
4. ஆற்றங்கரை மரம்போல

ஆ. வகுப்பில் ..................... இருந்த சுந்தரம் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தான்.
1. ஆழ்கடல் முத்துப்போல
2. இடியேறு கேட்ட நாகம் போல
3. இனம் பிரிந்த மான் போல
4. இலைமறை காய்போல

இ. மதகுருவின் போதனைகள் மக்கள் மனத்தில் ................ பதிந்தது.
1. கல்மேல் எழுத்துப்போல
2. நீர்க்குமிழி போல
3. சேற்றில் வளர்ந்த செந்தாமரைபோல
4. எட்டி பழுத்தாற்போல

ஈ. மருத்துவத் துறைக்குத் தெரிவான மாணவனை அவன் குடும்பத்தினர் ......................... போற்றினர்.
1. சிப்பியின் வயிற்றில் முத்துப்போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அகத்தி ஆயிரம் காய்த்தாற் போல
3. தேன்மாரி பொழிந்தது போல
4. சிறகிழந்த பறவைபோல

உ. தாங்கமுடியாத குடும்பச் சுமையால் வீட்டுத் தலைவன் ............. துன்பமுற்றான்.
1. ஒளியைக் கண்ட இருள்போல
2. அம்புபட்ட மான்போல
3. பம்பரம் ஆடி ஓய்ந்தது போல
4. உள்ளங்கை நெல்லிக்கனி போல

(புள்ளிகள் 10)

06. பின்வருவனவற்றிற்கான மரபுச் சொற்களை எழுதுங்கள்.

அ. யானை செலுத்துபவன் ....................................

ஆ. கப்பல் ஓட்டுபவன் ....................................

இ. மந்தை மேய்ப்பவன் ....................................

ஈ. உழுது பயிரிடுபவன் ....................................

உ. விமானம் செலுத்துபவன் ....................................

(புள்ளிகள் 05)

07. வேறுபட்ட சொல்லின் கீழ்க் கீறிடுக.

அ. குட்டி, பிள்ளை, கன்று, குஞ்சு, மரம்

ஆ. பருந்து, புறா, கிளி, மீன், கொக்கு

இ. குளம், ஏரி, கடல், மலை, ஆறு

ஈ. வெண்மை, கருமை, நன்மை, செம்மை, பசுமை

உ. கட்டில், கதிரை, மேசை, பானை, கதவு

(புள்ளிகள் 05)

❖ புள்ளிகள் $\frac{\quad}{40}$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி - II

புள்ளிகள் 60 நேரம் : 1 மணித்தியாலம் 30 நிமிடம்

01. கீழே தரப்பட்டுள்ள பாடலைப் படித்த பின்பு வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

**விரும்பிச் செயலாற்று**

கண்டதைப் படிக்கத் துடிக்காமல்
கற்றவர் போல்தினம் நடிக்காமல்
கொண்டஉன் கடமையை அழிக்காமல்,
பண்பையும் அன்பையும் இழக்காமல்
நாளும் வாழ்ந்திட நீ விரும்பு
நாட்டில் நீயொரு செங்கரும்பு

காலம் என்பதைப் பொன்னாக்கி
கல்வி என்பதைப் பொருளாக்கி
ஞாலம் மேலும் வளர்ந்தோங்க
நற்செயல் என்றும் தழைத் தோங்க
என்றும் விரும்பிச் செயலாற்று
எவர்க்கும் நீயொரு தேனூற்று

- கல்லை ஆ.துரை

அ. கற்கத் தகுதியானவற்றைக் கல் என்பதை உணர்த்தும் அடி
1. கொண்ட உன் கடமையை நடிக்காமல்
2. கற்றவர் போல் தினம் துடிக்காமல்
3. கண்டதைப் படிக்கத் துடிக்காமல்

ஆ. எதனையும் மனவிருப்பத்துடனேயே செய்தல் வேண்டும் என்பதை விளக்கும் அடி
1. எவர்க்கும் நீயொரு தேனூற்று
2. என்றும் விரும்பிச் செயலாற்று
3. நாளும் வாழ்ந்திட நீ விரும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. ஒழுக்கமுடைய நல்லவனாக வாழவேண்டுமென உணர்த்தும் அடி

1. கொண்ட உன் கடமையை அழிக்காமல்
2. பண்பையும் அன்பையும் இழுக்காமல்
3. நாளும் வாழ்ந்திட நீ விரும்பு

ஈ. செய்யத்தகாத செயல்களாகக் கவிஞர் கூறுவன மூன்று தருக.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

உ. கல்வியால் எவை வளர்ந்தோங்கும்? எவை செழித்தோங்கும்?

..........................................................................................

ஊ. கற்றவர் போல் தினம் நடிக்காமல் என்பதன் பொருள் என்ன?

..........................................................................................

எ. என்றும் விரும்பிச் செயலாற்றினால் நீ எப்பொருள் ஆவாய் எனக் கவிஞர் கூறுகிறார்?

..........................................................................................

..........................................................................................

(புள்ளிகள் 10)

02. தரப்பட்டுள்ள பந்தியைப் படித்தபின்பு கீழேயுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

புலவர் ஒருவர், கொடை வள்ளலாகத் திகழ்ந்த செல்வந்தரைக் காணச் சென்றார். புலவரது கவித்திறனைக் கண்டு செல்வந்தர் பெரிதும் மகிழ்ந்தார். தாம் கொடுக்க விரும்பும் பரிசிலான பணத்தைத் தங்கத்தட்டு ஒன்றில் வைத்து வழங்கினார். புலவரின் உள்ளத்தைத் தங்கத்தட்டு கவர்ந்தது. எனவே, தங்கத் தட்டையும் சேர்த்துப் பெற விரும்பினார். செல்வந்தரைப் பார்த்து, ''பணத்தட்டு யாருக்கு?'' எனக் கேட்டார். அக் கேள்வியில் 'பணத் தட்டு' என்பது 'பணத்தையுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்டு' எனவும் 'பணத்தட்டுப் பாடு' எனவும் இரு பொருள் பட நின்றது. செல்வந்தர் சற்றுத் திகைத்தார். 'பணம் உமக்கு, பணத்தட்டு எனக்கு' என்று சொன்னால், பணம் தட்டுப் பாடு தமக்கு ஏற்பட்டுள்ளதாக அல்லவா? பொருள் ஏற்படும் என்று எண்ணினார். எனவே, 'பணத் தட்டுப்பாடு புலவருக்குத்தான்' எனத் தோன்றும்படி செல்வந்தர், ''பணத்தட்டு புலவருக்குத் தான்'' என்று செல்வந்தர் கூறினார். பணத்துடன், தங்கத் தட்டையும் புலவருக்கு வழங்குவதாக அறிவித்தார். புலவர் மிகவும் மகிழ்ந்தார். புலவரின் பேச்சு சாதுரியத்திற்குக் கிடைத்த பரிசு அது!.

அ. செல்வந்தர் எவ்விதமாகத் திகழ்ந்தார்?
செல்வந்தர் ஏன் மகிழ்ந்தார்?

..........................................................................................

..........................................................................................

ஆ. புலவரின் மனதைக் கவர்ந்தது எது?
புலவர் மனம் எதனை விரும்பியது?

..........................................................................................

இ. ''பணத் தட்டு யாருக்கு?'' என்ற கேள்வியில் உள்ள இருபொருள் எவை எனக் கூறப்பட்டுள்ளது?

..........................................................................................

ஈ. எவ்விதம் கூறினால் 'பணம் தட்டுப்பாடு' தமக்கு ஏற்பட்டுள்ளது எனப் பொருள் தரும் எனச் செல்வந்தர் எண்ணினார்?

..........................................................................................

உ. புலவர் ஏன் மகிழ்ந்தார்? புலவருக்குக் கிடைத்த பரிசு எதனால் கிடைத்த பரிசு எனக் கூறப்பட்டுள்ளது?

..........................................................................................

**(புள்ளிகள் 10)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. கீழே தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைப் பற்றி கட்டுரை எழுதுக.

அ. நான் ஒரு விஞ்ஞானியானால்

ஆ. கிழப்பசுவின் சுயசரிதை

இ. உழவுத்தொழிலின் மேன்மை

ஈ. உண்மை பேசுதல் உயர்வைத் தரும்.

(புள்ளிகள் 10)

04. பாடசாலையில் நடைபெற்று முடிந்த இல்ல விளையாட்டுப் போட்டி பற்றி உமது நண்பன் அல்லது நண்பிக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

(புள்ளிகள் 10)

05. உமது வகுப்பறைப் பாடப்புத்தகத்தை ஆதாரமாகக் கொண்டு வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

அ. குறிஞ்சிப் பூக்கள் எவ்விதமாகக் காட்சியளித்ததாகப் புலவர் வர்ணிக்கிறார்?

.......................................................................................................

ஆ. 'கடலும் கிணறும்' என்ற பாடத்தில் பேருபகாரியான பெரியவர் மீது மற்றையவர்கள் அன்பு கொள்ளக் காரணம் யாது?

.......................................................................................................

இ. இறைவனது அடிக்கு இணையான மலர் எதுவெனக் கூறப்பட்டுள்ளது?

.......................................................................................................

ஈ. 'இலம் என்று அசை இருப்பாரைக் காணின்
நிலம் என்னும் நல்லாள் நகும்' இதன் கருத்தை எழுதுக.

.......................................................................................................

உ. சிலேடை என்பது யாது? இது எவ்விதம் பயன்படுகிறது?

.......................................................................................................

(புள்ளிகள் 10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. கீழே தரப்பட்டுள்ள உவமைத் தொடர்களின் பொருளைத் தெரிந்தெடுத்து எழுதுங்கள்.

| |
|---|
| உரைக்க முடியாத நிலை, மனக்கலக்கம், துன்பத்தில் அபயம், நன்மைக்கு இடையூறு, ஒட்டுறவு இன்றி இருத்தல், |

அ. ஓடும் புளியம் பழமும் போல ..................................

ஆ. சிவபூசையில்கரடி புகுந்தது போல ..................................

இ. கடன்பட்டோர் நெஞ்சம் போல ..................................

ஈ. வாடும் பயிருக்கு வான் மழைபோல ..................................

உ. ஊமை கண்ட கனவுபோல ..................................

(புள்ளிகள் 05)

07. பொருத்தமாக வாக்கியங்கள் அமைப்போம்.

அ. கட்டுச்சோறு : ..................................................................................

..................................................................................

ஆ. பதறியடித்தல் : ..................................................................................

..................................................................................

இ. பேரன்பு : ..................................................................................

..................................................................................

ஈ. பழுத்த மரம் : ..................................................................................

..................................................................................

உ. இயற்கை : ..................................................................................

..................................................................................

(புள்ளிகள் 05)

❖ புள்ளிகள் ____ / 60

❖ புள்ளிகள் ____ / 100



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வகுப்பறை. வீட்டுவேலை மாதிரிப் பரீட்சை

# தமிழ்மொழியும் இலக்கியமும்

## மூன்றாம் தவணை

தரம் : 7 நேரம் : 40 நிமிடங்கள்

புள்ளிகள் 40

## பகுதி - I

01. பொருத்தமற்ற சொல்லின் கீழ் கோடிடுக.

அ. பசு, கோ, எருது, ஆ, கோமாதா

ஆ. மிடி, வறுமை, இன்னல், செல்வம், துன்பம்

இ. நீர், சலம், புனல், மழை, தண்ணீர்

ஈ. தீ, அனல், நெருப்பு, புகை, தழல்

உ. உறக்கம், நித்திரை, விளிப்பு, துயில், தூக்கம்

(புள்ளிகள் 05)

02. தடித்த எழுத்து சொல்லுக்குப் பொருத்தமான விடைகளை எழுதுங்கள்.

அ. துன்பத்துக்கு இன்பம்போல வெற்றிக்கு ..............................

ஆ. மூடு திற என்பது போல உள்ளே ..............................

இ. மேலே ஏறு என்பதுபோல கீழே ..............................

ஈ. சண்டைக்குச் சமாதானம் போல கவலைக்கு ..............................

உ. போனான் வந்தான் என்பதுபோல இருந்தான் ..............................

(புள்ளிகள் 05)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. பின்வரும் குறில், நெடில் சொற்களை வைத்துப் பொருள் புலப்பட வாக்கியம் அமைக்குக.

அ. வடை : ..............................................................................

வாடை : ..............................................................................

ஆ. யுகம் : ..............................................................................

யூகம் : ..............................................................................

இ. நடு : ..............................................................................

நாடு : ..............................................................................

ஈ. படம் : ..............................................................................

பாடம் : ..............................................................................

உ. மெய் : ..............................................................................

மேய் : ..............................................................................

(புள்ளிகள் 10)

04. கீழே தரப்பட்டுள்ள நீதி வாக்கியங்களைப் பூரணப்படுத்துக.

அ. ஆலும் வேலும் ........................ உறுதி.

ஆ. ............................ சிறந்த கோயிலும் இல்லை.

இ. எண்ணும் .......................... கண்ணெனத் தகும்.

ஈ. கோயில் இல்லாத ............................ குடியிருக்க வேண்டாம்.

உ. ......................... இட்டு உண்.

(புள்ளிகள் 05)

05. கீழே தரப்பட்டுள்ள உவமைத் தொடர் களைப் பூர்த்தி செய்க.

அ. ஊமை கண்ட ...................... போல

ஆ. குரங்கின் கைப் ...................... போல

இ. உள்ளங்கை ...................... போல

ஈ. ஆற்றங்கரை ...................... போல

உ. ஆலையில் இட்ட ...................... போல

(புள்ளிகள் 05)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. தரப்பட்டுள்ள வாக்கியங்களில் தடித்த எழுத்துச் சொற்களுக்கான எதிர்ப்பாற் சொற்களை எழுதிப் பூரணப்படுத்துக.

